# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 02 ஞாயிற்றுக்கிழமை (16.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 051


# போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. நிபுணர் குழு விசாரிக்கும்

## ஆணைக்குழுவை மட்டும் சந்தித்துவிட்டுத் திரும்பாது

நியூயோர்க், ஜனவரி16

இலங்கையில் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழு இலங்கையில் போர்க் குற்ற விசாரணையிலும் ஈடுபடும் என்று தெரிகிறது.

நிபுணர் குழு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்பாகச் சாட்சியம் அளிப்பது மட்டுமல்லாது அதற்கு அப்பாலும் சென்று செயற்படுவர் என்று ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (31ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி யாழ்.வருகிறார் இன்று



யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ்ப்பாணத்துக்கான இரண்டு நாள் விஜயத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று ஆரம்பிக்கவிருக்கின்றார்.

பிரிட்டிஷ் அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தை இன்று பிற்பகல் ஜனாதிபதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கவிருக்கின்றார்.

நாளை காலை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் சூரியப் பொங்கல் நிகழ்வில் (31ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் பேரவலம் தொடரும் வேளையில் குடாநாட்டில் பொங்கல் விழா தேவையா?

### இடர் நிலையைப் பார்வையிடாத மஹிந்தவையும் சாடுகிறார் சிவாஜிலிங்கம்

கொழும்பு,ஜன.16

கிழக்கில் எமது உறவுகள் வெள்ளத்தில் சிக்கி அல்லலுறும் போது யாழ்ப்பாணத்தில் பொங்கல் விழா தேவைதானா? அந்த விழாவை ரத்துச் செய்து அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை அல்லற்படும் கிழக்கு மக்களுக்கு வழங்கவேண்டும்.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் எம். கே.சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நாளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சூரியப்பொங்கல் நிகழ்வு தொடர்பாக அவர் கருத்துக் கூறுகையில் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் அரச ஊழியர்கள் ஒரு நாள் சம்பளத்தை வழங்கி உடன் அவசர உதவிகளை அனுப்பியுள்ளனர். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்பினர் உதவிகளை அனுப்புகிறார்கள். வெளிநாட்டு உதவிகள் வந்துகுவிக்கின்றன. (31ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ள நிலைமை தணிந்து வருவதால்

## இயல்புவாழ்வுக்கு மெல்ல மெல்ல திரும்பும் மட்டு. மாவட்ட மக்கள்

மட்டக்களப்பு,ஜன.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ள நிலைமை நேற்று தணிந்து இயல்பு வாழ்வு ஓரளவுக்கு திரும்பி இருந்தது.

வெள்ளம் காரணமாக வீட்டு வளவுகளுக்குள், கிணறுகளுக்குள் புகுந்த அசுத்தங்களை துப்புரவு செய்யும் பணியில் நேற்று மக்கள் ஈடுபட்டனர்.

மழை பெய்யாவிட்டாலும் மேகமூட்டம் காணப்பட்டதால் மக்களின் அன்றாடப் பணிகளில் மந்த நிலை காணப்பட்டது.

அழிவடைந்த, சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்கள் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள், உறவினர்கள் (31ஆம் பக்கம் பார்க்க)

## காட்டுத்தீயாகப் பரவிய வதந்தி அம்பாறை மாவட்ட மக்கள் பீதி

### இரவிரவாக இடம்பெயர்ந்து அல்லோல கல்லோலம்

அம்பாறை, ஜன.16

கடற்கோள் பேரிடர் ஏற்படப்போகின்றதெனவும் நில நடுக்கம் ஏற்படும் எனவும் பரப்பப்பட்ட வதந்தியால் அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் நேற்று சனிக்கிழமை மக்கள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர்.

குறிப்பாக சாய்ந்தமருது மருதமுனை மாளிகைக்காடு, நிந்தவூர் போன்ற பிரதேசங்களில் இந்த வதந்தி காட்டுத் தீ போல் பரவியதை அடுத்து மக்கள் பெரும் பீதி அடைந்ததுடன் கடலை அண்மித்த பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இரவோடிவாக (31ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்டத்துக்கு நேற்று அமைச்சர் பஸில் விஜயம் வீடுகளைப் புனரமைக்க ரூ. 45 மில்லியன் ஒதுக்கீடு

மட்டக்களப்பு, ஜன.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளை புனரமைக்க உடனடியாக 45 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இத்தகவலை வெளியிட்டார்.

மட்டக்களப்பு வெள்ளப் பாதிப்புக் குறித்து நேரில் அறிவதற்காக பஸில் ராஜபக்ஷ நேற்று வருகை தந்தபோதே இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த் சகிதம் நேற்று வந்த பஸில் ராஜபக்ஷ இந்தியா அன்பளிப்புச் செய்த அவசர உதவிப் பொருள்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கினார்.

உயர்மட்டமாநாடு ஒன்றை அமைச்சர் மட்டக்களப்பு செயலகத்தில் நடத்தினார்.

இந்த மாநாட்டில் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், பிரதி அமைச்சர்களான விநாயகமூர்த்தி முரளிதரன், (31ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளின் நேற்றைய பேச்சு ரத்து; பிரிந்து போட்டியிடுவது தமிழருக்கு நல்லதல்ல

### மாவை கிழக்கே; சங்கரி அறிக்கை வெளியிட்டு இந்தியாவுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.16

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஓரணியாகவும் ஏனைய தமிழ்க்கட்சிகள் இன்னொரு அணியாகவும் போட்டியிடுவது நல்லதல்ல. இதனை உணர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரைந்து தமது முடிவைத் தெரிவிக்கவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்.(பத்மநாபா), தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு ஆகியனவும் ஓரணியில் போட்டியிடுவது தொடர்பாக நேற்று இடம்பெறவிருந்த ஐந்தாம் கட்டப் பேச்சு இறுதி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டது. மாவை சேனாதிராசா வெள்ள நிலைமையை அறிய கிழக்குக்குச் சென்றதால் அந்தப் பேச்சுக்கள் இடம்பெறவில்லை. (31ஆம் பக்கம் பார்க்க)

## ஊரிக்காடு கடற்கரையில் ஒதுங்கிய ஆண் சடலம்

வல்வெட்டித்துறை,ஜன.15

வல்வெட்டித்துறை ஊரிக்காடு இராணுவ முகாமுக்கு பின்புறமாக - கடற்கரையில் நேற்று மாலை ஆண் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.

சுமார் 45 வயது மதிக்கத்தக்க காக்கி நிற அரைக்காற்சட்டையுடன் காணப்படும் சடலத்தின் இடது கையில் 'கே. குப்புசாமி' என்று பச்சை குத்தப்பட்டுள்ளது.

5 அடி 4 அங்குலம் உயரம் கொண்ட இந்தச் சடலத்தின் வலது கால் தொடையில் நட்சத்திர அடையாளமும் காணப்படுகிறது என்றும் தலைப்பகுதி மோசமாக அழுகி சிதைந்துள்ளது என்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சடலம் இந்திய மீனவர் ஒருவருடையதாக இருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

(ஔ-319)


சபரிமலை யாத்திரிகர்களே!

சபரிமலை செல்ல இருக்கும் யாத்திரிகர்களே மிகவும் குறைந்த கட்டணங்களில் விமானப் பயணச் சீட்டை பெற்றுக்கொள்ளலாம்.



தொடர்புகளுக்கு:
METRO TRAVELS & Tours (pvt) Ltd.,
No. 62/33, Stanly link Road,Jaffna.
Tel.: 0215673555, 0215673666
Fax: 0212220404

இன்னும் ஐந்து நாட்கள்

JAFFNA International 2011 TRADE FAIR 2nd Edition

ஜனவரி 21, 22, 23 திகதிகளில்
சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

Study & Work In Uk
Dont Miss It
Last Opperunite
Payment After Visa
Admission From 'A' Rated College
Entry Qualification G.C.E (O/L)
Lower Cost
Easy Payment Scheme
Free Sponsor Advice
100% Granteed Visa
For More Details
Educare International (pvt) Ltd.
No, 422/3, Galle Road Colombo-03
Contact- Jaffna
Risi:- 077-1318544
Colombo
Senthuran:- 0777-359691
Email:- risi@email.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்: 021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222




# தமிழ்க் கைதிகளின் பொங்கலுக்கு அநுராதபுரம் சிறை அதிகாரி தடை

யாழ்ப்பாணம், ஜன 16

அநுராதபுர சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுத் தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த விசேட வழிபாட்டிற்கு அங்கு புதிதாக வந்துள்ள சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தடை விதித்ததை அடுத்து அந்தக் கைதிகள் நேற்று பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் பொங்கல் நிகழ்வு தடை செய்யப்பட்டது குறித்துச் சிறைச்சாலை ஆணையாளருக்கும் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

வழமையாக ஒவ்வொரு வருடமும் சிறைச்சாலை விடுதி வளாகத்தில் பொங்கல் விழாவைக் கொண்டாடுவதாகவும் இம்முறை மட்டுமே இதற்குத் தடை விதிக்கப்பட்டதாகவும் கைதிகள் தெரிவித்தனர்.

குறித்த கைதிகள் இந்த வழிபாட்டிற்காக முன்கூட்டியே சிறைச்சாலைகள் ஆணையாளரிடம் இருந்து அனுமதியைப் பெற்றிருந்ததாகவும், ஆனால் சிறைச்சாலைக்கு புதிதாக வந்துள்ள அதிகாரி ஒருவர் இந்த வழிபாட்டிற்கு அனுமதி வழங்க முடியாது எனக்கூறி தடை விதித்ததாகவும் கூறப்பட்டது.

**சிறைச்சாலைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் அனுமதி வழங்கிய போதும் அநுராதபுரம் சிறைச்சாலையின் சிரேஷ்ட அத்தியட்சகர், தமிழ் அரசியல் கைதிகள் பொங்கல் விழாவை நடத்துவதற்கு அனுமதிக்கவில்லை. அதேநேரம் சிங்களக் கைதிகள் பொங்கி உண்டனர்.**

நேற்றைய தினம் அதிகாரிகள் கைதிகளின் அறைகளைத் திறக்காது பூட்டி வைத்துள்ளதுடன் உறவினர்கள் பார்வையிடவும் தடைவிதித்துள்ளனர்.

இதேவேளை அங்குள்ள சிங்களக் கைதிகள் நேற்றுக் காலை 11 மணியளவில் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாகப் பொங்கல் பொங்கியதாகவும், சிறையில் பொங்கல் இடம்பெற்றது என்பதைக் காட்டவே இது ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

குறித்த இந்த சிறைச்சாலையில் 7.5 அடி நீளமும் 7 அடி அகலமும் கொண்ட 10 அறைகள் உள்ளன. இந்த 10 அறைகளிலும் 60 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பொங்கலை விமரிசையாகக் கொண்டாடுவதற்கு எதிர்பார்த்திருந்த தமிழ்க் கைதிகள் அதிகாரியின் நடத்தையினால் பெரும் மன வருத்தத்திற்கும் உளைச்சலுக்கும் உள்ளானார்கள். (த)

# முன்னாள் போராளிகள் 78 பேர் நேற்று யாழ். நகரில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன 16

அரசினால் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகள் 78 பேர் நேற்றுமுன்தினம் யாழ். நகரில் வைத்து அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். நகரில் நடைபெற்ற பொங்கல் விழாவில் வைத்து இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் 48 பெண்களும் 30 ஆண்களும் அடங்கி இருந்தனர். பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் அவர்கள் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்டனர்.

காலை 8.30 மணியளவில் பொங்கல் விழா இடம்பெற்ற பின்னர் யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் இவர்களின் விடுதலை இடம்பெற்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நடனத் தாரகைகளின் நடனமும் முன்னாள் போராளிகளின் நடன நிகழ்வும் இடம்பெற்றன.



நிம்மதி: விடுவிக்கப்பட்ட போராளி ஒருவர் தனது குழந்தை மற்றும் குடும்பத்தினருடன் உரையாடி மகிழ்கிறார்.

நிகழ்வில் பேசிய சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வுப் பயிற்சிகள் மட்டும் வழங்கப்படாமல் அவர்கள் சமூகத்தில் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கான பொருளாதார வசதிகளையும் தமது அமைச்சு வழங்குவதாகக் குறிப்பிட்டார்.

''நாட்டை அபிவிருத்தி செய்கின்ற போது அதற்கு மனித வள அபிவிருத்தி முக்கியமான விடயம். மனித வளத்தினைக் கொண்டு ஒரு நாட்டினை அபிவிருத்தி செய்யவும் முடியும்; அழிக்கவும் முடியும்'' - என்றார்.

முன்னாள் போராளிகளுக்குத் தாம் வழங்கிய புனர்வாழ்வு நடவடிக்கைகள் மனித உரிமைகள் பற்றி அதிகம் பேசும் மேற்கு நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணம் என்றும் அவர் கூறினார். (உ-15)

# கொழும்பில் வர்த்தகர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜன. 16

கொழும்பில் வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் நேற்று பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டார்.

• முன்னாள் பாதாள உலக நபரின் சகோதரரான கீர்த்திசிறி ராஜபக்ஷ என்பவரே கொல்லப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மிகுந்து மாவத்தை என்ற இடத்தில் உள்ள நகரப் போக்குவரத்துப் பொலிஸின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மையா என அழைக்கப்பட்ட முன்னாள் பாதாள உலகக் குழு உறுப்பினரின் சகோதரரே கொல்லப்பட்டவராவார். மையா கடந்த ஆண்டு அடையாளம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். (உ)

# அம்பாந்தோட்டையில் ஆடைத் தொழிற்சாலை

பிரான்ஸ் நாட்டின் எஸ்.பி.எவ். தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் அம்பாந்தோட்டைப் பகுதியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நன்மை கருதி ஆடைத் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

# மூழ்கியது தம்பனை கிராமம்

மன்னார்.ஜன 16

கிழக்கு பகுதிகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மழை நீர் தேங்கி நின்று பின் அருவியாற்றினூடாக மன்னார் மாவட்டத்தில் உள்ள தாழ்வான பகுதிகளில் வந்து தேங்குவதினால் மன்னார் - மதவாச்சி பிரதான வீதியின் மடு உதவி அரச அதிபர் பிரிவுக்குற்பட்ட தம்பனைக்குளம் கிராமம் மழை நீரினால் மூழ்கியுள்ளது.

இதன் காரணமாக குறித்த கிராமத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கின் காரணமாக அங்குள்ள 531 குடும்பங்களைச் சேர்ந்த 1300 பேர்வரை பாதிப்படைந்துள்ள நிலையில் குறித்த கிராம மக்கள் கட்டையடம்பன் ம.வி. பாடாசாலையிலும், பொதுக் கட்டடங்களிலும், தேவாலயங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உணவுகளை இராணுவத்தினர் சமைத்து வழங்குகின்றனர். (த)

# நிகழ்வுகள் இன்று

**பொங்கல் விழா**

அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டப நிர்வாகத்தின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. சமூக சேவையாளர் ப.தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அகில இலங்கை கலை இலக்கிய சங்கத் தலைவர் பண்டிதர் பொன். சுகந்தன் கலந்து கொள்வார். (ற-319)

**பழைய மாணவர் சங்கக் கூட்டம்**

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர் வே.சிவசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்குப் பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் வருகை தருமாறு அதிபர் கேட்டுள்ளார். (ற-311)

**ஆன்மீக நிகழ்வு**

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் வாராந்த ஆன்மீக நிகழ்வுகள் தொடரில் சனாதன தர்மம் - 5 என்னும் தலைப்பில் ரி.சண்முகநாதன் சொற் பொழிவு ஆற்றவுள்ளார் என்று மடாதிபதி வை.ஆனந்தராசா தெரிவித்துள்ளார்.

**பட்டிப் பொங்கல்**

யாழ். நகர் சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் முற்பகல் 9.30 மணிக்கு பட்டிப் பொங்கல், கோமாதா உற்சவம் இடம்பெறவுள்ளன. பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையத்தின் உபதலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினர்களாக ஜனாதிபதி செயலகத்தின் இந்துசமய விவகார இணைப்பாளர் பிரம்மஸ்ரீ இரா மச் சந்திரக் குருக்கள் பாபுசர்மாவும் கலந்து கொள்ள வுள்ளனர். (ற-313, 9)

**கலாசாரப் பெருவிழா**

நவாலி ஸ்ரீநாக ராஜராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவிலில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் கலாசாரப் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளன.

நவாலி தெற்கு கிராம அலுவலர் கு.எழிற்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் பிரதம விருந் தினராக யாழ். மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலனும், கௌரவ விருந்தினராக காரை. எம்.பி.அருளானந்தனும் சைவப்புலவர் க.நித்தியதசிதரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இன்றைய தினம் காலை 9 மணிக்கு பொங்கல் வழிபாட்டு நிகழ்வும் பிற்பகல் ஒரு மணிக்கு தமிழரின் பாரம்பரிய வீர விளையாட்டு நிகழ்வும் இடம்பெறும். (ற-253,302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் கட்ட இந்திய உதவிகள் நாளை வரும்




நேற்றுமுன்தினம் கட்டுநாயக்காவை வந்தடைந்த இந்திய உதவிப் பொருள்களை இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் கையளிக்கிறார்.

கொழும்பு,ஜன 16

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இந்திய அரசின் இரண்டாம் கட்ட நிவாரணத் தொகுதி இன்று இலங்கையை வந்தடையவுள்ளது.

இந்தியத் தூதரகத்தின் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நேற்றுமுன்தினம் 25 தொன் நிவாரணப் பொருள்கள் இலங்கையை வந்தடைந்தன. இந்த நிலையில் மேலும் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனி, உப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் இதனுடன் அனுப்பி வைக்கப் படவுள்ளன.

இதற்கிடையில் நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்த இந்திய அரசின் நிவாரணப் பொருள்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று இந்த பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தப் பொருள்களை நேரடியாக மக்களுக்கு வழங்கினார்.

இதேவேளை இலங்கையில் பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்காக மேலும் உதவிகளை வழங்க இந்திய அரசு தயாராக இருப்பதாக, இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவித்தார். (த)

## 13 ஆவது திருத்தம் தாண்டித் தீர்வு; பொலிஸ் அதிகாரத்திற்கு இடமில்லை

கொழும்பு,ஜன 16

அரசியல் தீர்வானது 13 ஆவது திருத்தத்திற்கு அதிகமான அதிகாரங்களுடன் அமையும். ஆனாலும், மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது. அரசியல் கட்சிகள் முன்வைக்கின்ற யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு அனைத்துக் கட்சிகளுடனான இணக்கப்பாட்டின் அடிப்படையில் அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுக்கான கால எல்லையினை கூறமுடியாது. மாகாண அரசுகளுடன் அதிகாரங்களை பகிர்ந்து கொள்கின்ற சாத்தியக்கூறுகள் அதிகமாகவே காணப் படுகின்றன. ஆனால் பொலிஸ் அதிகாரங்கள் எவ்வகையிலும், பகிர்ந்தளிக்கப்பட மாட்டாது. பொலிஸ் அதிகாரங்கள், மாகாண சபைகளுக்கு வழங்கப்பட மாட்டாது என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பினரிடம் நான் தெரிவித்துள்ளேன். அவர்கள் யதார்த்தத்தை உணர்ந்தவர்களாக அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் வெளிநாட்டு ஊடகங்களின் செய்தியாளர்களை சந்தித்த ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர் கூறியதாவது:-

மேற்குலக நாடுகளுடனான உறவு தொடர்ந்தும் வலுவாகவே உள்ளது. சில நாடுகளில் இலங்கை தொடர்பான சாதகமான போக்குக்கள் முன்னேற்றம் கண்டு வருகின்றன. குடிவரவு தொடர்பான கனடாவின் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப் பட்டுள்ள கொள்கைகள், மற்றும் சுவிர்சர்லாந்து, ஜேர்மனி, போன்ற நாடுகளில் விடுதலை புலிகள் இயக்க உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டமை வரவேற்கத்தக்கதாகும் என்றார். (த)

## கடற்படையின் புதிய தளபதி பதவியேற்றார்

கொழும்பு, ஜன. 16

இலங்கைக் கடற்படையின் புதிய தளபதியாக ரியர் அட்மிரல் சோமதிலக திஸாநாயக்க நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார். உத்தியோகபூர்வ நிகழ்வில் அவரது குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

பதவியேற்ற பின்னர் பேசிய அவர், இந்திய மீனவர் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதற்கான ஆதாரத்தை முன்வைக்குமாறு கேட்டா[illegible] செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இப்படிக் கூறினார். (உ)



புதிய தளபதிக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் பதவி விலகும் தளபதி.



# சந்தியடிச் சோமு

## கலாசாரக் கூத்துகள்

மழை வரும்போல கிடந்ததால குடையையும் எடுத்துக் கொண்டு வெளிக்கிட்டன். அந்த நேரம் பாத்துப் பேத்தி கேட்டாள், 'எங்க இந்த விடியக் காத்தால வெளிக்கிட்டுப் போறியள்' என்டு...

எனக்குப் பொத்திக் கொண்டு கோபம்தான் வந்திச்சு. வெளிக்கிடேக்க யாரும் இப்பிடிக் பின்னால கேக்கிறதோ..? என்டாலும் பேத்தியப் பேச ஏலுமே..? ''உந்த சென்ரல் கொலிச்சுக்குத்தான்...'' எண்டபடி நடையக் கட்டினன். சைக்கிள மிதிச்சு ரோட்டுக்கு வந்தா அது பிச்சக்காரின்ர சீலை மாதிரி கிளிஞ்ச இடம் எது கிளியாத இடம் எது எண்டு கண்பிடிக்க ஏலாத அளவுக்குச் 'சீரா' கிடந்தது. மெல்லச் சைக்கிளப் பாத்துப் பாத்து மிதிச்சன்.

ஒரே வெடிச் சத்தமாய் கிடந்தது. இளசுகள் வெடிக் கொளுத்தி றோட்டில போட்டுதுகள். ''வெடிவால் முளைச்ச குரங்குகள்'' எண்டு திட்டிக் கொண்டே சென்ரல் கொலிச்சுக்கு வந்து சேந்திட்டன்.

கொஞ்சமெண்டாலும் மனசாட்சி வேணுமல்லோ பாருங்கோ. மட்டக்களப்பில சனம் பட்டினியால சாகுது. இஞ்ச என்னெண்டா வெடியக் கொளுத்தி வேட்டிக்கையல்லோ காட்டுறாங்கள்! அங்க குளிரால செத்து செத்து மடியிறதுகளுக்காண்டி கொஞ்சமாவது உதவி செய்யலாம்தானே.

'சோமண்ணை', கேட்ட குரல் மாதிரி இருக்கெண்டு திரும்பினா எங்கட பேப்பர் பொடியன். கண்டதுமே பொங்கல் வாழ்த்தென்றான். நானும் ஒப்புக்கு வாழ்த்தினன். அவனும் சென்ரல் கொலிச்சுக்கு உள்ள தான் போறனெண்டான். அப்ப அவனோட சேர்ந்து நானும் ஊர்க் கதையளக் கதைச்சுக் கொண்டு போனன். கொலிச் கிறவுண்டில பெரிய மேடை போட்டிருந்தாங்கள். நான் அங்கையாக்கும் என்டு நினைச்சுக் கொண்டுபோக வெளிக்கிட, பேப்பர் பெடியன் உங்கயில்ல இஞ்ச மண்டபத்தில எண்டான்.

அங்க போனா வாசல்ல தெய்வீக மணம். உள்ளுக்க எங்கட பாரம்பரிய அதுவும் நான் வைச்சிருந்த மாட்டு வண்டியும் விட்டிருந்தாங்கள். எனக்குப் புல்லரிச்சுப் போச்சுது. எங்கட ஆக்களே மறந்த உந்த வண்டில சிங்கள மினிஸ்ரர்மாரின்ர புரோக்கிறாமில வச்சிருக்கிறாங்களே...

சொன்ன மாதிரி நேரத்துக்கு மினிஸ்ரர்மார் வெள்ளையும் சொள்ளையுமா வந்திறங்கிச்சினம். சனத்தின்ர வேலை பாக்கிறதிலயும் உந்த நேரந் தவறாமையக் கடைப்பிடிச்சா நல்லாத்தான் இருக்கும் எண்டு நினைச்சுக் கொண்டு சுத்திமுத்தும் பாத்தன். மேடையில பெரிய பொங்கல் பானையை வச்சுப் பொங்கிக் கொண்டிருந்தாங்கள். பக்கத்தில பிள்ளையார் பிடிக்கிறதுக்குப் பதிலா பிள்ளையாரையே வைச்சிருந்தாங்கள்.

பாலும் பொங்கிவர மினிஸ்ரர்மார் ஒவ்வொருத்தரும் கியூவில நிண்டு அரிசி போட்டிச்சினம். அவையோட கூட்டமைப்பு எம்.பி. மூர்த்தியரும் நிண்டார். அரச எதிர்க்கிறதில்ல எண்டு கூட்டமைப்பு முடிவெடுத்த நாள் முதலா அரச நிகழ்ச்சிகள் எல்லாத்திலயும் அவற்ர தலையத் தவறாமப் பாக்க முடியுது இப்ப.

இந்தக் கூத்து முடிய மண்டபத்துக்குள்ள கூட்டிக் கொண்டு போனாங்கள். மண்டபம் முழுக்க சனம் நிறைஞ்சு கிடந்துது. தங்கட பிள்ளையள கூட்டிக் கொண்டு போறத்துக்காண்டி அதுகளும் விடியக் காத்தால தொடக்கம் நிக்குதுகள். நான் மெல்லப் பேச்சுக் குடுத்தன். அந்தச் சோகக் கதையள இப்ப சொல்லேலாது. பிறகொருநாள் பாப்பம்.

முதல்ல வரவேற்பு நடனமெண்டாங்கள். எங்கட தைப்பொங்கல் கலாசார விழாவில கலாசார ''டான்சும்'' தேவைதானே... ஆடட்டும் எண்டு போட்டுப் பாத்துக் கொண்டிருந்தா... ஆட வந்ததுகளப் பாத்து எனக்குத் தேள் கொட்டின மாதிரிக் கிடந்தது. உந்தக் கிளிஞ்சுபோன உடுப்போட சிங்களப் பொட்டையள் ''ஆடிக் குதிச்சு'' எங்கட தைப்பொங்கல் கலாசாரத்தைக் கொண்டாடினதப் பாக்கேக்க..... என்னத்த நான் சொல்ல... இப்ப எல்லாம் கலக்கிறதுதானே ஸ்டைல். தியட்டர்காரரும் நல்லாப் பாத்துக் கொண்டிருந்தார். பாத்துக் கொண்டிருங்கோ உங்களுக்கு அவர் எல்லாம் வாங்கித் தருவார்...

இதெல்லாம் பரவாயில்லை எண்டு சொல்லுமாப் போல நடந்தது தான் அடுத்தது. எங்கட முன்னாள் போராளிமார் – அதிண்ட அர்த்தமே வேற – புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விட்டவையின்ர டான்சும் நடந்தது. சிவ... சிவா... இது எல்லாத்தையும் பாக்க என்னையேன் உயிரோடை வச்சிருக்கிறாய்.

எங்கட தமிழ் பெட்டையள் அதுவும் முன்னாள் போராளிப் பெட்டையொண்டு வந்து சிங்களப் பாட்டுப் பாடுது. அதுக்கு முன்னாலயிருந்து புனர்வாழ்வு ஆணையாளர் ரணசிங்கு தைதட்டிக் கொண்டிருக்கிறார். அவர் கை தட்டுவார் தானே. நல்லா ட்ரெயின் பண்ணியிருக்கினம் எண்டது மட்டும் தெரிஞ்சுது. அதுகள் பாவம் என்ன செய்யிறது. அதிகாரத்தில இருக்கிறவன் யாரோ அவன் சொன்னதச் செய்யத்தானே நாங்களும் பழக்கி வைச்சனாங்கள்.

இருந்தாலும் தமிழனுக்காகப் போராடினம் எண்டதுக்காக ஆவது நன்றியுரை எண்டாலும் தமிழில சொல்லியிருக்கலாம்.... அதிலயும் முதலுரிமை சிங்களத்துக்குத்தான். பாரம்பரியம் பண்பாடு... எல்லாம் இனி ஒருத்தரும் கேக்கக்கூடாது. அது சரி! பாரம்பரியத்த நிறுத்துப் போட்டு விக்கிறத்துக்குத்தானே எங்களுக்கு ஒரு அமைச்சே தந்திருக்கினம். நாங்கள் விப்பம்... நீங்களும் சேந்து வாங்கோ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்புமனு ஏற்கும் திகதியைப் பிற்போட ஆராய்வு

கொழும்பு, ஜன.15

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் திகதியைப் பிற்போடுவது குறித்து ஆராயப்படும் என பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினிடம் தெரிவித்துள்ளார்.

இருந்தும், இக்கோரிக்கையை எழுத்துமூலம் சமர்ப்பிக்கும்படி அவர் கூறினார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்றுமுன்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரியவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் அவரது செயலகத்தில் சந்தித்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இது குறித்து எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. 'உதயனு'க்கு மேலும் கூறியவை வருமாறு:-

பிரதித் தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்து மூன்று கோரிக்கைகளை முன்வைத்தோம்.

1. உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை மார்ச் மாதம் நடத்தத் திட்டமிட்டுள்ள நிலையில், கிழக்கில் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் இறுதித் திகதியைக் குறைந்தது ஒரு கிழமையேனும் பிற்போடுக.

2.யாழ்.குடாநாட்டில் தேர்தலுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் முழுமையடையவில்லை. வாக்காளர் பட்டியலில் சுமார் மூன்று இலட்சம் பேர் இன்னும் பதியப்படவில்லை. இந்நிலையில் வாக்காளர் பதிவுக்கான விண்ணப்பங்கள் அனுப்பும் திகதி இம் மாதம் 31ஆம் திகதி முடிவடைகீறது. எனவே அத் திகதியை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்குக.

3.சம்பூரிலுள்ள மக்கள் பதிவு செய்யப்படும்போது, அவர்களது சொந்த விலாசத்தைப் பதிவு செய்யாது அவர்கள் இடம்பெயர்ந்து வாழும் இடங்களின் விலாசமும் பதிவு செய்யப்பட வேண்டும் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். சம்பூர் உயர் பாதுகாப்பு வலயம் என்பதால் அதிகாரிகள் அதனை நிராகரித்துள்ளார்கள். இந்நிலையில் அவர்களது பிரச்சினைகள் தொடர்பாகக் கவனத்தைத் திருப்புக.

ஆகிய மூன்று கோரிக்கைகளையும் விடுத்தோம். அதற்குப் பிரதி தேர்தல்கள் ஆணையாளர் அந்தக் கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்கின்றார் எனவும் இந்தக் கோரிக்கைகளை எழுத்துமூலமாக விடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். என்று சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (சி)

# மக்களின் வாக்குரிமை பறிக்கப்படுகிறது

கொழும்பு ஜன. 16

கொழும்பு கோட்டே மற்றும் தெஹிவளை மாநகரசபைகள் அதிகார சபைகளாக மாற்றப்படுவ தால் 5 லட்சத்து 80 ஆயிரம் மக்களின் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன என்று ஐ.தே.க குற்றஞ்சாட்டியுள்ளது.

எதிர்க்கட்டசித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை பின்வருமாறு:

உள்ளூராட்சிச்சபைத்தேர்தலை அனைத்து சபைகளுக்கும் ஒன்றாக நடத்த அரசு அஞ்சுகின்றது. மாநகர சபைகளின் ஆட்சியை மேலும் ஒரு வருடத்தால் நீடித்து ஏனைய பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகளுக்கு மாத்திரம் தேர்தலை நடத்துகின்றது. மாநகர சபைகளை வெற்றிகொள்ள முடியாமையே இதற்குக் காரணம்.

அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்தலை ஒன்றாக நடத்தினால் எமது சக்தி என்னவென்பதை நாம் காட்டுவோம். எமது கட்சிக்குத் தோடர்ந்தும் ஆதரவு அதிகரிக்கின்றது.

இதேபோல் கொழும்பு தெஹிவளை மற்றும் கோட்டே மாநகர சபைகளை அதிகார சபைகளாக மாற்றும் அரசின் நடவடிக்கைகள் தொடர்கின்றன. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன என்று நாம் அறி கின்றோம்.

அரசின் அந்தச் செயற்பாட்டின் மூலம் 5 லட்சத்து 80 ஆயிரம் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது. இச்சபைகளில் தம்மால் தேர்தல்கள் மூலம் வெற்றிபெற முடியாது என்பதால் அரசு இவ்வாறான வாக்குரிமை மீறல் செயற்பாட்டில் ஈடுபடுகின்றது. இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## தளபதி ஹத்துருசிங்க தலைமையில் ஆனையிறவில் நேற்று பொங்கல் விழா

### 8 ஆயிரம் பேருக்கு பாற்சோறு பரிமாறல்

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ். படைகளின் தலைமையகத்தின் ஏற்பாட்டில் ஆனையிறவு முகாமில் பெரும் எடுப்பில் பொங்கல் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

பெரிய அளவில் பாற்சோறு தயாரிக்கப்பட்டு நேற்றைய விழா நேற்று கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியே சென்றோர், உள் நுழைந்தோர் என 8 ஆயிரம் பேருக்கு பாற்சோறு வழங்கப்பட்டது.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அங்கு பொது மக்களுக்கு பாற்சோறு வழங்கினார். மழையையும் பொருட்படுத்தாது மக்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

அந்தப் பகுதியில் உள்ள இந்து மக்களின் மூன்று வீடுகளில் விளக்கேற்றிப் பொங்கல் பொங்கி மக்களுக்கு வழங்கப்பட்டது என்று பலாலி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஆனையிறவுப் பொங்கல் விழா நிகழ்வில் படையினர் மட்டுமன்றி தென்னிலங்கை உல்லாசப் பயணிகளும் வெகு ஆர்வத்துடன் பங்கேற்றனர்.


## நிலம் கட்டடம் தேவை

நவலோகா ஆஸ்பத்திரி பிறைவேற் லிமிட்டட்
NAWALOKA HOSPITAL PLC

தனியார் ஆஸ்பத்திரிக்கு காணி /கட்டடம் 20 - 50 கட்டில் போடவும் 25 வாகன தரிப்பிட வசதியும் /காணி 60 பேச்சிலும் கட்டடம் 15000 சதுர அடி விஸ்தரிப்புள்ளதாகவும் ஆஸ்பத்திரி பட்டினத்துக்கு மத்தியில் அமைந்ததாகவும் இருக்கவேண்டும் வவுனியா / கிளிநொச்சி / யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தேவை.

தொடர்பு கொள்ளவும் : கருணரத்தின
0773633100 அல்லது
உப்பதிச
0777353333

## மரண அறிவித்தல்



**கருணாகரன் தெய்வேந்திரன்**

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கருணாகரன் தெய்வேந்திரன் 14.01.2011 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கருணாகரன் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான தாட்சாயணி- நாகராசா தம்பதியரின் அன்பு மருமகனும் அமிர்தகௌரியின் அன்புக் கணவரும் கஜனின் அன்புத் தந்தையாரும் சேதுபதி கலாகரன், ஞானசோதி, உமாபதி, கமலவதி, ஜெகசோதி, சீதாலக்சுமி, ரகுபதி ஆகியோரின் அன்பு மைத் துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 14.01.2011 அவரின் இல்லத்தில் நடைபெற்றுக் கொக்குவில் இந்து மைதானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பொற்பதி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
0214922080, 0777162673
தகவல் குடும்பத்தினர்

## அவசரமாக சிறுநீரகம் தேவை

இரண்டு சிறுநீரகங்களும் (Kidneys) பாதிக்கப்பட்ட மிக மோசமான நிலையில் உள்ள நோயாளி ஒருவருக்கு "A"Positive அல்லது O" Positive வகைச் சிறுநீரகம் (Kidney) ஒன்று உடனடியாகத் தேவைப்படுகின்றது. அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் பின்வரும் தொலைபேசிகள் ஊடாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உதவுவோருக்கு போதிய சன்மானம் வழங்கவும் தயாராக உள்ளோம்.

**தொலைபேசி இலக்கங்கள் : 0775440293, 0728509154**

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg க்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 19.01.2011 ஆம் திகதி விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ ஜென்சி பாம், 1ஆம்கட்டை, பருத்தித்துறை.
T.P No 021 222 2867, 0776090926

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்யாதது (1kg 450/=) கல்பேட் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன்,நல்லூர்.
021 222 6944

## ஸ்ரீம் பொயிலர் விற்பனைக்கு உண்டு

அரிசி ஆலைப்
பாவனைக்குரிய
**ஸ்ரீம் பொயிலர்**
தரமான நிலையில் சகல
உபகரணங்களுடனும்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0776691263

## வாடகைக்கு

மானிப்பாய், சுதுமலை வீதியில் அம்மன் கோயில் அருகில் புதிய வீடு சகல வசதிகளுடன் வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு: 0772719661, 0718431908

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978 இல் பிறந்த 5" 11" உயரம் கனடா PR உள்ள பொறியலாளர் (Php) கேட்டை நட்சத்திரமும் மொத்த கிரகபாவம் 36 1/4 உம் (7 இல் செவ்.பாவம் 8) மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். தொடர்பு: 0776704216, 0777456854

## ஏழாம் வருட நீங்கா நினைவுகள்



தரணியில் மலர்வு 28 . 10 . 1924



விண்ணில் வாழ்வு 16 . 01 . 2004

அமரர்
**லில்லி கிறேஸ் தேவசகாயம்**

வானத்து நிலவாய் நீயிருந்து
வண்ண ஒளியை வீசிடுவாய்
உன் வண்ண ஒளியின் துணையுடனே
வளமாய் இங்கு நாம் வாழ்வோம்

இல28,றக்கா லேன்,
சுண்டிக்குளி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## யாழ்.வர்த்தகர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

2011 மாசி மாதம் வெளிவர இருக்கும் JAFFNA BUSINESS PAGES என்ற எமது விளம்பர சஞ்சிகையில் உங்கள் ஸ்தாபனத்தின் விளம்பரங்களும் இடம் பெறவேண்டுமானால், தைமாதம் 20 ஆம் திகதிக்கு முன்பாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர அளவுகள் : 28cm x 20cm , 14 cmx20cm
1 $cm^2$ கட்டணம் 18/ மட்டுமே.
TRADING PAGES ,
No 06/1 Nadutheru Lane, Ariyalai,
Contact - Mr .Ravi .
0717937629 ,
0726996019

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரிலுள்ள தொழில் ஸ்தாபனமொன்றுக்கு கீழ்க் காணும் துறைகளில் அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் தேவை.

1. மேசன்மார்
2. தச்சுவேலையாள்கள்
3. வர்ணம் பூசுவோர்
4. பெண் வரவேற்பாளர் - இவர் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

விபரங்களுக்கு : தொலைபேசி இல: 0750415428 ராஜ் என்பவரைத் தொடர்பு கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

## இலங்கை - இந்திய கடற்பரப்பு அமைதிப் பூங்காவாகட்டும்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் - குறிப்பாக இலங்கைக் கரைக்கும் தமிழ் நாடு கரைக்கும் இடையில் உள்ள கடல் பகுதி பாரம்பரியமாகவே இரு நாடுகளையும் கலை, கலாசாரம், சமயம் மற்றும் பொருளாதார ரீதிகளில் இணைக்கும் பாலமாகவே இருந்து வந்துள்ளது.

தமிழ்நாட்டுக் கடலோடிகள் இலங்கைக்கரைகளில் ஒதுங்குவதும் இலங்கை நாட்டுக் கடலோடிகள் தமிழ் நாட்டு கரைகளில் ஒதுங்குவதும் பூர்வீகமான சம்பவங்கள்.

சரித்திர காலத்தில் இந்திய அரசர்கள் இலங்கை மீது படை எடுத்து வந்தார்கள் என்றும் இலங்கை அரசர்கள் தமிழ் நாட்டின் மீது படையெடுத்தார்கள் என்றும் கூட வரலாறுகள் உண்டு. அதே விதமாக சமய ரீதியிலும் கலாசார ரீதியிலும் பல்வேறு சரித்திர சம்பவங்கள் இரு நாடுகளுக்குமிடையில் நடைபெற்றுள்ளன.

வட இந்திய இளவரசன் விஜயன் என்பவன் நாடு கடத்தப்பட்டு தன் 700 தோழர்களுடன் இலங்கையில் வந்து இறங்கினான் என்பதும் பின்னர் ஒரு காலத்தில் தமிழ் நாட்டு மேற்குடிப் பெண்களை அவனும் அவன் தோழர்களும் திருமணம் முடித்துக் கொண்டு இலங்கை நாட்டின் மக்கள் குடிப்பெருக்கத்துக்கு உதவினார்கள் என்பதும் கூட நாம் படித்து அறிந்த விடயங்கள்தான்.

இலங்கைத் தீவின் பெரும்பான்மை சிங்கள மக்களை பௌத்த சமயத்தைத் தழுவச் செய்த சரித்திர சம்பவத்துக்கும் கூட இந்த கடற்பிராந்தியமே அனுகூலமாக இருந்துள்ளது.

புத்த பெருமான் நாகதீபத்துக்கும் இலங்கையில் வேறு புனித தலங்களுக்கும் எழுந்தருளியதாக நம்பப்படும் சம்பவங்களுக்கும் கூட இந்த கடற் பிரதேசமே வாயிலாக இருந்திருக்க முடியும். அசோக மகா சக்கரவர்த்தியின் புதல்வர் மகிந்ததேரரின் வருகைக்கும் பின்னர் சகோதரி சங்கமித்தை தேரினி புனித வெள்ளரசு கிளையுடன் இலங்கைக்கு வந்தமைக்கும், இந்தக் கடற்பிரதேசமே வழியாக இருந்திருக்கும். புத்த பெருமான் உட்பட்ட அப்பெருமக்கள் அனைவரும் கடல்மார்க்கமாகவன்றி ஆகாய மார்க்கமாக வந்திருந்தாலும் இக்கடல் பிரதேசத்தைத் தாண்டியே வந்திருப்பார்கள்.

அதுமட்டுமல்ல சுமார் 28 கடல் மைல் தொலைவினால் மட்டுமே பிரிக்கப்பட்டுள்ள இந்த மண்ணுக்கு தமிழ் நாட்டிலிருந்தும் அதற்கு அப்பாலிருந்தும் பெருமக்களும், அரச பிரதானிகளும் சமயத் தலைவர்களும் கலைஞர்களும் ஆதிகால்த்திலிருந்தே வந்து போய்க் கொண்டுதான் இருந்திருப்பார்கள். படையெடுப்புக்கள் மட்டும்தான் நடைபெற்றிருக்க முடியும் என்பது தவறாகும்.

தமிழ் அரசர்களால்தோற்றுவிக்கப்பட்ட பல புனித ஸ்தலங்கள் இலங்கையில் இப்போதும் இருக்கின்றன. அவைகளில் தமிழ் சமயத்தவர்களால் பாடல்பெற்ற ஸ்தலங்களும் உண்டு.

இரு நாடுகளதும் சமய, ஆன்மீக மற்றும் கலை, கலாசார விழுமியங்களை வளர்த்து வளமிக்க, நாகரிகமிக்க சமுதாயங்களை உருவாக்கிக் கொள்ள உதவியுள்ள பிரதேசமாகும் இந்தப் பகுதி.

அந்த வகையில் இரு நாடுகளையும் இணைத்தும் பிணைத்தும் வளர்த்துவரும் இப்பகுதியை புனிதமான ஒரு பிரதேசமாக இரு நாடுகளுமே பேணிக் கொள்வது அவசியமல்லவா?

ஆனால், சமீப காலமாக இந்தப் பகுதியில் அவ்வப்போது நிகழும் சம்பவங்கள் இரு நாட்டுமக்களையும் கவலைக்குள்ளாக்கி வருகின்றன.

தமிழ் நாட்டு மீனவர்கள் அடிக்கடி இலங்கை கடற்பரப்புக்குள் புகுந்து இழுவைப் படகுகள் கொண்டு மீன்பிடிக்கிறார்கள் என்றும், அதனால் இப்பகுதி மீனவர்களின் மீன்பிடி வலைகள் சேதமாக்கப்படுகின்றனவென்றும் நம்மவர்கள் குறை கூறிவருகிறார்கள். இந்தச் சம்பவங்கள் இப்பகுதியில் மீன்பிடிப்பையே நம்பி வாழும் மக்களின் வயிற்றில் அடிப்பதாகவே உள்ளன என்பது அவர்களின் குறைபாடு.

இந்நிலையில் இன்னொரு பக்கம் இப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அவ்வப்போது தாக்குதல்களுக்கு உள்ளாவதாக அவர்கள் கூக்குரல் எழுப்பி வருகிறார்கள்.

சில தினங்களுக்கு முன் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலில் தமிழ்நாட்டு மீனவர் ஒருவர் சூட்டுக்குப் பலியானதாகக் கூறப்படுகின்றது. இச்சம்பவம் தமிழ்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். இந்திய பிரதமரும் இலங்கை தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆரம்ப விசாரணைகளின் படி இலங்கை கடற்படை அவ்வாறு ஒரு சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை என்பதாக ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இருந்தாலும் விரிவான விசாரணைக்கு அவர் உத்தரவிட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இந்திய மீனவர்கள் தமிழ்ப் புலிகளுக்கு உதவினார்கள் என்றோர் ஐயப்பாடு முன்னர் இலங்கைத் தரப்பில் கூறப்பட்டதுண்டு. அதே நிலைமை இப்பொழுதும் நீடிப்பதாக நினைக்க இடமில்லை. ஏனென்றால் புலிகள் ஒழிக்கப்பட்டுவிட்டார்கள். கடற்பரப்பில் அவர்களின் நடமாட்டமில்லை.

எதுவானாலும் விரிவான விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இது அவசியமானதொரு நடவடிக்கை. இந்தியப் பகுதிக்கு அத்துமீறிச் செல்லும் இலங்கை மீனவர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள். ஆனால் தாக்கப்பட்டதாக, சுடப்பட்டதாக புகார் எழுந்ததாக தெரியவில்லை.

இம்மாதிரிச் சம்பவங்கள் சிறியவையாகவிருந்தாலும் எதிர்காலத்தில் பெரும் விளைவுகளுக்கு வழிவகுக்கலாம். இந்தியாவில் தேர்தல் காலம் நெருங்கிவரும் சமயத்தில் இச்சம்பவங்களை அரசியல் கட்சிகள் பெரிதாக ஊதி லாபமடைய முயலக்கூடும். எனவே ஜனாதிபதி விசாரணைகளுக்கு உத்தரவிட்டுள்ள கையோடு இருதரப்பிலும் உயர் மட்ட பேச்சுக்களை ஆரம்பித்து தொடர்ந்தும் இவை போன்ற புகார்கள் ஏழாமல் செய்வது நல்லது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான கடற்பரப்பு அமைதிப் பூங்காவாக திகழ இரு நாட்டுத் தல்லைவர்களும் வழிவகுக்க வேண்டும்.

## கடல்வள அபிவிருத்தி பல்கலையில் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜன. 16

'தென் ஆபிரிக்க மற்றும் தென் ஆசிய நாடுகளின் சிற்றளவு மீன்பிடியாளர்களின் நீடித்த அபிவிருத்திக்கு இடமளித்தல்' என்ற பொருளிலான செயலமர்வு நாளை மறுதினம் 18 ஆம் திகதி எதிர்வரும் 21 ஆம் திகதிவரை யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெதர்லாந்து அம்ஸ்ரர்டாம் பல்கலைக்கழகம், தென்ஆபிரிக்க கேப்ரவுண் பல்கலைக்கழகம், இலங்கை றுகுணு மற்றும் யாழ். பல்கலைக்கழகங்கள், வட அயர்லாந்து உல்ஸ்ரர் பல்கலைக்கழகம் மற்றும் நப்சோ எனப்படும் மீனவர் அமைப்பு ஆகியன ஒன்றிணைந்து இந்தச் செயலமர்வுக்கான ஏற்பாடு செய்துள்ளன.

இலங்கை, இந்தியாவில் சிற்றளவு மீன்பிடியில் ஈடுபடுவோர் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன.

அத்துடன் சமூக பொருளாதார ஆய்வு, கடல் வள ஆய்வு மற்றும் இத்துறை சார் ஆளணியினரின் மேம்பாட்டு விருத்தி குறித்தும் ஆராயப்படவுள்ளது.

வடபகுதிக் கரையோரங்களுக்குச் சென்று இங்குள்ள நிலைமைகள் தொடர்பாக கடற்றொழிலாளர்களுடன் கலந்துரையாடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் செயலமர்வில் தமிழ்நாட்டு மீனவர் பிரதிநிதிகளும் வடபகுதி மீனவப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன் அத்துறைசார்ந்த விரிவுரையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.(ம)

## சரத் விடுதலையானால் இடர் நீங்கும்

கொழும்பு, ஜன. 16

சரத் பொன்சேகாவை விடுதலை செய்தால், நிர்க்கதி நிலைமை, வெள்ளம், ஏற்பட்டுள்ள நோய் மற்றும் ஒவ்வாமை என்பன இல்லாமல் போகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் அவர் கருத்து தெரிவித்தவை வருமாறு:

சரத் பொன்சேகாவை விடுதலை செய்தால் அனர்த்தம் அனைத்தும் உடனே இல்லாமல் போகும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து நாங்கள் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளோம்.

இந்தத் தீர்மானத்தின் படி அவசர திட்டங்களை மேற்கொண்டு கட்சி உறுப்பினர்களை அழைத்து நிவாரணம், பணம் அல்லது பொருள்களைச் சேகரித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

இதற்குரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

எனினும், மக்கள் நிர்க்கதியாவது சரத் பொன்சேகாவை விடுதலை செய்தால் தானாக நின்று விடும். - என்றார்.

(ம)

**இந்திய, மலேஷிய நிறுவனங்கள் பங்கேற்கும்**

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் வெள்ளி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.16

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மூன்று நாள்கள் யாழ்ப்பாணத்தில் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் இடம்பெறவிருக்கும் வர்த்தகக் கண்காட்சியில் இந்தியா, மலேஷியா ஆகிய நாடுகளின் முன்னணி வர்த்தக நிறுவனங்களும் பங்குபற்றவிருக்கின்றன.

கண்காட்சியின் முதல்நாள் ஆரம்ப நிகழ்வில் இந்திய, இந்தோனேஷிய நாடுகளின் தூதர்கள் பங்கேற்கவிருக்கின்றனர்.

வர்த்தகக் கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரணவபவன், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மற்றும் பலர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதி, சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்பாக நடைபெறவுள்ள இந்த மாபெரும் சர்வதேசக் கண்காட்சியில் சுமார் 250 காட்சிக்கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

'வியாபாரத்துக்கான உங்கள் திறவுகோல் என்ற தொனிப் பொருளில் இடம்பெறவுள்ள இந்தக் கண்காட்சி விவசாயம், உணவு பதனிடல் மற்றும் பொதியிடல், கட்டுமானத்துறை, மீன்பிடி, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலாத்துறை, மோட்டார் உபகரணங்கள், அழக்குக் கலை மற்றும் சிறிய நடுத்தர உற்பத்தித்துறை போன்ற முக்கிய துறைகளில் நவீன இயந்திர சாதனங்களையும் சேவைகளையும் இந்திய மற்றும் மலேசிய நிறுவனங்கள் காட்சிப்படுத்தவுள்ளன.

இலங்கையின் தென்பகுதியைச் சேர்ந்த பல்வேறு தேசிய கைத்தொழில் நிறுவனங்களும் தமது உற்பத்திப் பொருள்கள் மற்றும் இயந்திர சாதனங்களைக் காட்சிப்படுத்தவுள்ளதுடன் அவை தொடர்பான முழுமையான விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றமும் வரையறுக்கப்பட்ட இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாடுகள் சேவைகள் மற்றும் தனியார் நிறுவனமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன.

இந்தக் கண்காட்சியின் ஓர் அங்கமான தென்னிலங்கை முன்னணி இசைக் குழுவினர் வழங்கும் இன்னிசை கதம்ப நிகழ்வுகளும் சிறுவர்களுக்கான களியாட்ட நிகழ்வுகள் மற்றும் அனைத்து தரப்பினரையும் கவரும் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களும் இடம்பெறவுள்ளன. (ஒ-ஐ-14)

## வெள்ளத்தால் 32 உயிரிழப்புகள்

கொழும்பு,ஜன.16

கடந்த சில நாள்களாக நாட்டில் பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் 32பேர் உயிரிழந்துள்ளதுடன் 49 பேர் காயமடைந்தும் 12 பேர் காணாமலும் போயுள்ளனர்.

அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா மற்றும் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 282,953 குடும்பங்களைச் சேர்ந்த 1,056,265 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது 33,920 பேர் முகாம்களில் தங்கியிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் 584 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

3,737 வீடுகள் முழுமையாகவும் 19,356 வீடுகள் பகுதியளவிலும் வெள்ளம் காரணமாகச் சேதமடைந்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குக்கு உதவி: விசேட பணியகம்

யாழ்ப்பாணம், ஜன.16

மனிதாபிமான உதவிப் பொருள்களை வடமராட்சி மக்களிடம் இருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக கரவெட்டி பிரதேச செயலகத்தில் விசேட அலுவலகம் ஒன்று இயங்கி வருவதாக பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் அறிவித்தார்.

இன்றுவிடுமுறை நாளாக இருந்தாலும் குறிப்பிட்ட அலுவலகத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கடமையில் இருப்பார்கள். அவர்களிடம் பொது மக்கள் உதவிப் பொருள்களை வழங்கலாம் என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

இதேவேளை, கிராம அலுவலகர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இடர் முகாமைத்துவக் குழுக்கள் மூலமாகவும் உதவிப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-319)

## மார்பு நோய்ச் சிகிச்சைப் பிரிவை சாவகச்சேரியில் ஆரம்பியுங்கள்

### நோயாளர்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஜன.16

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் மார்பு நோய்ச் சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்குமாறு நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி, பூநகரி, வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் மார்பு நோய்க்கான சளிப் பரிசோதனை மற்றும் எக்ஸ்-றே எடுப்பதற்காக யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் பெருமளவு பணமும் நேர விரயமும் ஏற்படுகிறது.

அண்மைக்காலமாக இந்தியாவிலிருந்து இந்தப் பிரதேசங்களுக்கு வருவோரின் தொகை அதிகரித்துள்ளது. புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து விடுவிப் போரும், தத்தமது இடங்களுக்கு மீளக் குடியமர்ந்து வருகின்றனர். அத்துடன் தென்னிந்தியாவிலிருந்தும் வியாபாரிகள் இங்கு வருகின்றனர். இதனால் காசநோய் பரவக்கூடிய அபாயம் காணப்படுகிறது.

இந்நிலையில் பாதிக்கப்படுவோர் செலவுகள், நேரவிரயம் ஆகியவற்றைக் கருதி சிகிச்சை பெறத் தயங்குவதால் அநியாயமான உயிரிழப்பு ஏற்படுகிறது.

இந்த வைத்தியசாலையில் எக்ஸ்-றே வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதால் சளிப்பரி சோதனை செய்யக்கூடிய உத்தியோகத்தரை நியமித்து வைத்தியசாலை வளாகத்தில் வெற்றிடமாக உள்ள கட்டடத்தில் மார்பு நோய் சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்குமாறு கோரியுள்ளனர்.

அத்துடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மார்பு நோய்ச் சிகிச்சைப் பிரிவை தினமும் இயங்கக் கூடிய வகையில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர்.

இதேவேளை சாவகச்சேரி வைத்தியசாலையில் மாதத்தில் ஒரு தடவை மார்பு நோய் கிளினிக் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (201-207)

## வானிலையால் செம்பியன்பற்றில் மீன்பிடி பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.16

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்றுப் பிரதேசத்தில் சீரற்ற காலநிலை நிலவுவதால் கடற்றொழில் பாதிப்படைந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் மீன் விலை அதிகரித்துள்ளது.

இப்பிரதேசத்தில் அதிகளவு குடும்பங்கள் கடற்றொழிலையே செய்பவர்களாக உள்ளதால் கடற்றொழில் பாதிப்படைந்துள்ளதால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

சீரற்ற காலநிலையால் கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதால் தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பெருந்தொகையான கடற்றொழிலாளர்கள் நேற்றும் நேற்றுமுன்தினமும் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை. மிகக்குறைந்தளவான கடற்றொழிலாளர்கள் கரையோர மீன்பிடியில் ஈடுபட்டனர்.

இதனால் மீன் சந்தைகளில் மீன்வரவு மிகக்குறைவாக இருந்தமையாலும் மீன் விலை உயர்வாகக் காணப்பட்டன. நுகர்வோரின் மீன் தேவையைப் பூர்த்தி செய்யப்பற்றாக் குறை இருந்து வருவதால் கோழி முட்டையை வாங்குவதில் பெருந்தொகையான நுகர்வோர் அக்கறை காட்டி வருகிறார்கள்.

இதனால் இந்தப் பிரதேசத்தில் ரின் மீன், முட்டை போன்றவை அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. 20 -22 ரூபா வரை முட்டையும் ரின்மீன் 150 - 250 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

(201-313-236)

## சேந்தாங் குளத்திலிருந்த மண் அணை அகல்கின்றது

சண்டிலிப்பாய்,ஜன.16

வலி. வடக்கு சேந்தாங்குளம் பகுதியில் மீள் குடியமர்வு இடம் பெறவுள்ளதால் அந்தப் பகுதியிலுள்ள மண் அணையை அகற்றுவதில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

வலி. வடக்கு பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் அந்தப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகள் அகற்றப் படுவதைத் தொடர்ந்து பல கிராம அலுவலர் பிரிவுகளில் படிப்படியாக மீள்குடியேற்றப் பட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் மீள்குடியமர பாதுகாப்புப் படையினரால் அனுமதிக்கப்பட்ட சேந்தாங் குளம் பகுதிகளான ஜே - 221, 222, 223 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் போர்க்காலச் சூழ்நிலையின்போது பாதுகாப்புக் கருதி பாதுகாப்புப் படையினரால் அமைக்கப்பட்ட பெரிய மண் அணை தற்பொழுது கனரக வாகனங்கள் மூலம் படையினரால் அகற்றப்பட்டு வருகின்றது. இதேவேளை சேந்தாங் குளத்திலிருந்து அம்பனைச் சந்திவரை போடப் பட்டிருந்த மண் அணை மீள்குடியேறவிருக்கும் மக்களின் போக்குவரத்து வசதியைக் கருதி அகற்றப்பட்டு வருகின்றது.

(201-115)

## குடிதண்ணீர்த் தொட்டி கட்டுடையில் அமைப்பு

யாழ்ப்பாணம் ஜன.16

கட்டுடைப் பகுதியில் வாழ்ந்து மறைந்த அமரர் திருமதி கந்தசாமி மனோன்மணி ஞாபகார்த்தமாக அவரது கணவர் ஆ.கந்தசாமி பொதுமக்களின் நன்மை கருதி குடிதண்ணீர் பொறும் தொட்டியை அமைத்துக் கொடுத்துள்ளார்.

சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் மேற்படி பொது நீர்த் தொட்டி கட்டுடை, மதவடி ஒழுங்கையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் பொக்கணை- கந்தரோடை- சங்குவேலியூடாக கட்டுடை வரும் நன்னீரால் சுமார் 100-150 வரையிலான குடும்பங்கள் பயனடைவதாக மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.முதலியார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபைக்குச் செலுத்த வேண்டிய 22 ஆயிரத்து 740 ரூபா நிலையான நிதியையும் அமரர் கந்தசாமி மனோன்மணி ஞாபகார்த்தமாக வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குடும்பத்தவர்களின் முன்மாதிரியான அர்ப்பண சேவையை மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் பாராட்டியுள்ளது.

(201-302)

## நீதிமன்றப் பாதுகாப்பில் இருந்த ஆலய விக்கிரகங்கள் ஒப்படைப்பு

வடமராட்சி,ஜன.16

பருத்தித்துறை நீதி மன்றத்தின் பாதுகாப்பில் இருந்து வந்த இரு கோவில்களின் விக்கிரகங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

யுத்த முடிவடைந்ததையடுத்து, மீள்குடியமர்வு இடம் பெறுவதற்கு முன்னர் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள ஆலயங்களில் உள்ள மூல விக்கிரகங்கள் பாதுகாப்புக் கருதி பருத்தித்துறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் பணிப்பின் பேரில் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தன.

உடுத்துறை ஐந்தாம் பனை பிள்ளையார் கோயில், நாகர் கோயில் மாணிக்கப்பிள்ளையார் கோயில் ஆகியவற்றின் பிள்ளையார் விக்கிரகங்களே நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டன.

யுத்தம் முடிவடைந்து தற்போது மீள்குடியமர்வு இடம் பெற்ற வருகின்றன. எனவே நீதி மன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த இருவிக்கிரகங்களும் நீதிவானின் பணிப்பின் பேரில் சம்பந்தப்பட்ட கோயில்களின் பூசகர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை நாகர் கோயில் பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெறாமையால் மாணிக் கப்பிள்ளையார் கோயில் விக்கிர கம் தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் கோயிலில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (201-236)

### கவனிப்பார்களா?...



*அபாயம்: ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலய நல்ல தண்ணீர் கிணற்றுக்கு அருகில் உள்ள மின்மாற்றியிலிருந்து நிலத்துக்கு அடியில் செல்லும் 'ஏர்த்' மின் வயரிலிருந்து மழை பெய்தவுடன் மின் தாக்கம் ஏற்படுவதால் அபாய அறிவிப்புப் பலகை நடப்பட்டுள்ளது. பல நாள்களாகியும் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாதுள்ளது. (100)*

## வானிலை மாற்றத்தால் கால்நடைகளுக்குத் தொற்று நோய்

யாழ்ப்பாணம், ஜன.16

காலநிலை மாற்றங்களால் கால் நடைகளுக்குத் தொற்று நோய்கள் ஏற்பட்டு வருகின்றன. காற்றினாலே அதிகமான கால்நடைகளுக்கு வைரஸ் தொற்று நோய்கள் ஏற்படுவதாக யாழ்ப்பாண அரச கால் நடை வைத்தியசாலை டாக்டர் திருமதி அமரஸ்ரீ தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

இந்த வைரஸ் தொற்று நோய்களால் அதிகமாக நாய்கள், கோழிகள் போன்றனவே பாதிக்கப் படுகின்றன.

குறிப்பாக நாய்களுக்கு ''டிஸ்ரெம்பர்'' (Distemper) எனும் தொற்று நோயும், கோழிகளுக்கு றனிக்கட் (Ranikhet) எனும் தொற்று நோயும் ஏற்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் கடந்த மூன்று நான்கு மாதங்களாகவே மேற்படி தொற்று நோய்களுக்கு கால் நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தநோய்களுக்கு 'பாவோ' (Parvo) என்னும் தடுப்பு ஊசிகள் நாய்களுக்கு ஏற்றப்படுகிறது.

அந்த வகையில் டிஸ்ரெம்பர் நோய்களுக்குரிய அறிகுறிகளாக கண்களிலிருந்து அதிகமாக பூளைசாறுதல், பின்னங் கால் நடக்க முடியாது தள்ளாடுதல், அடிக்கடி வலிப்பு என்பன ஏற்படுகின்றன.

இந்த அறிகுறிகள் காணப்படும் வேளையில் தடுப்பூசிகள் வழங்கப்படாது விட்டால் இறந்து விடுகின்றன. இவ்வாறு யாழ். மாவட்டத்திலே அதிகமான நாய்கள் இறந்துவிட்டன.

வீதிகளில் கவனிப்பாரற்று கைவிடப்பட்ட நாய்களும் மேற்படி தொற்று நோய்களுக்குள்ளாகி இறந்து விடுகின்றன.

தடுப்பூசிகளை நாய்கள் பிறந்து இரண்டு மாதத்திற்கு ஒரு தடவையும், அடுத்து 3 மாதத்திற்கு ஒரு தடவையும் அடுத்து ஒவ்வொருவருடமும் ஒரு தடவையாகவோ எனும் அடிப்படையில் தடுப்பூசிகளை நாய்களுக்கு வழங்கவேண்டும்.

விசர் நாய்த் தடுப்பு ஊசி மட்டுமின்றி இந்தத் தடுப்பு ஊசிகளையும் வழங்க வேண்டும். கோழிகளுக்கு றனிக்கட் (Raniket) எனும் தொற்றுநோய்கள் ஏற்படுகின்றன. இதற்கான அறிகுறிகளாக கோழிகள் சோர்வாகக் காணப்படும், மலம் பச்சை நிறத்தில் வெளியேறும்.

இதற்கான தடுப்பு மருந்துகள் யாவும் அரச கால்நடை வைத்தியசாலையில் சனிக்கிழமை தோறும் காலை 9 மணிக்கு முன்னர் வழங்கப் படும்.

இந்தத் தடுப்பு மருந்துகளை கோழிக் குஞ்சுகளுக்கு பிறந்து 7 ஆம் நாள், ஒருதடவையும், 21 ஆம் நாளும், 3 மாதத்திலும், பின்பு 3 மாதத்திற்கு ஒரு தடவையும் கோழிகளுக்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நோய்களுக்குரிய அறிகுறிகள் தென்படும் போதே தடுப்பூசிகளை வழங்கி கால்நடைகளைப் பாதுகாக்குமாறு அவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

(201-311)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நகரில் நடந்த பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.16

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பின் ஏற்பாட்டில் யாழ். நகரில் நேற்று பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

அமைச்சர்கள் சந்திரசிறி கஜதீர, டியூ. குணசேகர, ரி.பி.ஏக்கநாயக்க, டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி,.எம். சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் அரிசியைப் பானையில் இட்டுப் பொங்கல் விழாவைச் சிறப்பித்தனர்.


யாழ். மத்திய கல்லூரி வளாகத்தில் பொங்கல் நிகழ்வு காலை 8 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொங்கல் விழாவின் ஒரு பகுதியாகப் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

முன்னாள் போராளிகளை விடுவித்தல், சிங்கள மற்றும் தமிழ்க் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள், கொழும்பில் இருந்து அழைத்து வரப்பட்ட இசைக் குழுவின் இசை நிகழ்ச்சி என்பனவும் பொங்கல் விழாவின் நிகழ்வுகளாக இடம்பெற்றன.

''மனிதநேயம் எந்த இடத்தில் இல்லாமல் போகின்றதோ அந்த இடத்தில்தான் போர் தோன்றுகின்றது. கடந்த 30 வருட யுத்தம் அதனைத்தான் சொல்கிறது.'' - என்று விழாவில் உரையாற்றிய புனர்வாழ்வு அபிவிருத்தி மனிதவள மூத்த அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

பொங்கல் விழா மக்களை இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கு பழக்கப்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

விழாவில் வைத்து இம்முறை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி உள்ள முன்னாள் போராளிகள் 50 பேருக்கு தலா 5,000 ரூபா நிதி உதவி வழங்கப்பட்டது. அத்துடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் யாழ். கல்வி வலயத்திற்கு உட்பட்ட மாணவர்களுக்கு மாதாந்த உதவித் தொகை 500 ரூபா வழங்குவதும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. (உ-15)



யாழ். மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற பொங்கல் விழாவின் ஒரு பகுதியான பொங்கல் நிகழ்வில் அமைச்சர்கள் கஜதீர, டியூ. குணசேகர ஆகியோர் பொங்கலுக்கான அரிசியைப் பானையில் இடுகிறார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரும் உடனிருந்தனர்.

## குடாநாட்டில் சோபையிழந்த பொங்கல்

வலி.வடக்கு,ஜன.16

யாழ். குடாநாட்டில் நேற்றைய தினம் பொங்கல் விழா அமைதியான முறையில் நடைபெற்றது.

அதிகாலையில் கதிரவனுக்கு பொங்கிய மக்கள் ஆடம்பரங்கள் இன்றி தமது உறவுகளுடன் பொங்கலை உண்டு மகிழ்ந்தனர். கிழக்கு மாகாண மக்களின் அவலத்தையிட்டு மக்கள் ஆலயங்களுக்குச் சென்று வந்ததையும் காணக் கூடியதாக இருந்தது.

ஆலயங்கள் வர்த்தக நிலையங்கள் எங்கும் பொங்கல் பொங்கி தைப் புத்தாண்டை அனைவரும் வரவேற்றனர். எனினும் கொண்டாட்டங்கள் எவையும் பெரியளவில் இடம்பெறவில்லை. கடந்த ஆண்டு தமிழ் மக்கள் புத்தாண்டை கொண்டாடியதிலும் பார்க்க குறைவாகவே நேற்றைய பொங்கல் நிகழ்வுகள் அமைந்திருந்தன.

கிழக்கு மக்கள் வெள்ளத்தில் வாடி வதங்கும் நிலையில் பொங்கல் கொண்டாட்டங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கைகளை விடுத்திருந்தனர்.

இந்த முறை என்றும் இல்லாதவாறு வர்த்தக நிலையங்களில் பொங்கல் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் குடாநாட்டின் வீதிகள் மக்கள் நடமாட்டம் குறைந்து வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதேவேளை, வடமராட்சி பகுதியிலும் பொங்கல் களை கட்டவில்லை என்று எமது செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர். மக்கள் ஆலய வழிபாடுகள், பிரார்த்தனைகளுடன் பொங்கலை மேற்கொண்டனர். தவிர கொண்டாட்டங்களில் ஈடுபடவில்லை.

தைப்பொங்கல் தினத்தில் வழமையாக நடக்கும் பட்டம் விடும் போட்டியும் மழை காரணமாக இம்முறை இடம் பெறவில்லை. (ம-7-9-236)

## கோப்பாயில் மீட்கப்பட்ட ஆணின் சடலத்தை மரபணுச்சோதனைக்கு உட்படுத்த உத்தரவு

கோப்பாய் ஜன.16

கோப்பாயில் பாழடைந்த கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட உரும்பிராய் வாசியின் சடலத்தின் அடையாளத்தை மரபணுப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தும்படி யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா நேற்று உத்தரவிட்டார்.

சடலத்தில் காணப்பட்ட சில அடையாளங்களைக் கொண்டு அது உரும்பிராய் யோகபுரத்தில் கடந்த முதலாம் திகதி காணாமல் போன ம.அமிர்தராஜன் (வயது - 35) என்பவரது சடலமாக இருக்கலாம் என அவரது தாயார் அடையாளம் காட்டி இருந்தார்.

இந்தச் சடலம் கோப்பாயில் உள்ள பாழடைந்த கிணற்றினுள் இருந்து கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டது. சடலம் மிகவும் அழுகிய நிலையில் காணப்பட்டதால் அதனை அடையாளம் காண்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டிருந்தது. இருப்பினும் மரணமானவர் கடைசியாக அணிந்திருந்த சாரம் மற்றும் கைத்தொலைபேசி என்பவற்றை வைத்து அவர் அடையாளம் காணப்பட்டிருந்தார். அவருடைய முகத்தில் உடைந்த முன்பற்களைக் கொண்டு அந்தச் சடலம் தனது மகனுடையதுதான் என்று அவரது தாயார் அடையாளம் காட்டியிருந்தார்.

சடலம் அடையாளம் காட்டப்பட்டதையடுத்து மரணவிசாரணை, பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிடப்பட்டதுடன் அடையாளத்தை உறுதிப்படுத்த மரபணுப் பரிசோதனைக்கும் உத்தரவிடப்பட்டது. (ம-9)

## இலவச ஆயுள்வேத நடமாடும் சேவை

நவாலி,ஜன.16

வலி. தென் மேற்கு பிரதேச சபையின் நடமாடும் இலவச ஆயுள்வேத வைத்திய சேவை சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோயிலுக்கருகில் ஜே-142 கிராம சேவை அலுவலரின் அலுவலகக் கட்டடத்தில் சனிக்கிழமைகளில் காலை 8.20 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெற்று வருகின்றது. ஐம்பதுக்கு மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். விடுமுறை நாள்களில் இந்தச் சேவை நடை பெறுவதில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (201-100)

## தைப்பூச மஞ்சத் திருவிழா இணுவிலில் வியாழனன்று

யாழ்ப்பாணம் , ஜன.16

வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் தைப் பூச தின மஞ்சத் திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை பூசை நடைபெற்று 8.30 மணிக்கு ஆயிரத்து எட்டு சங்குகளால் ஆறுமுகப் பெருமானுக்கு சங்காபிஷேகம் நடைபெற்று நண்பகல் விசேட தீபாராதனை இடம்பெறும். மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று தொடர்ந்து சண்முகார்ச்சனை இடம்பெறும்.



மாலை 6.45 மணியளவில் பல்லாயிரக்கணக்கான மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கலைக் களஞ்சியமாகத் திகழும் நூற்றாண்டுப் பழமை வாய்ந்த மஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் வீதி வலம் வரும் நிகழ்வும் ஈழநாட்டின் புகழ் பூத்த தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் இசை அர்ச்சனையும் இடம்பெறும். இந்தவருடம் நாட்டில் சுமுகமான நிலைமை ஏற்பட்டிருப்பதாலும் போக்குவரத்து வசதிகள் சீராக இடம்பெறுவதாலும் பிறமாவட்டங்களிலுமிருந்து விழாவுக்கு பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பக்தர்களின் வசதி கருதி குடிதண்ணீர், சுகாதார வசதி, வாகனப் பாதுகாப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (201)

## வீதியில் குப்பை சேர்வதால் பயணிப்போருக்கு நெருக்கடி

வண்ணை,ஜன.16

வண்ணார்பண்ணை மேற்கு, வயற்கரை வீதியால் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு வீதியில் குப்பை கூளங்கள் கொட்டப்பட்டுக் கிடப்பதாக அப்பகுதி மக்கள் முறையிடுகின்றனர்.

குப்பைகளைக் கொட்டி அப்பகுதியை உயர்த்தும் பணி கடந்த சில வருடங்களாக நடைபெற்று வருகிறது. அந்த வகையில் கணிசமான பகுதி மேட்டு நிலமாகவும் மாறியுள்ளது. அதற்கு ஊடாகக் கொண்டு சென்று பள்ளத்தில் குப்பையைக் கொட்டுவதில் ஏற்படும் சிரமத்தைக் குறைக்க மாநகர சபை வாகனச் சாரதிகளும், ஊழியர்களும் மேற்கொள்ளும் செயற்பாடுகளாலேயே வீதியில் குப்பைகள் வந்து சேர்கின்றன என்று மக்கள் குறைப்படுகின்றனர். (ம-160)

## வட்டு. கலட்டி மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஜன.16

வட்டுக்கோட்டை, கலட்டிப் பிரதேச மக்களுக்கு 'குழாய்' மூலம் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது. யாழ்.தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் எந்திரி பா.தவேந்திரகுமார் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். வட்டு சத்திய சாயி நிறுவனரும்- அரச அலுவலருமான ரி.எஸ்.சிறிகாந்தன் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இதனை அடுத்தே குழாய் மூலம் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் அடுத்த மாதம் வட்டு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் கிணற்று பகுதியில் இருந்து பணிகள் தொடங்கும். தமக்கு குழாய் நீர் விநியோகிக்குமாறு 10 வருடங்களாக இந்த மக்கள் கோரி வந்தார்கள். (201-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் அரசியல் அபிலாஷைகளை உறுதிப்படுத்த உள்ளூராட்சித் தேர்தல் வெற்றி முக்கியம்

### கரைச்சிப் பிரதேச வேட்பாளர் தெரிவில் சிறிதரன் எம்.பி

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கட்சிகள் வேட்பாளர்களைக் களம் இறக்குவதற்கான பரபரப்பில் உள்ளன. இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபைக்கான த.தே.கூட்டமைப்பின் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான ஆரம்பகட்டக் கலந்துரையாடல் கடந்த திங்கள் பிற்பகல் 3 மணிக்கு த.தே.கூட்டமைப்பு கிளிநொச்சி பணிமனையில் நாடாளுமன்ற உறுப்பினரும் கிளிநொச்சி மற்றும் சாவகச்சேரி தொகுதிகளின் கட்சியின் இணைப்பாளருமான சி.சிறிதரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி, கரைச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுகளின் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள், தொண்டர்கள் கலந்துகொண்டனர். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எதிர்வரப்போகும் உள்ளூராட்சித் சபைத் தேர்தல் தொடர்பான விரிவான விளக்கவுரையை ஆற்றினார்.

அவர் தனது உரையில் கடந்த பல தசாப்தங்களுக்குப் பிறகு முதன் முறையாக நாம் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை எதிர்கொள்ளவிருக்கின்றோம். மிக நீண்டபோர் வரலாற்றின் பின்னாக தோன்றியிருக்கின்ற இச்சூழலில் இத்தேர்தல் என்பது முக்கியமானது. நாடாளுமன்றத் தேர்தலில் எமது அரசியல் பலம் நிரூப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் உள்ளூராட்சிச் சபைகளின் ஆட்சியைக் கைப்பற்றுகின்ற கட்சியாக நாம் தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களில் இருக்க வேண்டியது முக்கியமானது. இதன் வழியாகவே எமது அரசியல் அபிவிருத்தி அபிலாஷைகளை உறுதிப்படுத்த முடியும். இதுவே எமது பயணத்துக்கும் பலமாக அமையும். இம்முறை வெற்றியை உறுதிப்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மிகுந்த கொள்கைப்பற்றுடன் உழைக்க வேண்டியிருக்கின்றது. நாம் இப்போது வெறுங்கையராய் இருக்கின்றோம். பணபலமில்லை ஆனால் எமது மக்களிடம் அதியுயர்ந்த கொள்கைப்பற்று இருக்கின்றது. அதை எதிர்வரும் தேர்தலில் எமது மக்கள் நிச்சயம் உறுதிப்படுத்துவார்கள். ஆயினும் உள்ளூராட்சிச் சபை தேர்தலில் தவறான பரப்புரைகளை வீழ்த்துவதற்கும் எமது பிரதிநிதிகளை உலகறியச் செய்வதற்கும் புலம்பெயர் தமிழ் மக்களின் தார்மீகக்கடமை அதிகம் தேவையாய் இருக்கின்றது. நிலத்தினதும் புலத்தினதும் இணைந்த பலமே வெற்றியை கொண்டுவரும் எனத் தெரிவித்தார்.

(க-319)

## சிந்திப்போம் சேமிப்போம்...



எதிர்காலத்துக்கான அடித்தளம்: கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் சேமிப்பு வங்கியின் கிளையைத் திறந்து வைத்த பின்னர் கல்லூரியின் அதிபரும், வங்கி ஊழியர்களும் காணப்படுகின்றனர்.

# தரமான விதைகள் கிடைக்காததால் பூநகரி விவசாயிகள் நட்டத்தில்

பூநகரி, ஜன.16

பூநகரி விவசாயிகள் தாம் தரமான விதைகளைப் பெற முடியாத நிலையில் உள்ளதாகக் கவலை தெரிவித்தனர்.

இவர்கள் தரமான விதையைப் பெறுவதற்கு பல கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து கிளிநொச்சிக்குச் செல்லவேண்டிய நிலையில் உள்ளனர். பூநகரிப் பிரதேசத்தில் இவை கிடைக்குமாயின் விவசாயிகளின் சிரமங்கள் குறைவதோடு அவர்கள் நல்ல விளைச்சலைப் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும்.

தற்போது தரமான விதை இனங்கள் இலகுவாகப் பெற முடியாத நிலையில் உள்ளதால் குறைந்தளவு விளைச்சலையே இவர்கள் பெற்றுவருகின்றனர்.

எனவே விவசாயத்திணைக்களத்தினர் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு இந்த விவசாயிகள் தரமான விதைகளைப் பூநகரியிலேயே பெற உதவ வேண்டும் என அனைவரும் கோரிக்கை விடுக்கின்றனர்.

(க-406)

# தொடர்ந்து பெய்துவரும் மழையினால் முல்லைத்தீவு மக்களுக்குப் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜன.16

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் முல்லைத்தீவு மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்து மழைபெய்து கொண்டிருக்கின்றது. இதனால் மக்களின் வாழ்விடங்கள் நீர் ஊறிய நிலையில் காணப்படுகின்றன. வீடுகளைச் சூழ வெள்ளம் நிற்பதனால் ஈரம் காய்வதற்கான வாய்ப்புக் காணப்படவில்லை. அத்துடன் வீட்டு முற்றங்கள் சேறும் சதியுமாகக் காணப்படுவதால் மக்கள் நடமாடுவதற்கே இயலாத நிலையில் காணப்படுகின்றனர். அத்துடன் கடும் குளிர் நிலவு வதால் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் தொடர் மழை காரணமாக மக்களின் தொழில் முயற்சிகள் பாதிப்படைந்த நிலையில் உள்ளன. இதனால் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்வதில் இவர்கள் மிகவும் அல்லல்படுகின்றனர்.

எனவே தொடர்ந்து துன்பங்களை அனுபவிக்கும் இந்த மக்களுக்குரிய நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டுமெனக் கிராம அமைப்புக்கள் கோரியுள்ளன. (க-500)

# இடமாற்றங்கள்

முல்லைத்தீவு, ஜன.16

முல்லைத்தீவு அரசாங்க அதிபராக இதுவரைகாலமும் கடமையாற்றிய நா.வேதநாயகன் மன்னார் அரசாங்க அதிபராக கடந்த 5ஆம் திகதி முதல் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதே வேளை மன்னார் செயலகத் தில் திட்டப்பணிப்பாளராகக் கடமை யாற்றிய ஏ.பத்திநாதன் முல்லைத்தீவு அரசாங்க அதிபராக இதே திகதியில் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மன்னாரில் நீண்டகாலமாக அதாவது ஐந்து வருடங்கள் மேலதிக அரசாங்க அதிபராகவும், இதே காலப்பகுதிக்கு அரசாங்க அதிபராகவும் கடமையாற்றிய ஏ.நீக்கிலாப்பிள்ளை 'சிலிடா' நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகராகப் பதவியேற்றுள்ளார்.

இதே வேளை மன்னார் வலயக் கல்வி பணிமனையிலும், மாகாண சுகாதார சேவைகள் பணிமனையிலும் உயரதிகாரிகள் இடமாற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-302)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
சித்தாரா பொன்னாங்காணித் தைலம்
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
(C/564561)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சுபத்திராதேவி விவேகானந்தன்

(சங்கீத வித்துவான்- சென்னைப் பல்கலைக்கழகம், ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை)

உள்ளம் மகிழ: 07.08.1945
உள்ளம் நெகிழ: 27.01.2010

மழலையில் தாயை இழந்து பல துன்பங்களை
அனுபவித்து இசை ஆசிரியரானாய்
ஆசைக்கு ஒரு மகளையும் அஸ்திக்கு ஒரு மகனையும்
பெற்றுச் சந்தோஷமாக வாழும் வேளையில்
இருவரையும் சிறு தூரத்தில்
விட்டுப் பிரிந்து சோகத்தில் வாழ்ந்த வேளையில்
இறைவன் தன்னருகே ஏற்றுக்கொண்டான்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர்- விவேகானந்தன், மகன்- கஜன், மகள்- சுகன்யா,
மருமக்கள்- சர்மிளா, சுதாகரன், பேரப்பிள்ளைகள்- சுருதிகா, [illegible]
அழகொல்லை, அளவெட்டி மத்தி, அளவெட்டி.

(சி/5745502)

VISA - வீசா
Consultancy Service
UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,
Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas
Call : 0776 209 887
SIC, 734, Hospital Road, Jaffna.

INSTITUTE OF BRITISH TECHNOLOGY (PVT) LTD.


Hotline : 0777113777
அடிப்படைத்தகமை G.C.E (O/L)
IELTS - தேவையில்லை
சிறந்த சட்டவல்லுனர்களின் ஆலோசனை
நம்பகரமான Sponsorship
2011 மார்ச் மாதம் அமுலாகவுள்ள UK மாணவர் வீசா புதிய சட்ட அமுலாக்கலுக்கு முன்னர் உங்கள் வீசாவினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.....
IBt
No.538-3/1, Galle Road, Colombo 03, Branch : Kalmunai
E-mail : info@ibtedu.lk, academics@ibtedu.lk
Web : www.ibtedu.lk
we raise the limits to your Success...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியில் தொடர் மழை உணவின்றி மாடுகள் சாவு

பூநகரி,ஜன.16

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாகப் பூநகரிப் பிரதேசத்தில் கால்நடைகள் உணவின்றி இறந்து கொண்டிருப்பதாகக் கால்நடை வளர்ப்போர் வேதனை தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாகப் பூநகரிப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இதனால் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகள் யாவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதன் காரணமாகக் கால்நடைகளுக்கு உணவு கிடைக்காத நிலையில் அவை பரிதாபமான முறையில் இறந்து வருவதாகக் கால்நடைகளைப் பட்டிகளில் வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். இதனால் தமக்கு மிகுந்த மன வேதனையும், பொருளிழப்பும் ஏற்படுவதாக அவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

பூநகரிப் பிரதேசத்தின் கிராஞ்சி, வேரவில், பொன்னாவெளி, செல்விபுரம், தம்பிராய், நல்லூர், ஆலங்கேணி, சாமிப்புலம், நீவில், முட்கொம்பன், முழங்காவில், கரியாலை நாகபடுவான்,சோலை, ஜெயபுரம், கறுக்காய்த்தீவு, நாலாம்கட்டை, காசி குடா ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 20இற்கும் மேற்பட்ட பட்டிகளில் அடைக்கப்பட்ட மாடுகளே இவ்வாறு பரிதாபமாகத் தினமும் மரணத்தைத் தழுவிக் கொள்கின்றன. நாளாந்தம் சராசரியாக ஐந்து மாடுகளுக்கு மேல் இறந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியான நிலையில் மீள் குடியேறிய தமக்கு இயற்கையும் வஞ்சனை செய்வதாக இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க-406)

# நிரந்தரக் கட்டடமின்றி அவதி கோட்டக்கல்வி பணிமனைக்கு

பூநகரி,ஜன.16

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி கோட்டக்கல்விப் பணிமனைக்கு நிரந்தரக் கட்டடமின்மையால் இடநெருக்கடி தோன்றி மிகுந்த சிரமங்கள் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பணிமனை தற்போது ஜெயபுரம் மகாவித்தியாலயத்தின் அறையொன்றில் மிகுந்த இடநெருக்கடிகளுடன் இயங்கி வருகின்றது. கல்விசார் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு ஜெயபுரம் மகாவித்தியாலயத்தின் மண்டபங்களை இரவலாகப் பெறவேண்டிய அவல நிலையில் கோட்டக் கல்விப் பணிமனை காணப்படுகின்றது. இதனால் சிலவேளைகளில் சிரமங்களும் தோன்றுகின்றன. அத்துடன் அறையொன்றில் இயங்குவதால் பெரும் இடநெருக்கடியும் தோன்றியுள்ளது. இதனால்இதனை நாடிவரும் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்கள் சிரமங்களின் மத்தியிலேயே தமது கருமங்களைப் பூர்த்தி செய்யும் நிலை காணப்படுகின்றது. இந்தப் பிரதேசத்திலே மக்கள் மீள்குடியேறி ஒரு வருடம் பூர்த்தியான போதிலும் கோட்டக் கல்விப் பணிமனைக்கென ஒருநிரந்தரக்கட்டடத்தைப் பெறுவதில் அதிகாரிகள் அசிரத்தையாக இருப்பது பலருக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## சமுதாய மீளமைப்பில் முல்லைத்தீவில் கட்டடங்கள் அமைப்பு


முல்லைத்தீவு,ஜன.16

வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.

முல்லைத்தீவு நகர பிரதேச செயலர் பிரிவில் விவசாயப் பிரதிப்பணிப்பாளர் விரிவாக்கல் அலுவலகமும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களப் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான வதிவிடமும், முல்லைத்தீவு நகர பிரதேச செயலர் பிரிவில் கட்ட டங்கள் திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகமும் மீளமைப்புச் செய்யப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திலும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் இளம் ஆடவர்களுக்கான வதிவிடம், உத்தியோகத்தர்களுக்கான தங்குமிடம் ஆகியவை மீளமைப்புச் செய்யப்படவுள்ளன. இதனால் அரச உத்தியோகத்தர்கள் நன்மை பெறுவர். (க-121)

ஒளி வீசட்டும்...



ஒளியேற்றும் மழலையர்: கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியிலிருந்து தரம் ஒன்றுக்குச் செல்லும் சிறார்களை வழியனுப்பி வைக்கும் நிகழ்வில் சிறார்கள் சுடர்களை ஏற்றுகின்றனர். (405)

## இரு பாடசாலைகள் திறந்து வைப்பு

கிளிநொச்சி,ஜன.16

கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் தைத்திருநாளான நேற்று அறநெறிப் பாடசாலையும் முன்பள்ளிப் பாலர் பாடசாலையும் நேற்றுத் திறந்து வைக்கப் பட்டன.

வடமாகாணப் பொதுநிர்வாகப் பிரதிப் பிரதம செயலாளரும், கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்திய ஆணையாளருமான தி.இராசநாயகம் இந்தப் புதிய இரு பாடசாலைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இதன்மூலம் 230 மாணவர்கள் நன்மையடையவுள்ளனர். மேற்படி இரு பாடசாலைகளும் புதுமுறிப்பில் இயங்கும். அறநெறிப் பாடசாலையிலும் முன்பள்ளிப் பாலர் பாடசாலையிலும் கல்விகற்க விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதிப் பிரதம செயலாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை- நேற்று 230 முன்பள்ளி மாணவர்களுக்கும், அறநெறிப்பாடசாலை மாணவர்ளுக்கும் கல்வி உபகரணங்கள் அடங்கிய பாடசாலை கல்விப் பொதி வழங்கி ஊக்குவிக்கப்பட்டது. (க-302)

# பூநகரிப் பிரதேச விவசாயிகளுக்கு போதனாசிரியர்கள் உதவாத நிலை

பூநகரி,ஜன.16

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச விவசாயிகளுக்கு விவசாயம் தொடர்பான போதனைகள் கிடைக்காத நிலை நீண்ட காலமாகத் தொடர்ந்த வண்ணம் உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதனால் பயிர்ச் செய்கை தொடர்பாகச் சரியான விளக்கம் இன்மையால் விவசாயிகள் விவசாயத்தில் நட்டத்தை அடைந்து வருகின்றனர். பூநகரி பிரதேசத்தில் பயிர்ச்செய்கைக்கு உகந்த மண், வளமான நீர், ஊக்கமுள்ள பயிர்ச்செய்கையாளர்கள் காணப்பட்ட போதிலும் பயிரினங்கள் பற்றிய விளக்கம், விவசாயத்தை விவசாயப் பொறியியல் முறையில் செய்தல், போகத்துக்கேற்ப பயிர்ச் செய்கையில் ஈடுபடுதல், புதிய இனப்பயிரினங்களை நடுதல் போன்றவற்றில் பூரண அறிவு இல்லாத நிலையில் உள்ளனர். இதற்கு விவசாயப் போதனாசிரியரின் சேவை இங்கே கிடைக்காமையே காரணம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாயப் போதனாசிரியர்கள் களத்துக்கு வந்து நிலைமைகளை பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

எனவே விவசாயப் போதனாசிரியர்கள் விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு தங்களுக்குத் தேவையான போதனைகளை வழங்கி பயிற்செய்கையில் தாம் இலாபத்தை ஈட்டுவதற்கு உதவ வேண்டுமென இந்தப் பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-406)

## ஆற்றுகைப் பகிர்வு

கிளிநொச்சி,ஜன.16

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினரால் ''ஆற்றுகைப் பகிர்வு'' எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூலில் போரின் போது ஏற்பட்ட அழிவுகளுக்கான அபிவிருத்திப் பணிகள் மற்றும் மாவட்ட செயலகத்தால் வழங்கப்பட்ட நிர்வாக செயற்திட்டங்கள், மக்களின் வாழ்வினை கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் போன்றவை அடங்குகின்றன. (க-313)

## இரண்டுபேர் தெரிவு

ஜப்பானில் நடைபெறவுள்ள செயலமர்வு ஒன்றில் கலந்து கொள்வதற்கு கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இரண்டு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 11 ஆம் திகதி ஜப்பானில் "சமாதானமும் நட்புறவும் மீள்கட்டுமானமும்'' என்ற தொனிப்பொருளில் செயலமர்வு ஒன்று நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்வதற்கு நாடளாவிய ரீதியில் 26 அரச உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இருவரும் அடங்குவர்.

கிளிநொச்சி மாவட்ட உதவித்திட்டமிடல் பணிப்பாளர் என்.கௌரிதாசன், பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் ஆகியோரே அந்த இருவருமாவார். போருக்குப் பின்னரான அபிவிருத்தி மற்றும் வளப்பற்றாக் குறை தொடர்பாக இந்தக் கருத்தரங்கில் கருத்துரைகள் வழங்கப்படவிருக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இந்த இரு உத்தியோகத்தர்களின் பயணத்துக்கான அனுசரணையை ஜெய்க்கா நிறுவனம் வழங்கவுள்ளது.

# வன்னி அரச அலுவலர்களுக்கு மேலதிகமாக ஒரு பஸ் சேவை

கிளிநொச்சி,ஜன.16

வன்னிப் பிரதேசத்தில் கடமையாற்றும் அரச அலுவலர் கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு விசேட பஸ்சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தினமும் காலை 5.50 மணிக்கு யாழ்.பஸ்நிலையத்தில் இருந்து புறப்படும் பஸ்வண்டிக்கு மேலதிகமாக ஒரு பஸ்சேவை காலை 6.10 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதனால் கண்ணகி நகர் விசுவமடு- கண்டாவளை- பரந்தன்பகுதி அரச அலுவலர்கள் ஆசிரியர்கள் முழு நன்மை அடைவர்.

வடக்கு மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளரும் கிளிநொச்சி- முல்லைத்தீவு பிராந்திய ஆணையாளருமான தி.இராசநாயகம் இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

யாழ்.நகரப் பிரதேச்தில் இருந்து 120க்கும் மேற்பட்ட அரச அலுவலர்கள் வன்னிப் பிரதேச அரச செயலகங்களிலும் பாடசாலைகளிலும் கடமையாற்றுகின்றனர்.

இவ்வாறான ஆசிரியர்கள், அரச அலுவலர்களின் நிலையை கிளிநொச்சி வடபிராந்திய போக்குவரத்துச் சபைச்சாலை அத்தியட்சகருக்கும் பிராந்திய முகாமையாளருக்கும் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து தினமும் மேலதிகமாக ஒரு பஸ் சேவையை அதிகரித்து வழங்கியுள்ளனர். (க-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரைத் தாக்கிவிட்டு தப்பிக்க முயன்றவர் கைது

கண்டி,ஜன.16


கைது செய்ய முயன்றபோது பொலிசாரைத் தாக்கிவிட்டு தப்பியோட முயன்ற நான்கு வாலிபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நால்வரையும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் அதுவரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதிவான் லலித் ஏக்க நாயக்க கடந்த செவ்வாய்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

பிலிமத்தலாவா நகரில் கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் ஆட்டோ ஒன்றில் இந்த நால்வரும் அதிக மதுபோதையுடன் பயணித்துள்ளனர். இடைநடுவில் ஆட்டோவை நிறுத்திய பொலிசார் அவர்கள் ஆட்டோவில் வீதி ஒழுங்குகளை மீறிச்சென்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்தனர்.

எம்பிலிகம மற்றும் கிரிபத்கும்புர பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு வாலிபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் நடைபெறுவதாகவும் கடுகண்ணாவை பொலிசார் தெரிவித்துள்ளனர். (204-5)

அவலத்தில்...



பயம்: கண்டி போகம்பரை மைதானத்தைச் சுற்றியுள்ள ஹந்தானைப் பகுதி மண்ணரிப்பு பாயத்தை எதிர்நோக்குகின்றது.

## 'பெரக் பிளேன்' வாவி பெருக்கெடுப்பால் பயிர்ச்செய்கை பெரும் பாதிப்பு

நுவரெலியா,ஜன.16

பெய்து வரும் அடைமழையால் நுவரெலியா பெரக்பிளேன் வாவி பெருக்கெடுத்ததையடுத்து அப்பிரதேசத்தி லுள்ள பயிர்ச்செய்கைகள் யாவும் பெரும் பாதிப்புக்குள் ளாகியுள்ளன என அப்பிரதேச விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக கரற், லீக்ஸ், உருளைக்கிழங்கு, பீட்ரூட் போன்ற மரக்கறிகள் ஏற்கனவே நீரில் மூழ்கி அழுகத் தொடங்கியுள்ளன.

அத்துடன் இந்த வாவியின் பெருக்கெடுப்பு மேலும் நிலைமையை மோசமாக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

உரிய நேரத்தில் இந்த வாவியின் வான் கதவுகள் திறக்கப்படாத காரணத்தாலேயே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுவரை சுமார் 25 லட்ச பெறுமதியான மரக்கறிகள் அழிவடைந்துள்ளன.

இந்த அனர்த்தம் சம்பந்தமாக நுவரெலியா பிரதேசச் செய்தியாளரும் அரச அதிபருமாகிய டீ.பபீ.ஜீ. குமாரசிறிக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் இந்த விடயம் பற்றி ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தாகவும் விவசாயிகள் மேலும் தெரிவிக்கின்றனர். (204-5)

## தென்னங்கன்று விநியோகிக்க நடவடிக்கை

பதுளை,ஜன.16

பதுளை மாவட்டத்தில் தென்னங்கன்றுகளை விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆதிவாசிக் கிராமங்களில் 2300 வீட்டுத்தோட்டங்கள் என்ற திட்டத்தின் கீழ் 20465 தென்னங்கன்றுகளும், கிராம எழுச்சி கூட்டிணைப்புத் திட்டத்தின் கீழ் 10785 கன்றுகளும் விவசாய சேவை கூட்டிணைப்புத்திட்ட்ததின் கீழ் 15, 017 கன்றுகளும் ஜனாதிபதியின் பிறந்த தினத்தையொட்டி 6000 கன்றுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. (204-5)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு அநுராதபுரத்தில் நிவாரணம் சேகரிப்பு

வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக அநுராதபுரத்தில் நிவாரணப் பொருள்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அநுராதபுரம் வியாபார சங்கங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நிவாரணப் பொருள்கள் சேகரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை பள்ளி வாசல்கள் தோறும் நேற்று முன்தினம் ஜும்மாத் தொழுகையுடன் நிவாரணப் பொருள்கள் சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உலர்உணவுப் பொருள்களான பால்மா, போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர், பாய், நுளம்பு வலைகள் உட்பட பல பொருள்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

தொடர் மழை காரணமாகப் பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் நலன்புரி நிலையங்களிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

இவர்கள் தமது அன்றாட உணவுத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யமுடியாத நிலையில் அவலங்களை எதிர்கொண்டுள்ளமை அனைவரும் அறிந்தது.

இந்நிலையில் பல்வேறு அமைப்பினரும் இவர்களுக்கு உதவும் வகையில் பொருள்களை சேகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (204)

இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
20 . 06 . 1945



உதிர்வு
06 . 02 . 2009

அமரர் சண்முகராசா இலங்கைநாதன்
(உரிமையாளர், அன்னராஜா ஸ்ரோஸ், யாழ்ப்பாணம்)
திதி: துவாதசி (16.01.2011)

அப்பா என்று அழைக்க
அன்புடனே எம்மை அரவணைத்தீர்
அன்புமொழி பேசி ஆதரவாய் எமக்கிருந்தீர்
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
இரண்டாண்டுகள் சென்றதப்பா ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம் மீண்டும்
இப் பூவுலகில் பிறப்பீர்கள் எம் அப்பாவாய்
மீளாத்துயிலில் நீங்களும்
மீளாத் துயரில் நாங்களும்....

(109078)

639/1, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவி

கொழும்பு,ஜன.16

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் முகமாக அவர்களுக்கான மருந்துகள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்காக சுகாதார அமைச்சின் அனர்த்த நிவாரணப்பிரிவு 24 மணித்தியாலயங்களும் இயங்கி வருவதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

கொழும்பின் பிரதான மருந்து உபகரணக் களஞ்சிய சாலைகளும் 24 மணித்தியாலங்களும் இயங்கி வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவ நிவாரணத்தில் எவ்வித தடையோ ஏற்படக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையிலேயே சம்பந்தப்பட்ட சகல பிரிவுகளும் 24 மணித்தியாலமும் விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (204-5)

Web Designing / Development
உங்கள் நிறுவனங்களின் அதிகார பூர்வ இணையத்தளங்கள் மற்றும் தனிப்பட்ட தளங்களை சர்வதேச தரம் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக எம்மிடம் வடிவமைத்துக் கொள்ள முடியும்.
.com வருடத்திற்கு ரூ.1000 மட்டுமே.
Web Hosting Packages
500 MB - Rs.1000 / Year
Call 021 222 0261 0779 471 771
இல 214, யாழ்-மானிப்பாய் வீதி [வைத்தீஸ்வரா கல்லூரி அருகில்]
webster networks

உங்கள் உயர்கல்வியை LONDON ல் தொடர...
With A/L
No Need IELTS
INTAKES @ January, February, March, April



Note
Conditional Offer and CAS Statement Within 5 Days

We expert in Student Visas for,
UK, INDIA
SINGAPORE
MALAYSIA, UKRAINE
NEWZELAND, CYPRUS

AREA OF STUDIES...
- MBBS, MS, MD [Ukraine, India]
- COMPUTING & IT
- BUSINESS & MANAGEMENT
- ACCOUNTING & FINANCE
- TRAVEL & TOURISAM
- DESIGNING & ARCHITECTURE
- ENGINEERING
- HOTEL MANAGEMENT
- LANGUAGE & EDUCATION

Minimum Entry Qualification : O/L or Equivalent

Our Services for Students :
Visa Counseling & Consulting
Visa Processing
Career Advice
Scholarship
Accommodation
Travel Document
Airport Pick-Up
Part Time Jobs
Tourist Visa
Dependent Visa
Visit Visa
Appeal & Re-apply
Financial Support

SPONSOR களுக்கான ஆலோசனைகள் வழங்கப்படும்

OSIEG
www.sriramieg.org
Jaffna Office: 111/2, Brown Road, Kokuvil East, Jaffna. Tel: 021-2221875
Kotahena Office: 169, George R De Silva Mawatha, Kotahena, Colombo-13. Tel: 011-2434989, 011-2434767
After Office Hours & Sundays Please Contact - 077 3502612

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல் ஏற்படக் காரணம் தமிழரின் பிரிவினைவாதமாகும்

கொழும்பு, ஜன.16

யாழ். குடாநாட்டில் தொடர்ந்து இடம்பெற்று வரும் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல்களுக்குக் காரணம் தமிழர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள பிரிவினைவாதமாகும். யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் சிலரிடையே குரோதம் காணப்படுகிறது என்று சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப் பேரவை தெரிவித்துள்ளது.

சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப் பேரவை ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாடு தேசிய நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்தப் பேரவையின் உப தலைவர் மாதுலுவாகே சோபித்த தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்து சமாதானம் மலர்ந்துள்ள நிலையில் இனங்களுக்கு இடையில் மீண்டும் பிரிவினை ஏற்படாது சமாதானத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். பிரிவினை வாதத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளாது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மலர்ந்துள்ள சமாதானத்தைக் காத்துக் கொள்வதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் தீர்மனித்துள்ளோம். இதற்காக யாழ்ப்பாணம், வவுனியா, அநுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, நுவரெலியா, கண்டி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் பிரதிநிதிகளை ஏற்படுத்தி அம் மாவட்டங்களில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# தேர்தலில் வெற்றிபெற கட்சியினர் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

கொழும்பு, ஜன. 16

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்டுவதற்காக கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்தோ அல்லது பதவி நியமனங்கள் குறித்தோ வாதிடுவதில் அர்த்தமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைவரும் கூட்டாக இணைந்து எதிர்வரும் தேர்தலுக்கு முகங்கொடுக்க தயாராக வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல்களின் பின்னர் பதவிகள் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்த பிரச்சினைகள் எழுப்பப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இததேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலேயே போட்டியிடும் என ஐ.தே.க. செயற்குழு முடிவு செய்துள்ளது. (சி)

## நிதி திரட்டும் களத்தில் ஐ.நா. சபையும் ஈடுபாடு

கொழும்பு, ஜன. 16

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகச் சர்வதேசத்திடம் இருந்து உதவிகளை கோரவிருக்கிறது என ஐக்கிய நாடுகள் சபை எனத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள்சபையின் நியூயோர்க் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது ஐ.நாவின் பேச்சாளர் மார்டின் நெசர்கி மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி நீல் புஹனே, வெள்ளத்தின் பாதிப்புகள் குறித்து விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காகத் தற்போது ஐக்கிய நாடுகள் சபை நிவாரணங்களை வழங்கி வருகிறது. தொடர்ச்சியாக இந்த உதவிகளை வழங்குவதற்கு ஐ.நா. தயாராக இருக்கிறது எனவும் நெசர்கி தெரிவித்துள்ளார். (சி)

## சுத்தமாக வாழ...



சிரமதானம்: யாழ்.பழைய பொலிஸ் நிலைய வளாகத்தில் வளர்ந்திருந்த பற்றைகளைத் மாநகரசபை ஊழியர்கள் துப்புரவு செய்கின்றனர். (23)

## கிழக்கு வெளிப்பதால் முகாம் எண்ணிக்கை குறைவடைகிறது

கொழும்பு, ஜன. 16

மழையினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாம்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது.

633 முகாம்களில் இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். எனினும் தற்போது அந்த முகாம்களின் எண்ணிக்கை 594ஆகக் குறைவடைந்துள்ளது என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி அசாதாரண காலநிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கையும் மூன்று லட்சத்து 67 ஆயிரத்து 143 ஆகக் குறைவடைந்துள்ளது.

எனினும் வெள்ளப்பெருக்கினால் தொடர்ந்தும் 2 லட்சத்து 83 ஆயிரத்து 651 குடும்பங்களைச் சேர்ந்த 10 லட்சத்து 55 ஆயிரத்து 185 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

அசாதாரண காலநிலையின் காரணமாக 27 பேர் இதுவரையில் பலியாகியுள்ளனர். அத்துடன் 12 பேர் காணாமல் போயுள்ளனர். மேலும் 47 பேர் காயமடைந்துள்ளனர். (சி)

# கடும்குளிரும் அடைமழையும் தொடரும்

## வளிமண்டலவியல் திணைக்களம்

கொழும்பு,ஜன 16

கடும்குளிரும் அடைமழையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை தொடரலாம். எனவே முதியோர்களும் குழந்தைகளும் மிகவும் அவதானத்துடனிருக்க வேண்டும். அத்தோடு மத்திய மாகாணத்தில் வெப்பநிலை மேலும் குறைவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜி.பி. சமரசிங்க தெரிவித்தார்.

பணிப்பாளர் நாயகம் ஜி.பி.சமரசிங்க மேலும் கூறுகையில்,

பொதுவாக மட்டக்களப்பில் வருடத்திற்கு 1650.9 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சியே காணப்படும். ஆனால் கடந்த 40 நாள்களுக்குள் 1859 மில்லி லீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அதேபோன்றுதான் கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் கடும் குளிரான காலநிலை நிலவுகின்றது.

1950 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆகக்குறைந்த வெப்பநிலையாக 18.8 பாகை செல்சியஸ் கொழும்பில் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது. அதேபோன்று நுவரெலியாவிலும் 1923 ஆம் ஆண்டிற்குப் பிறகு 7.9 பாகை வெப்பநிலை நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளது. 1929 ஆம் ஆண்டில் நுவரெலியாவில் 2.6 பாகையான மோசமான வெப்பநிலையே பதிவாகியிருந்தது.

பொதுவாக டிசெம்பர், ஜனவரி மாதங்களில் சாதாரண குளிர் நிலை காணப்படும். ஆனால் வழமைக்கு மாறாகத் தற்போது காணப்படும் சீரற்ற காலநிலைக்கு லாநினா என்ற காலநிலையைக் குறிப்பிடலாம்.

பருமனான முகில்கள் மற்றும் பருவப்பெயர்ச்சிகளினால் சூரியக் கதிர்வீச்சு பூமியை வந்தடைய ஏற்படும் இடைவெளிச் செயற்பாடுகளினாலேயே காலநிலையில் மாற்றம் ஏற்படுகிறது. இந்தக் காலநிலை மாற்றம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை தொடரலாம் எனக் கூறினார். (த)

## பாக்.இராணுவ தளபதி வருகை

கொழும்பு, ஜன.16

பாகிஸ்தான் இராணுவத் தளபதி அஸ்ரப் பெர்வஸ்கயானி 3 நாள்கள் பயணமாக இலங்கை வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஆகியோரைப் பாகிஸ்தானிய இராணுவத்தளபதி சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளார் என்றும் தெரியவருகிறது.

எதிர்வரும் 19 ஆம் திகதி பாகிஸ்தான் இராணுவத் தளபதியின் இலங்கை வருகை ஆரம்பமாகும்.

## முறையற்ற ஆட்சியால் இலங்கைக்கு சாபம்

### எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முறையற்ற ஆட்சியினால் இலங்கைக்கு கடவுள் சாபமிட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எல்லா மதத்தின் கீழும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்த சாபம் கிடைத்துள்ளதாக அவர் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சிறந்த ஆட்சி முறை ஒன்று ஏற்படுத்தப்படும் வரையில், இந்த சாபம் தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியல் அமைப்பையும் புத்த சாசனத்தையும் மீறி செயற்பட்டு வருகின்ற மஹிந்த ராஜபக்ஷவினால், நாட்டுக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சாபத்தினாலேயே இலங்கையில் தொடர்ச்சியாக பல இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனடா உதவி

கொழும்பு, ஜன. 16

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குமாறு சர்வதேச நாடுகளுக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்து கனடா 6000 குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு உடனடியாக உதவவேண்டியுள்ள நிலையில் இலங்கையில் உள்ள இலங்கைக்கான கனேடியப் பொருளாதார அபிவிருத்தி உதவி நிலையம் [illegible] கூடிய தருணம் இது என்றும் இலங்கைக்கான கனேடியத் தூதர் புரூஸ் லெவி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை அரசு மற்றும் ஏனைய முக்வர்கள் கேட்டுக்கொண்டவை தொடர்பிலும் அதிக கவனம் கெள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் பாதிக்கப்பட்டோருக்கு இலங்கையில் உள்ள கனேடிய பொருளாதார அபிவிருத்தி உதவி நிலையம், அவசர அடிப்படைத் தேவைகளையும் மற்றும் தங்குமிட வசதிகளையும் சுமார் 6000 குடும்பங்களிற்கு வழங்கவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாங்கள் இவ்வாறு உதவி வழங்குவது மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காகவே எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த மக்களுக்கு உதவி வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் இக்கட்டான நிலைகளில் அவர்களும் மற்றவர்களுக்கு உதவ முன்வரவேண்டும் என்பதற்காகவே எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாகனங்கள் விற்பனைக்கு



டொயோட்டா விட்ஸ் 8 எயர்பேக் ABS/ TV, A/C, PS/PW விங்கர் மிரர், சில்வர்/ கறுப்பு நிறங்களில் 2007அதிசிறந்த நிலையில் உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு.

எலியன் NZT 260 - 1500cc சில்வர் நிறம் பேஜ் இன்ரீறியல், TV, CD, MD,றிவர்ஸ் கெமரா,பொக்லாம்ப், 38000 km, நல்ல நிலையில் உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு.





டொயோட்டா டயனா (DYNA) ரூட் வான் 2000Kg, A/C, PS, P/W மெனுவல் 2003 மொடல், வெள்ளை நிறம் அதிசிறந்த நிலையில் உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு.

TOYOTA AX!O ஓட்டோ Xகிறேட் HID Limited செனோன் லைட், ஸ்குரூப் லைட், வெள்ளை நிறம், TV, றிவர்ஸ் கெமரா, RPM மீட்டர், பேஜ் இன்ரீறியல் 18000Km, உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு.



தொடர்பு : 107/1 ஆஸ்பத்திரி வீதி தெஹிவளை,
Tel: 0117 200098 , Mob:0722 433033


# இலங்கையிலுள்ள யானைகளைக் கணக்கிட வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் ஏற்பாடு

கொழும்பு, ஜன.16

இலங்கையின காடுகளில் வாழும் ஆண் யானைகள் மற்றும் பெண்யானைக் கணக்கிட்டு மதிப்பீடொன்னை மேற்கொள்வதற்கு வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை பூராவிலுமுள்ளஆண், பெண் யானைகள் தொடர்பான மதிப்பீடொன்று இதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொளப்பட்டடுள்ளதோடு அந்த மதிப்பீட்டின் தகவல்கள் சம்பந்தமாக திருப்தியும் இயலாது போயுள்ளதன் காரணமாவே மீளவும் இஙவிதம் மதிப்பீடொன்று மேற் கொள்ளப்படவுள்ளது.

வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் வசமுள்ள தகவல்களுக்கு அமைய இலங்கையிலுள்ள காடுகளில் ஆராயிரம் வகையிலான ஆண், பெண்யானைகள் வாழ்வதாகத் தெரியவருகிறது.

அத்தோடு மனிதர்களுகுக்கும் யானைகளுக்குமிடையில் ஏற்படும் மோதல்கள் காரணமாக ஆண் யானைகள் பெண் யானைகள் என்றவாறு ஆண்டொன் றில் இருநூறு யானைகள் வரையில் உயிரிழப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

(ம-22)


## காணி விற்பனைக்கு

சுந்தர்மடம், பழம் வீதியில் (Old Road) இல.[20], 56/2, வீட்டிற்கு முன்பக்கமாக அமைந்துள்ள, நிலப்பரப்பு 1குளி 14.72 [கிட்டத்தட்ட 1 3/4 நிலப்பரப்பு] விஸ்தீரணமுள்ள, 1/2 வாசிக் கிணற்றுப் பங்கை உள்ளடக்கிய சதுரமான காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு: 0773265237, 0212220430


# சண்டிலிப்பாய் மத்தியஸ்த சபையில் ஐநூறு வழக்குகள்

நவாலி,ஜன.16

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் மத்தியஸ்த சபையில் கடந்த வருடம் மட்டும் ஐநூறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 400 வழக்குகள் சமரசமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது, ஐம்பது வழக்குகள் விசாரணையில் உள்ளன. மேலும் ஐம்பது வழக்குகள் நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்குகளில் எல்லைப் பிரச்சினைகள் சபையினரால் நேரில் சென்று பார்வையிட்டு தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்கள் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லாமல் எவ்வித பணச் செலவுகளுமின்றித் தீர்ப்புப் பெற்றுக் கொண்டதுடன் சபையினருக்கு நன்றிக ளையும் தெரிவித்துள்ளனர்.

(ம-100)

## ஜனவரி மாத உதவிப்பணம்

நவாலி,ஜன.16

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள், காசநோய், புற்றுநோய் உதவிப் பணம் பெறுபவர்கள் ஆகியோருக்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் ஜனவரி மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி. அருந்தவச் செல்வம் கேட்டுள்ளார்.

(ம-100)

## வீதியைப் புனரமைப்பு செய்வதற்கு நிதி

கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட உள்ளக வீதி புனரமைப்பதற்கு 'கமநெகும' திட் டத்தின் கீழ் 16 லட்சம் ரூபா வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தை ஒப்பந்த அடிப்படையில் கொழும்புத் துறை றொசாறியன் சன சமூக நிலையம்மேற் கொண்டுள்ளது. வீதிஅமைப்பு பணிகள்முடிவுறும்நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-135)

# மரண அறிவித்தல்கள்

## அரியாலை திருமதி குமாரசுவாமி இராசம்மா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ் சென்றவர்களான திருமதி செல்லப்பா- பார்பதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சொக்கலிங்க வாத்தியார் என்று அன்பாக அழைக்கப்படும் குமாரசுவாமி அவர்களின் அன்பு மனைவியுமாகிய திருமதி இராசம்மா குமாரசுவாமி அவர்கள் (13.01.2011) வியாழக்கிழமை லண்டனில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியாலையைச் சேர்ந்த செல்லம்மா, பாக்கியம், இராசதுரை, நடராசா, சிவலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியநாதன் (லண்டன்), பத்மாதேவி (அவுஸ்திரேலியா), சரவணபவான் (கனடா), முத்துக்குமாரசாமி (கொழும்பு), யசோதா (லண்டன்), உருத்திராதேவி (லண்டன்), பாசுபதன் ( யாழ்ப்பாண அஞ்சல் திணைக்கள ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்), வாசவன் (லண்டன்), கெங்காதரன்(லண்டன்), ஐங்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான அரியாலையைச் சேர்ந்த பரமேஸ்வரி, சரோஜினிதேவி, கிருஷ்ணபிள்ளை மற்றும் மாணிக்கராசா (அவுஸ்திரேலியா), சுமணாவதி (கொழும்பு), சவுந்தரராஜா (லண்டன்), தேம்பாமலர் (அரியாலை), சுதாமதி (லண்டன்), கமலாசனி (லண்டன்), விஜயகுமாரி (லண்டன்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரப்படி பி.ப.1.30 மணிக்கு நடைபெற்று பி.ப.3.30 மணிக்குத் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குமாரசுவாமி பாசுபதன், 14/2, ஆள்காட்டி வீதி, அரியாலை. தொ.பே: 0215100070
குமாரசுவாமி முத்துக்குமாரசாமி, B12, பெறிங்டன் பிளட்ஸ், பெறிங்டன் அவனியூ, கொழும்பு. (தொ.பே: 0114253141)
திருமதி யசோதா கிருஷ்ணபிள்ளை, 23,கொலின்ஸ் அவனியூ, ஸ்டான்மோர் HA71D1, லண்டன். தொ.பே:00442082044936)

## சித்தர் கணேசு

(இளைப்பாறிய கிராம அலுவலர், கரவெட்டி.)



மத்தொனி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சித்தர் கணேசு (G.S) 14.01.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தர்-பத்தினி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-புதியாள் தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற சிதம்பரத்தின் அன்புக் கணவரும், நல்லதம்பி, சின்னத்தம்பி, சின்னம்மா, இராசதுரை, வீரகத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவநேசன் (ஜெயா ஓவ் (f) செட், கொட்டாஞ்சேனை), பாமினி (இலங்கை வங்கி, திருநெல்வேலி), காந்திநேசன் (கண்ணன்-கனடா), சிவநேசன் (லண்டன்)ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயவதனி (ஆசிரியை, கொழும்பு), சாந்தகுமார் (தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்), நிராஞ்சலி (கனடா) ஆகியோரின் மாமனாரும் கந்தசாமியின் (ஜேர்மனி) மைத்துனரும், ஜெயராணியின் சகோதரனும், ஹேமஷாயினி, நிவேதன், பவித்திரன், பிரஷாந், அக்ஷயா, லக்ஷியா, அபினா, றிசோனா, நிதிஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே: 0212264206,
0777271478.
திருமகள் சோதி வீதி,
நெல்லியடி.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## கனகரத்தினம் தவராசா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் தவராசா (ஓய்வுபெற்ற ஊழியர்-யாழ்.தொலைத்தொடர்புத் திணைக்களம்) நேற்று முன்தினம் (14.01.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்-சிவயோகம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை-இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும் றுபேஷ், ராஜேஷ், கோபிராம் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்றவர்களான நகுலேஸ்வரன், லோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மராணியின் மாமனாரும் டிஷானின் பேரனும், கிரிதரன்,கோகுலராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அரவது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

134, புங்கங்குளம்வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## வாரித்தம்பி சுப்பிரமணியம்

நாகர்கோயில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வலிக்கண்டி குடத்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி சுப்பிரமணியம்15.01.2011 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி- மயிலாத்தை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு- நாகமுத்து தம்பதியரின் மருமகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் விநாயகமூர்த்தி, தடாகவதி (கிளி), யோகதாஸ், மனோகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அருந்தவமலர் (தேவி), துரைசிங்கம், றஞ்சினிதேவி, செல்வகுமாரி(திரவியம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் குடத்தனை இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வலிக்கண்டி,
குடத்தனை.

தகவல்:
சு.விநாயகமூர்த்தி (மகன்).


ஓகன் இசை அரங்கேற்றம்



இசை ஆசிரியர் கலாபூஷணம் கலைஞானச்சுடர்
எஸ்.பொன்னுத்துரை அவர்களின்
மாணவர்கள்
செல்வி துவாரகி சுரேஷ்குமார்
செல்வி சதுர்ஷிகா சதீஸ்
செல்வி சுபோதினி சிவகுமார்
செல்வி மயூரசி சுரேஷ்குமார்
இணைந்து வழங்கும்



ஓகன் இசை அரங்கு

காலம்: 16.01.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணி
இடம் : கலைத்தூது கலையகம்
(திருமறைக்கலாமன்றம் அருகில்)
286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
பெரியோர்கள், கலைஞர்கள் , நண்பர்கள் , அன்பர்கள் , உறவினர்கள் அனைவரும் வருகைதந்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

Dr.சு.சுரேஷ்குமார் குடும்பத்தினர்
15,சம்பியன் லேன்,
கொக்குவில்.

திரு.க.சதீஸ் குடும்பத்தினர்
நந்தாவில் லேன்,
கொக்குவில்.

திருமதி.இ.சிவகும குடும்பத்தினர்,
56, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.

தகவல்
Dr.சு.சுரேஷ்குமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாக்களின் ஆத்மா

உதயன் 25 மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
வெள்ளிவிழா சிறுகதைப் போட்டியில்
பாராட்டுப் பெற்ற சிறுகதை 2

**கொற்றை பி.கிருஷ்ணானந்தன்**

இரவு எனக்கு இதமாக இருக்கவில்லை. எல்லோருமே ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறார்கள் என்னைத் தவிர, என்பதை உணர்கிறேன். உள் விறாந்தையில் என் மனைவி பிள்ளைகளும் தங்கச்சியும் படுத்திருக்கிறார்கள். மற்றவர்கள் அடுத்தடுத்த அறைகளில்.

என் தலையணை கண்ணீரால் நனைந்திருக்கிறது. நான் அழுவதை ஒருபோதும் எவருமே பார்த்திருக்க முடியாது. எழுந்து உட்காருகிறேன். என்னுடனே படுத்திருக்கும் என் இளைய மகளைப் பார்க்கிறேன். ஒருக்களித்துப் படுத்திருக்கிறாள். விறாந்தைக்கு வெளியே எரியும் பல்ப் வெளிச்சத்தில் அவளின் முகம் மங்கலாகத் தெரிகிறது. அம்மாவின் முகம் அவளில் அப்படியே அப்பியிருந்தது. அதனால் தானோ எனது மற்றப் பிள்ளைகளைவிட அவளில் கூடுதலான ஈர்ப்பிருக்கிறது என நினைத்துப் பார்ப்பதுமுண்டு. தனது மகள் தனது தாயைப் போல என மற்றவர்கள் சொல்லும் போது யாருக்குத்தான் சந்தோசமிருக்காது?

ஏன்?.... அம்மா கூட அவள் மீது வைத்திருக்கும் பாசம், வாஞ்சை கொஞ்சநஞ்சமல்ல. அவள் சாயலில் மட்டுமல்ல நிறத்திலும் தன்னைப்போல் கறுப்பாக இருந்ததாலோ என்னவோ அப்படியொரு பட்சம்.

தனக்குப் பதிலாக இனி அவள் இருக்கிறாள் என்று நினைத்துப் போலும் அவள் பக்குவப்பட்டு மூன்று மாதத்திலேயே அம்மா போய்விட்டா. வெளியே பார்க்கிறேன். கேற் திறந்திருக்கிறது. எட்டுச் செலவு முடியும் மட்டும் கேற் சாத்தி மூடக்கூடாதாம். வீட்டிலிருந்த ஒரு உறவு உயிர் பிரிந்து வெளியே போனால் அனுப்பிய உடனேயே எல்லாம் அடித்துச் சாத்தக்கூடாது என்ற மெல்லிய உணர்வின் வெளிப்பாடு போலும். பக்கத்தில் தண்ணீருடன் வாளி வைக்கப்பட்டிருக்கிறது.

நெருங்கிய உறவினர்களெல்லாம் இங்கேதான் தங்கச்சி வீட்டில் படுத்திருக்கிறார்கள். எட்டுச் செலவு முடியுமட்டும் இங்கே வந்துதான் படுப்பார்கள். எங்கள் துக்கம் குறையும் வரைக்கும் உடனிருந்து பங்கு கொள்ளும் பண்பு.

என் வீடு கூப்பிடு தூரத்திலிருந்தாலும் முப்பத்தோராம் நாள் வரைக்கும் நான், மனைவி, பிள்ளைகள் இங்கே தங்குவதென்று முடிவெடுத்துவிட்டோம். விடிந்தால் அம்மா போய் மூன்றாம் நாள். மூத்தக்கா, சின்னக்கா, இளையக்கா மூவரும் தங்கச்சியைத் தேற்றுவதில் தோல்வி கண்டிருந்தனர். நீண்டகாலம் அம்மாவைப் படுக்கையில் வைத்துப்பார்த்தெடுத்ததில் தங்கச்சிக்குச் சலிப்பு ஏற்பட்டதாக ஒருநாளும் நான் உணரவில்லை.

உயிரோடு அம்மாவைப் பார்த்து விடவேண்டுமென்று லண்டனிலிருந்து ஓடிவந்த கடைசித் தங்கச்சியோ அதைவிடக் கத்திக் கதறிக் களைத்திருந்தாள். பத்து வருடங்களுக்கு மேலாகப் பிரிவு அவளைப் பெரிதும் பாதித்திருந்தது. அம்மாவை இழந்த சோகம் என் நெஞ்சில் பாறாங்கல்லாய் அழுத்தினாலும் ஆள்களுக்கு முன்னே என்னால் அழுகையை அடக்க முடிந்திருந்தது. ஆனால் நேற்றிரவைப் போலவே இன்றிரவும் நித்திரை தூரப்போய்விட்டது.

கவலை... அது கண்ணீர் விட்டழுதால் குறையுமாமே. கண்ணீர் ஆறாகப் பாயட்டும். ஆனால் கவலை குறைய வேண்டாம். அம்மாவைப் பற்றிய நினைவுகள், பிரிவுத்துயரம் எல்லாமே ஆயுள் மட்டும் ஆழமாக இருப்பதுவும் ஒரு மனநிறைவுதான்.

நேற்றும் இன்றும் துக்கத்தில் கலந்துகொள்ள வந்தவர்கள் அம்மா எண்பது வயதுக்கு மேல் இருந்தவதானே, பரவாயில்லை என்கிறார்கள். எனக்கு நாற்பத்தைந்து வயது வந்தும் அம்மாவுக்கு நான் சின்னப்பிள்ளை போலத்தான். அப்படியே அம்மாவுக்கு எண்பது வயதுக்கு மேலென்றாலும் அம்மா அம்மாதான். பெரியம்மாவாகி விடுவாவா என்ன?

ஐயாவின் உழைப்பு குடும்பத்தைப் பராமரிக்கப் போதாத நிலையில் அம்மா பாய்,பெட்டி வியாபாரத்தைத் தொடங்கினா. அக்காவையை விலைப்படுத்துவதில் ஐயாவுக்குத் தோளோடு தோள் நின்றா. நான் படித்து நகரசபையில் கிளார்க்காக உத்தியோகத்தில் சேர்ந்து அம்மாவுக்குக் கட்டாய ஓய்வு கொடுக்கும் வரை கடுமையாகப் பாடுபட்டு உழைத்தா.

பாய்,பெட்டி வியாபாரத்தில் இருந்துதான் ஓய்வு கிடைத்ததே தவிர உண்மையில் அம்மாவுக்கு ஓய்வு கிடைக்கவில்லை. மூன்று அக்காவையினதும் இரண்டு தங்கச்சியினதும் பிள்ளைப்பேறு பார்த்தெடுக்க, பேரப்பிள்ளைகளைப் பராமரிக்க, அம்மாவின் உடலும் தளர்ந்து போக அதன்பின்னர்தான் உண்மையான ஓய்வு கிடைத்தது. இப்படியிருக்கிற நேரத்திலேதான் அந்த விபத்து நடந்தது. மூத்தக்காவின் வீட்டு வாசற்படியில் ஏறும்போது கால்தவறி விழுந்து இடுப்பெலும்பு உடைந்து விட்டது. துடித்துப் பதைத்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டோடினோம். ஒரு கிழமையாகச் சிகிச்சையளித்தார்கள். பின்னர் காலில் கம்பி புகுத்தி மண்மூடை கட்டி வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். வீட்டில் நான்கு நாள்களாக அம்மா பட்ட அவஸ்தை... அப்பப்பா... சொல்லியடங்காது. அக்காவையள், தங்கச்சி, நான் ஒருவருமே நித்திரை கொள்வதில்லை. எங்களால் பார்த்துச் சகித்துக் கொள்ளவும் முடியவில்லை.

இந்த நேரத்தில்தான் வெளிநாட்டிலிருந்து தங்கச்சியின் அறிவித்தல் வந்தது. கொழும்பில் தனியார் வைத்தியசாலையில் ரெலிபோன் மூலம் பேசி ஒழுங்கு பண்ணியிருக்கின்றேன். உடனே அம்மாவைக் கொழும்புக்குக் கொண்டு போங்கள் என்று.

நான் ஒருமாதம் லீவு போட்டேன். கொழும்பிலிருந்தே டொக்டர், நேர்ஸ் சகிதம் அம்புலன்ஸ் வந்தது. என்னுடன் மூத்தக்காவும் இளையக்காவும் வந்தனர்.

அம்மாவைக் கொண்டு சென்ற அடுத்த நாளே சத்திரசிகிச்சை நடந்தது. என்ன ஆச்சரியம்... அம்மாவின் எழுபது வயதில் செய்யப்பட்ட அந்த சத்திரசிகிச்சையின் மூன்றாம் நாளே அம்மா மெல்ல மெல்ல நடந்தா. அதன் பின் சாதாரணமாகிப் பத்து வருடங்கள் நடமாடித் திரிந்தா.வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் மிகச் சாமானியமான ஒருவருக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்திருக்குமா என்று பல தடவை நான் சிந்தித்துப் பார்த்ததுண்டு. அந்த வகையில் அம்மா கொடுத்து வைத்தவா.

அம்மாவை நினைத்து நாங்கள் எப்போதுமே பெருமைப்படுவதுண்டு. வருமானம் இல்லாத காலத்தில், அல்லது வயது போன நேரத்தில் புருசனை மதிக்காத பல பெண்களை என் வாழ்நாளில் நான் கண்டிருக்கிறேன். ஆனால் அம்மா அப்படியல்ல.

ஒருமுறை தங்கச்சியின் மத்தியானச் சமையல் பிந்திவிட்டது. ஐயாவுக்குச் சாப்பாடு கொடுப்பதற்காக அம்மா வந்து குசினியை அடிக்கடி எட்டிப்பார்த்தா. தங்கச்சிக்குக் கூடமாட அம்மா உதவி செய்துவிட்டுப் போயுங்கூட சமையல் முடியவில்லை. காலையில் சாப்பிடும் வழக்கமில்லாத ஐயா பசியோடிருப்பதை அம்மாவால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

''எடியே நீ எங்களுக்கு இனிச் சாப்பாடு தரவேண்டாம். நாளையிலிருந்து நான் புறம்பாகச் சமைச்சுக் கொய்யாவுக்குச் சாப்பாடு குடுக்கப் போறன்''

அவா சொன்ன மாதிரிச் செய்து போடுவா.. அப்படியான ஆள். தங்கச்சி வந்து எனக்கு விடயத்தைச் சொல்லி, அம்மாவை நான் சமாதானம் பண்ண வேண்டியதாகிவிட்டது.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் நான் சொன்னேன். ''அம்மாவுக்கு இப்ப லண்டன் மகள் மாதா மாதம் சிலவுக்குக் காசனுப்புகிற தாலை இந்த நடப்பு''

''போடா போ... நீங்களொருவரும் எங்களைப் பாக்க வேண்டாம். எங்கடை காணி வருமானம் எங்களிரண்டு பேருக்கும் வடிவாகக் காணும்....''

இப்படிச் சொன்னாலும் தனிக் குடுவை வைத்துச் சமைக்கிறதை அம்மா ஒருநாளும் செய்யவில்லை. நானும் மனைவியும் சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் சில சமயங்களில் பிரச்சினைப்படுவதுண்டு.

''போய் அப்பப்பா அப்பம்மாவை பார்த்தாவது திருந்துங்கோ இந்த வயதிலையும் என்ன மாதிரி ஒற்றுமையாய் இருக்குதுகள்''

இது எங்களுக்கான பிள்ளைகளின் புத்திமதி. அந்தளவுக்கு ஐயாவும் அம்மாவும் உதாரண தம்பதியினராக வாழ்ந்த வாழ்க்கையல்லவா அது.

கண்ணூறு பட்டதோ என்னவோ... ஒருநாள் ஐயா நெஞ்சைப்பிடித்துக் கொண்டு சரிந்தார். எழுந்திருக்கவேயில்லை. ஐயாவைக் கொஞ்சக் காலத்திற்காவது படுக்கையில் வைத்துப் பார்த்தெடுக்கக் கிடைக்கவில்லை என்பது அம்மாவின் தீராத கவலை. இரண்டு வருசத்திற்குப் பிறகு அண்ணர்- எங்கள் எல்லோருக்கும் மூத்தவர்- ஐயா போன வழியே போய்விட்டார்.

இந்த இரண்டு நிகழ்வுகளும் எங்கள் எல்லோரையும் பாதித்திருந்தாலும் அம்மாவை வெகுவாகப் பாதித்துவிட்டது. மெல்ல மெல்லப் படுக்கையில் இருந்துவிட்டார். மந்திகை, யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி என்று கொண்டு அலைந்ததுதான் மிச்சம். அம்மாவின் கதை பேச்சுக்கள் கூட வெகுவாகக் குறைந்து போனது.நான் கலியாணம் செய்ததும் அருகில்தான் என்றபடியால் ஒவ்வொரு நாளும் வேலையால் வந்ததும் அம்மாவிடம் போய் பக்கத்தில் இருந்து ஏதும் கதை கேட்டுக்கொண்டிருப்பது மனதுக்கு நிம்மதி.

எனது பிள்ளைகள் பள்ளிக்கூடம், மற்றும் ரியூசன் தவிர்ந்த நேரங்களில் ஒரு முறையாவது ஆள்மாறி ஆள் அப்பம்மாவிடம் போயிருந்து ஏதும் கதைத்துப் பேசி வருவதும் எனக்கேதும் சொல்ல வேண்டியிருந்தால் சொல்வதும் வழமையாகியிருந்தன. இரவில் கொஞ்ச நேரமாவது அம்மா பெற்ற பிள்ளைகள் அம்மாவிடத்தில் ஒன்று சேர்ந்து பலதும் பத்தும் கதைத்துப் பேசிக் கலைவது எழுதாத சட்டமாகியிருந்தது.

எனக்குத் திருமணப் பேச்சுக்கள் கொழுத்த சீதனத்துடன் தார இடங்களிலிருந்து கேட்டு வந்த போதெல்லாம் ஐயா, அம்மா சொன்னவற்றை நினைத்துப் பார்க்கிறேன்.

''காசு பணத்துக்கும் சொத்துப்பத்துக்கும் ஆசைப்பட்டு பஸ் ஏறி, கார் ஏறிப் பயணம் போக வேண்டிய இடத்திலை தம்பியைக் கட்டிக் குடுக்கிறதிலும் பார்க்க ஊருக்கை கட்டிக் குடுத்தால் தினமும் தம்பியை எங்கடை முத்தத்திலை காணலாம். எங்களுக்கு ஏதும் அந்தரம் ஆபத்தெண்டால் உடனே அது வந்து நிற்கும்.''

அம்மாவுக்குத் தேவையான மருந்து வகைகள் பால்மா மற்றும் சத்துக்குளிசைகள் எல்லாம் கிரமம் தவறாமல் நான் வாங்கி வந்து தங்கச்சியிடம் கொடுத்துவிடுவேன். அது ஒரு ஞாயிற்றுக்கிமை. தங்கச்சியும் பாவம் பிள்ளைகளுடன் கஷ்டப்படுகிறாள் என்று அம்மாவின் படுக்கை விரிப்பு, உடுப்புகள் சிலவற்றை வீட்டுக் கிணற்றடியில் கொண்டுபோய் சவர்க்காரம் போட்டுத் துவைக்கத் தொடங்கினேன். மூத்தக்கா தற்செயலாக வந்துவிட்டா.

''டேய் அம்மா பெத்த ஐஞ்சு பெட்டையள் நாங்களிருக்க நீ உடுப்புத் தோய்க்க நாங்கள் விடுவமே... அதெல்லாம் எங்களுக்குத் தெரியும் நீ எழும்பு.... இஞ்சாலை வா....''

வேறு வழியில்லாமல் அந்தக் கைங்கரியத்தைத் தொடரமுடியாமற் போய்விட்டது. ஆனால் இரவுச் சாப்பாட்டை மட்டும் குழைத்து நான் அம்மாவுக்கு ஊட்டிவிடும் வழக்கத்தை யாரும் தடுக்கவில்லை. எனக்கு அதில் ஒருவித திருப்தியிருப்பதை அவர்கள் உணர்ந்து எனக்கு விட்டுத் தந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். நான் வந்ததும் அம்மாவின் சாப்பாட்டைக் கொண்டு வந்து தருவதுதான் தங்கச்சியின் வேலை.

அம்மா நடமாடித்திரிந்த காலத்தில் தங்கச்சி வீட்டில் ஏதும் நல்ல சாப்பாடு செய்தால் போதும். அடுத்த விநாடி ஒரு பார்சலுடன் அம்மாவை எங்கள் வீட்டில் காணலாம். பேரப்பிள்ளை களுக்குக் கொடுத்து அதிலும் எங்கள் கறுப்பியைத் தன்மடியில் வைத்து ஊட்டிவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பா.

''அம்மா சிறுபிள்ளையாக இருக்கும் போது இவளைப் போலவேதான் இருந்திருப்பா. இவள் பிற்காலத்தில் வயது போக இப்ப அம்மா இருக்கிற கோலத்திலை இருப்பாள்''

இப்படியாக என் மனதில் தோன்றும் எண்ணங்கள்.

ஒருவருடம் அம்மாவின் படுக்கை வாழ்க்கை. பின்னர் நிலைமை மோசமாகியது. பேச்சுவார்த்தையில்லை. நாங்கள் சொல்வது எதுவும் அம்மாவால் புரிந்து கொள்ள முடியவில்லை. நீராகாரம் மட்டும் என்ற நிலைக்கு உடல் நிலைமை வந்துவிட்டது. ஒரு தெம்பையளிக்கும் நோக்கத்துக்காக வேலும் மயிலும் டொக்டர் இடையிடையே வந்து 'சேலைன்' ஏற்றி விட்டுச் சென்றார். படுக்கையை ஒரு நாளைக்கு மூன்று நான்கு முறை துப்புரவாக்கி விரித்தோம். எங்களை யார் எவரென்று தெரியவில்லை. கண்ணீர் மட்டும் வடிந்து கொண்டிருந்தது. ''வெளிநாட்டிலை இருக்கிற பிள்ளையை நினைக்கிறாபோலை''

வருத்தம் பார்க்க வரும் சிலரின் அபிப்பிராயம்.

என்ன கொடுமை. அம்மாவுக்குப் படுக்கைப்புண் வந்துவிட்டது. தினமும் துப்புரவாக்கி மருந்து போடும் போது அம்மா படும் துன்பம் எங்களால் தாங்க முடியவில்லை.

அம்மா யாருக்கும் தீங்கு நினைப்பதில்லை. அடுப்படித் தருமம் என்று சொல்வார்களே. அதில் அம்மாவுக்கு நல்லபேர். அம்மாவுக்கு ஏனிந்த நிலைமை.

நான் மூத்தக்காவுக்குச் சொன்னேன்,

''அக்கா! ஆரும் தன்ரை தாய் சாகவேணுமெண்டு நினைக்கவே மாட்டினம். ஆனால் நான் சொல்லுறன் அம்மாவுக்கு இந்த நிலைமையிலிருந்து விடுதலை கிடைக்க வேணுமெண்டுதான் இப்ப நான் கடவுளை வேண்டுறன்'' அக்காவின் கண்கள் குளமாகிவிட்டன. அதை ஏற்றுக் கொண்டது போலவும் தெரிந்தது.

மேலும் நிலைமை மோசமடைய வேலும்மயிலும் டொக்டர் வந்து மூன்று நாள் தவணை சொன்னார். லண்டனுக்குச் செய்தி பறந்தது.

தங்கச்சி புறப்பட்டுக் கொழும்புக்கு வந்து சேர்ந்துவிட்டாள். இரவு கொழும்பிலிருந்து வெளிக்கிட்டால் அதிகாலை ஆளை இங்கே காணலாம். அதற்கிடையில் அம்மாவுக்கு விக்கல் தொடங்கியிருந்தது. சொந்தக்காரர் பலரும் கூடிவிட்டனர். எல்லோரும் தெளிவு கிள்ளி விட்டார்கள். இறுதியாக என்னையும் விடும்படி சொன்னார்கள். தயங்கித் தயங்கி மூன்று முறை விட்டேன். விக்கல் நின்றது.

''ஐயோ எங்கடை அம்மா''

(18 ஆம் பக்கம் பார்க்க .....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GENUINE FINANCIAL SPONSORSHIP

From Trusted and Recognised Banks
Reasonabale Interest
UK / CANADA / AUSTRAILIA
100% Visa Guaranteed
Contact Now : 0777113777

## சமாதானத்துக்கான சமயங்களின் பேரவை 22ஆம் திகதி கொழும்பில் அங்குரார்ப்பணம்

கொழும்பு,ஜன 15

மதங்களின் ஊடாகச் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே சமாதானத்துக்கான சமயங்களின் பேரவை எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்யப் படவுள்ளதாக பேரவையின் தலைவரும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக வேந்தருமான வண. பேராசியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித்தார்.

அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகள் உட்பட 70 நாடுகளில் இதன் கிளைகள் உள்ளதுடன் பேரவையின் தலைமையகம் அமெரிக்காவில் உள்ளது என அவர் கூறினார்.

ஏற்கனவே அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற 11 மாவட்டங்களில் பேரவையின் கிளைகள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன. இக் கிளைகளின் உறுப்பினர்களும் அங்குரார்ப்பண நிகழ் வில் கலந்து கொள்ளவுள்தாக வண. பேராசியர் பெல்லன்வில விமலரத்னதேரர் குறிப்பிடார்.

இந்த மாநாட்டில் பிரதமர் தி.மு. ஜயரட்ன பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதுடன் பேரவையின் பொது தலைவர் மற்றும் செயலாளர் உட்பட பல வெளிநாட்டு மத தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இப்பேரவை அங்குரார்ப்பண நிகழ்வு தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை காலைதேசியநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (த)

◆ வீட்டிலிருந்தவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**இதோ உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்**

**தைப்பூச நாளில் (20-01-2011 வியாழன்) ஆரம்பம்**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல் - கைவேலை
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் - பூவேலை (Hair Dressing & Styling) - பப்றிக் வர்ணம் தீட்டுதல்
- Saree Work

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகளும் நடைபெறும்.

- தையல் அறிவு அற்றவர்களுக்கான 6 மாத தையல் (உடை தயாரித்தல்) பயிற்சிகள்.

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

தையல் தெரிந்தவர்களுக்கான 10 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ் சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

**கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்



## சனச காப்புறுதி கம்பனி

SANASA INSURANCE COMPANY
No:340, 2/1, R.A.De Mel Mawatha, Colombo 03,
Tel. 011 2828550, 0773663200-20

## வேலை வாய்ப்பு

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

இலங்கையில் முன்னோடிக் காப்புறுதி நிறுவனமான சனச காப்புறுதிக் கம்பனி யாழ்.மண்ணில் கிராமிய மட்ட மக்களுக்குப் பிரதான சேவையினை வழங்கும் நோக்குடன் புதிதாகத் தனது கிளையை ஆரம்பிக்கவுள்ளது.

பல வேலைவாய்ப்புகள் உங்களுக்காக ஆர்வம், தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- நிர்வாக உத்தியோகத்தர்கள் (காப்புறுதித்துறையில் முன் அனுபவம் தேவை).
- வெளிக்கள உத்தியோகத்தர்கள் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு விரும்பிய இடங்களில் பணிபுரிய முடியும்).
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு விரும்பிய இடங்களில் பணிபுரிய முடியும்).

திறமை, அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம், மேலதிகக் கொடுப்பனவு, பதவி உயர்வு, கடன் வசதி மற்றும் ஏனைய சலுகைகள் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 28.01.2011
(முடிவு திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

**மேலதிக விண்ணப்பங்களுக்கு:**
mobile: 0773663242, 0776594316.
விண்ணப்பிக்கும் முறை - தபால்
Manager, SANASA Insurance Co.Ltd,
212, Mahalakshmi Building, Stanley Road, Jaffna.
மின்னஞ்சல்: janakan55@gmail.com
(சி/574569)

## A/L 2010 மாணவர்கள்

உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ, **(UK, Canada, Australia, India, Ukraine, Malaysia, USA, New Zealand, Singapore)** கல்வி கற்பதற்கான வாய்ப்பை எதிர்பார்க்கின்றீர்களா?

இன்றே எமது **STUDENTS DATA BANK**ல் உங்களை பதிவு செய்து கல்வி சம்பந்தமான முழுமையான விபரங்களையும் இலவசமாக பெற்றுக் கொள்ளவும்.

Name : ......
Address : ......
...... Tel ......
Name of your School : ......
A/L Stream : BIO / MATHS/ COMMERCE/ ARTS (Circle)
A/L Exam Index No ......
E-mail : ......

உங்கள் விபரங்களை கடிதத்திலோ/ தபாலட்டையிலோ எழுதி அனுப்பவேண்டிய முகவரி

**SIC CENTRE**
734, Hospital Road, Jaffna.
TEL: 0777-767818

## Children's World

Child Development Centre
Pre School
சிறுவர் செயலகத்தின் தேசிய கொள்கைக்கு அமைவானது.

**Open The Door To Your Child's Future**

அனுபவ முதிர்ச்சி பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டலில்

- ✓ Language Development
- ✓ Knowledge Development
- ✓ Skill Development
- ✓ Values Development
- ✓ Speach & Drama Class.
- ✓ Creative Arts and Crafts
- ✓ Gama Abacus in Rainbow Programme.



(மனக்கணிதம், ஞாபகக் கலை என்பவற்றை விருத்தி செய்யும் விசேட பயிற்சி நெறி)

மாதாந்த கட்டணம் 1000/= மட்டுமே

2011ம் ஆண்டுக்கான அனுமதிகள் தற்போது வழங்கப்படுகிறது.

2 1/2 வயது முதல்



Play- based "Learning Through Play" British curriculum

No 14, 2nd Lane,Palaly Road,Jaffna. T.P ;- 0777729525

## முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் டயர்களுக்கு விநியோகித்தலுக்கான முகவர்கள் தேவை

| | |
|---|---|
| வெற்றிடங்கள் காணப்படும் பிரதேசங்கள் | கொழும்பு, நுவரெலியா, வவுனியா, அநுராதபுரம், யாழ்ப்பாணம், புத்தளம், திருகோணமலை, அம்பாந்தோட்டை, பொலன்னறுவை, மாத்தறை, மற்றும் காலி ஆகிய மாவட்டங்கள் |

**தேவையான தகுதிகள்**

- ✓ வங்கிப் பிணையொன்றை வைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- ✓ களஞ்சியப்படுத்தலுக்கான வசதிகள் இருத்தல் வேண்டும்.
- ✓ போக்குவரத்திற்கான வசதிகள் இருத்தல் வேண்டும்.
- ✓ உதிரிப்பாகங்கள் சம்பந்தமான அறிவு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

உங்கள் விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதிரிப்பாகம் மற்றும் டயர் விநியோகித்தல் முகவர்" என குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பவும்.

முகாமையாளர்
த.பெ. இல. 08, பண்டாரகமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிதடங்கினரே




காலத்தின் கடப்பு நாள், திங்கள், ஆண்டு என மூன்று நிலைகளில் பண்டைத் தமிழரால் உணரப் பட்டுள்ளது. சங்கப் பாடல்களில் புலவர்கள் இதனை நன்கு ஆவணப்படுத்தியுள்ளனர். அகப் பாடல் களிலே காலம் பற்றிய பதிவுகள் தெளிவாக உள்ளன. ஒரு நாளின் பிரிவுகளும் உணரப்பட்டிருந்தன. வைகறை, விடியல், மாலை, இரவு, யாமம், பகல் போன்ற சொற்களால் அவை விளக்கப்பட்டுள்ளன. பொருள், இலக்கணம் கூறும் தொல்காப்பியமும் இதனை விளக்கியுள்ளது. திங்களின் கடப்பு, சந்திரனின் தோற்றம், வளர்ச்சி, தேய்வு, மறைவு என்பன கொண்டு உணரப்பட்டது. ஆண்டு, கதிரவனின் நகர்வு கொண்டு கணிக்கப்பட்டது. பருவகாலங்கள் அதன் மூலம் பகுத்தறியப்பட்டன. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என அவற்றுக் குப் பெயர் வழங்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியங் களிலே இச்சொற்களின் பயன்பாடு இருப்பது புலவர்களின் காலம் பற்றிய கணிப்பை நன்கு விளக்கு கிறது.

பாடல்களில் பொருள் நிலையில் விளக்கப்படு கின்ற முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றினுள்ளே முதற்பொருள் காலம் பற்றிய விளக்கத்தைத் தருவதாக அமையும். இதனை ஒரு குறுந்தொகைப்பாடலில் நோக்குவது தெளிவுதரும்.

*"நாள்ளென் றன்றே யாமம் சொல்லவிந்*
*தினி தடங்கினரே மாக்கள் முனிவின்று*
*நனந்தலை உலகமும் துஞ்சும்*
*ஓர் யான் மன்ற துஞ்சா தேனே"*

*[குறுந்தொகை:6]*

இப்பாடல் ஒரு பெண்ணின் கூற்றாக அமைந்துள் ளது. தன்னுடைய துன்பநிலையைத் தானே கூறுவதா கப் பாடல் பாடப்பட்டுள்ளது. பிரிவுத் துன்பத்தை அனுபவிக்கும் பெண் குறிப்பாகக் காலத்தைக் குறிப் பிட்டுள்ளாள்.

'நள்ளென்றன்றே யாமம்' என்ற தொடரில் வரும் 'யாமம்' என்ற சொல் ஒரு குறிப்பிட்ட நாளின் கூறுபாட்டைக் குறிக்கிறது. தற்கால வழக்கில் இந்தச்சொல் 'சாமம்' என மருவிப் பயன்படுத்தப்படு கிறது. வடசொல்லில் ஜாமம் என வழங்கப்படுகிறது. பகற்பொழுது, இரவுப்பொழுது என இரு கூறாக அமைந்த ஒரு நாளின் கூறுகள் மேலும் பாகுபாடு செய்யப்படும் போது இரவுப் பொழுதில் மாலை, இரவு, யாமம், வைகறை என்ற பாகுபாடுகளும் கணிப் பிடப்பட்டுள்ளன. நடுஇரவு 'யாமம்' எனக் குறிப்பிடப்பட்டது. இந்த நேரத்தில் உலகத்தில் வாழும் மக்கள் அனைவரும் உறக்கத்திலிருப்பர். பகல் முழுவதும் ஆரவாரமாக இயங்கிக் கொண்டி ருந்த அவர்களது ஆரவாரம் முழுவதும் அடங்கி விடும். இந்தப்பாடலில் பெண்ணொருத்தி தன்னு டைய துணைவன் வரவை நோக்கித் தூங்காமல் விழித்திருக்கின்றாள். அவளுடைய பார்வையில் அடந்த இருளே தெரிகின்றது. மாலையிலிருந்து எங்கும் மெல்ல மெல்லமாகத் தோன்றிய இருள் இப்போது மிகவும் அடர்த்தியாகி யாம வேளையாகிவிட்டது.

இந்த வேளையைக் காட்சிப்படுத்தும் புலவர் யாமத்தில் மக்களின் உறக்கநிலை எவ்வாறிருக்கு மெனக் காட்டுகிறார். இனிமையான உறக்கத்தில் மக்கள் இருக்கின்றனர். எந்த விதமான சிக்கலும் இல்லாமல் எல்லோரும் தத்தமது செயற்பாடுகளை நிறைவாக முடித்து உறங்குகின்றனர். அவர்களு டைய மனத்திலே எந்தக் கவலையும் இல்லை. 'நனநீதலை உலகம்' என்ற சொல் பரந்துபட்ட உலகத்தைக் குறிக்கின்றது. ஒரு வீட்டிலிருக்கும் பெண் உலகம் முழுவதும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதாகக் குறிப்பிடுகிறாள். பெண்ணாக இருப்பி னும் உலகம் பற்றிய சிந்தனையோடிருக்கிறாள். யாம வேளையில் உலகிலே உள்ள அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பர். இயற்கையான வாழ்வு நிலை இதுவாகும்.

ஆனால் இந்தப் பெண்மட்டும் தூங்க முடியாமல் மனக்கவலையோடிருக்கிறாள். காரணம் பாடலில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் கூற்றுநிலையில் அவள் தனது துன்பத்தைத் தோழியிடம் எடுத்துரைப் பதாக அமைந்துள்ளது. 'துஞ்சாதேனே' என்ற சொல் தன்மைக் கூற்றுநிலையை உணர்த்துகிறது. 'யான்' என்ற சொல்லால் தெளிவாகத் தன்னையே சுட்டிக் காட்டுகிறாள். 'மன்ற' என்ற சொல் உறுதியாக எனப் பொருள் தருகிறது. இயற்கையான செயற்பாட்டில் ஏனைய உலக மக்களைப் போலத் தன்னால் ஈடுபட முடியவில்லையே எனக் கவலைப்படுகிறாள்.

இரவில் உறங்காமல் விழித்திருக்கின்ற இந்தப் பெண்ணின் உணர்வு நிலை கொண்டு இவள் நெய்தல் நிலத்து வாழ்வியல் கொண்டவள் என உரையாசிரியர்கள் உரைவிளக்கம் செய்துள்ளனர். ஆனால் அகப்பொருள் இலக்கணம் அமைத்த தொல்காப்பியர் இருநூற்பா அமைத்துள்ளார்.

*'குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்'*

*[தொல்.பொருள்]*

*'எற்பாடு நெய்தல் ஆதல் மெய் பெறத் தோன்றும்'*

*[தொல்.பொருள்]*

குறிஞ்சி நிலத்துக்குரிய சிறு பொழுதாகவே 'யாமம்' குறிப்பிடப்பட்டுள்ளது. நெய்தல் நிலத்துக் குரிய சிறு பொழுதாக 'ஏற்பாடு' குறிப்பிடப்பட்டுள் ளது. எனவே இதுபற்றிய கருத்துத் தெளிவொன்று பெரிதும் வேண்டப்படுகிறது. ஏற்பாடு என்னும் பகல் மறையும் வேளையில் பிரிவுத்துன்பத்தை அனுபவிக்கும் பெண்ணே நெய்தல் நிலப்பெண்ணா வாள். யாமமாகிய நடு இரவில் துன்பத்தை அனுபவித்துத் தூங்காமல் இருக்கும் பெண்ணே குறிஞ்சி நிலத்துப் பெண்ணாவாள் எனத் தொல்காப் பிய நூற்பாக்களின் மூலம் ஒரு விளக்கம் பெறப் படுகிறது.

குறுந்தொகைத் தொகுப்பிலுள்ள நான்காவது பாடலில் பெண் காத்திருக்கும் துன்பநிலை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. பொழுது குறிக்கும் சொல் அந்தப் பாடலில் இடம்பெறவில்லை. ஆனால் இந்தப் பாடலில் பொழுது குறிக்கின்ற 'யாமம்' என் னும் சொல் இடம்பெற்றுள்ளது. தொல்காப்பியரது அகப்பொருள் இலக்கண மரபின்படி பொருள் கூறும் போது 'யாமம்' என்னும் பொழுது குறிக்கும் சொல் குறிஞ்சி நிலத்தையே சுட்டிநிற்கிறது. ஆனால் குறிஞ் சித் திணைப்பாடல்களில் புணர்ச்சிவேட்கை உட் கிடைப் பொருளாய் இருக்கும். நெய்தல் திணைப் பாடல்களில் புலம்பல் நிலை வெளிப்படையாய் இருக்கும். எனவே உரையாசிரியர்களுடைய திணை, துறை வகுப்புகள் ஆழமான ஆய்வுக்குட்படுத்த வேண்டியுள்ளன.

'இனிதடங்கினரே' என்ற சொற்றொடர் மக்கள் துன்பம் இல்லாத வாழ்க்கை வாழ்வது பற்றிய விளக்கமாக உள்ளது. எந்தவிதமான துன்பமும் இல்லாத ஒரு வாழ்வியலை அந்த நிலத்துமக்கள் கொண்டிருந்தமை இந்தச் சொற்றொடரால் புலப்படுத் தப்பட்டுள்ளது. 'இனிது' என்றசொல் சுவையானது என்று பொருள் தருவதானாலும் இங்கு 'துன்பமற்ற' என்ற பொருள் தருவதாக உள்ளது.

மொழிநடை நிலையில் பாடல் பெண்மொழியாக உள்ளது. பெண்ணின் கூற்றாக அமைந்த பாடல் என்பதைப் புலப்படுத்துவதற்குரிய சொற்கள் பாட லில் இல்லை. ஆனால் உணர்வுநிலையில் ஒருபெண் தன்னுடைய அவலநிலையை எடுத்துக் கூறுவதாகப் பாடல் அமைந்திருப்பதால் பெண்ணின் கூற்றுநிலைப் பாடலாகக் கொள்ளப்படுகின்றது. 'உலகம்'என்ற சொல் இந்தப் பாடலில் பயன்படுத்தப்பட்டிருப்பது கவனத்திற்குரியது. ஒரு சிறிய பிரதேசத்தில் வாழு கின்ற இளம்பெண்ணொருத்தியின் உலகு பற்றிய சிந்தனை வெளிப்பாடு இப்பாடலில் புலப்படுத் தப்பட்டுள்ளது. ஒருநாளின் செயற்பாடு இயற்கை யாகவே நடைபெறும். பகலுக்குரிய செயற்பாடுகள், இரவுக்குரிய செயற்பாடுகளென அவை பாகுபட்டி ருக்கும். அதில் யாமத்துக்குரிய செயற்பாடு எல்லோ ரும் ஆழ்ந்து உறங்குவதே. எல்லா உயி ரினங்களும் உறங்குவது உலகம் எங்கு முள்ள செயற்பாடு என அவள் கூறு கிறாள்.

* * *



கலாநிதி
மனோன்மணி
சண்முகதாஸ்

# பிரிட்டிஷ் மகாராணியின் முடிசூட்டு நிகழ்வு யாழ்ப்பாணத்திலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது

தாண்டவன்

**01.02.1935**

டைசன் அரச அதிபராகப் பதவியேற்றார்.

**12.03.1937**

எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழா நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன. காலையில் அரச அதிபர் இலங்கைத் திருச்சபை தேவாலயத்தில் விசேட பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

கச்சேரியிலிருந்து ஊர்த்திப் பவனி ஆரம்பமாகி முற்றவெளியில் முடிவடைந்தது. யாழ்ப்பாண நீதிமன்றத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு இலவச அரிசி விநியோகிக்கப்பட்டது.

றீகல் படமாளிகையில் இலவச திரைப்படக் காட்சி காண்பிக்கப்பட்டது. நகரசபைக் கட்டட முன்ற லில் வாணவேடிக்கைகள் நடைபெற்றன. நவாலியில் மரநடுகை இடம்பெற்றது. கந்தரோடை, தெல்லிப் பழை, அச்சுவேலி போன்ற இடங்களிலும் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

**01.05.1937**

எம்.கே.ரீ.கான் டிரிஸ் அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**1936 1937**

குறிப்பிட்ட ஆண்டுகளில் வ_பகுதியில் கிடைத்த வரி வருமானங்கள் வருமா_வு:

| தலைமன்னார் | 1936 | 1937 |
|---|---|---|
| துரை | 1.407.114.45 | 1.28.071.79 |
| தானியவரி | 54.422.15 | 656.757.69 |
| பருத்திவரி | 256.27 | 156.29 |
| சீனி வரி | 578.970.33 | 378.203.89 |
| ஏனைய வரிகள் | 38.376.04 | 152.275.16 |

பீடி, புகையிலை மூலம் தலைமன்னார் 10.050 பவுண் வருமானம் கிடைத்தது. 1936ம் ஆண்டு 884 கப்பல்களும் 1937 ஆம் ஆண்டு 78,7777 கப்பல்களும் தலைமன்னார் துறைமுகத்தில் தங்கிச் சென்றுள்ளன.

**06.1938**

ஆர்.பி.நைஸ் அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய அரச அதிபர்கள் இலங்கை நிர்வாக சேவை அல்லது குடியியல் சேவை யின் தரம் 1, வகுப்பு 2, Class 01, Grade 02 அதிகாரிகளாகவே இருந்துள்ளனர்.

1939 ஆம் ஆண்டு எம்.பிரசாத் அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**மே 1940**

இரண்டாம் உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. 'ரைம்ஸ் ஒவ் சிலோன்' பத்திரிகை நிறுவனம் யுத்தநிதி என்ற பெயரில் மக்களிடம் பணம் திரட்டிப் பன்னிரண்டு யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்து அனுப்பியது. யாழ்ப்பாண மக்களும் யுத்தத்திற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டுமெனக் கோரி ஜி.ஜி.பொன்னம்பலமும் நடேசப்பிள்ளையும் இணைந்து முற்றவெளியில் பொதுக் கூட்டமொன்றை நடத்தினர். 31.05.1941 வரை யுத்தநிதிக் களியாட்டவிழா சம்பத்தரிசியார் கல்லூரியில் நடைபெற்றது. யாழ்ப்பாண நகர சபை 1500 ரூபா அன்பளிப்பு செய்தது. களியாட்ட விழாவில் தினமும் ஆயிரம் ரூபாவுக்கு மேல் சேர்ந் தது. மலேயாவில் (மலேசியா) வாழ்ந்த யாழ்ப்பா ணத்தவர்களும் பெருந்தொகைப் பணத்தைத் திரட்டி யனுப்பினார். இந்தப் பணத்தில் யுத்த விமானம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. யாழ்ப்பாண மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்த விமானத் திற்கு Jaffna எனப் பெயர் சூட்டப்பட்டது.

ஆவணப் பெட்டகம் 26

யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

(அடுத்த இதழில் முடிவுறும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பூபாளம் முகாரியாகின்றது

ஒரு பூபாளம் முகாரியாகின்றது
பூபாளத்தை மட்டும்
ஆலாபனை செய்துவந்த
எங்களின்
நெஞ்சத்து வீணைகள்
இப்போது
முகாரியை நிரந்தரமாகவே
தன்னில்
ஆலாபனை செய்து கொள்கின்றது
கண் முன்னே
விரிந்து கிடக்கும்
புதிய புதிய ராகங்களை
மீட்டிக் கொள்ளுமாறு
அவ்வப்போது
அங்கலாய்ப்புக்கள்
குவிந்த படியேதான்
இருப்பினும்
களிம்புகள் பூச முடியாது
நரம்புகளில் ஆழப்பதிந்துவிட்ட
முகாரிக் கொப்பளங்களினால்
புஸ்வாணமாகிக் கொள்கின்றது
புதிய ராகங்களின் மீட்டுகை
பூபாளங்கள் நிறைந்திருந்த
வாழ்க்கைச் சக்கரத்தில்
வேரூன்றிப்போன
முகாரிகளின் முண்டியடிப்புகளினால்
எத்தனை எத்தனை
விழுக்காடுகள் தினம்
பிறந்தோம், இருந்தோம், இறந்தோம்
என்னும்
வாழ்க்கைத் தத்துவத்தின்
ஒழுங்கு வரிசையில்
சீர்குலைவாய்
பிறந்தோம்,இறந்தோம் எனச்
சில நிகழ்காலத் தத்துவங்களை
கண்முன்னே கண்டிருக்கின்றோம்
பூபாளத்தின் வாசனையோடு
பயணித்துக் கொண்ட
இந்த மனித வாழ்வு
மாறுதல்களின் விளைவாய்
முகாரியாகிக் கொள்கின்றது
இப்போது

வெற்றி-துஷ்யந்தன்

## இனத்துக்காக....

கற்குவியலுக்கு நடுவில் மாங்கனி ஒன்று அகப்பட்டு விட்டது. அதனால் கற்களை அகற்றிவெளியில் வரமுடிய வில்லை. இப்படியே நான் கற்களுக்குள் இருந்தால் என் இனமே கற்குவியலுக்குள்தான் வாழ வேண்டிவரும். நான் இறந்தாவது என் இனத்தைக் கற்குவியலுக்கு வெளியில் சுதந்திரமாக வாழ விட வேண்டும் என்று நினைத்த மாங்கனி கற்களுடன் போராடி சதையும் தோலும் சிதைவடைந்த நிலையில் கற்குவியலைவிட்டு வெளியில் வந்து விழுந் தது. மாங்கனியாக அல்ல தன் இனத்தைச் சிகரமாக வளர விடும் விதையாக. கனியின் போராட்டத்தைப் பார்த்த கல்லுக் குள் வாழும் தேரை சொன்னது.

மனிதா தனியாய் இரு
மாங்கனியாய் இரு.

ம.அஜித்தன்,
சரவணை.

## பாருக்கு அறிமுகம் செய்த அன்னை



தாயே....
என்னைப் பத்து மாதம் சுமந்து
பாருக்கு அறிமுகம் செய்தவள் நீயம்மா!
உன் மடி மீது தலை வைத்து
தூங்கும் நாளினை எதிர்பார்க்கிறேன்....

என்னை பிரசவிக்கும் போது
உனக்கிருந்த வலியை விட- இப்போது
நானிருக்கும் நிலை என்பது
உன்னால் தாங்க முடியாது தானம்மா.....

என்ன செய்வது இறைவனும்
இன்னமும் எம் மீது கருணை காட்டவில்லையே?
நாங்கள் சோகங்களைப்
பகிர்ந்து கொள்ளும் போதெல்லாம்- எமக்கு
இடையே தடையாய் இருக்கின்ற
முட்கம்பி வேலிகளும் தம் இறுக்கத்தில்
தளர்வை ஏற்படுத்துவதை நான் உணர்கிறேன்...

அன்னையே.....
நம்பியிரு விரைவில் - எம்மை
சூழ்ந்துள்ள முட்கம்பி வேலிகள் அகன்று
விடுதலைக்கனி உன் வாசல்படி
தேடி வருமம்மா- அதுவரை
காத்திரம்மா.... காத்திரு....!

து.திலக், யாழ்ப்பாணம்.

## தாஜ்மஹால்

ஆண்களுக்குள்ளும்
ஆழமான காதல்
உண்டென்பதை
வெளிப்படுத்தும்
அடையாளச் சின்னம்

அபிராமன்,
சண்டிலிப்பாய்.

## இன்னுமொரு பிறப்பு !!

துள்ளியிளங் கன்றுபசு தேடி மடி மோதும்
தூரவினை போயகலக் கோயில்மணி ஓதும்
அள்ளியலை வந்துகரை மோதிநுரை தூவும்
ஆதவனை வாழ்த்திமதி அக்கரையை மேவும்
பள்ளியெழும் பிஞ்சுமுகம் புன்னகையை உதிர்க்கும்
பார்க்கையிலே தாய்மையதன் மேனியுள்ளே சிலிர்க்கும்
தள்ளிமுகில் போர்வைதனைத் தானெழுவான் வெய்யோன்
தாள்தொழுது தைப்பிறப்பை தரணிதுதி செய்யும்!

முற்றுமதில் செப்பனிட்ட முன்றலிலே கோலம்
முத்தமிழ் செய் நங்கையரின் கைவினையின் சீலம்
நெற்றிமலை வேர்வை நதி பாய்ச்சிவளர் செந்நெல்
நேர்த்தியுற அரிசிமணி யாகிப்புதுப் பொங்கல்
பற்றுபணி சுற்றுபகை பழவினைகள் தேயும்
பார் முழுதும் பரவும்புது சக்தியுள்ளே பாயும்
சுற்றமுடன் சேர்ந்து சுகம் சுகித்து மனம் பூக்கும்
சூழவரும் தடையறுத்துச் சுகவினைகள் ஆக்கும்!
(என்று)
கற்பனையில் தைப்பிறப்பைக் கண்டுகளிப் பெய்தி
கைதொழுது வாமகளே என்று துதி செய்தோம்!
(இந்த)
சொப்பனத்துக் காட்சியெலாம் சொற்களில்தான் வெல்லும்!
சுற்றியுள்ள சாட்சிகள்தான் சூட்சுமத்தைச் சொல்லும்!
தப்பெழுந்து பறையடித்துத் தாண்டவங்கள் ஆடும்
தரணியிலே தைபிறந்து தான் பயந்து ஓடும்!
இப்புவியின் கதை பிறழ்ந்தே ஆண்டு பல ஆச்சு - இது
இன்னுமொரு தைப்பிறப்பு என்றெண்ணிவிட்டால் போச்சு!!

-அளவையூர்ச் சேந்தன்.

## எங்கே...? போகின்றது... குடாநாடு

அது...
ஒரு... கனாக்காலம்
இரவின் இரம்மியங்களை
ரசித்தபடி....
அந்தி சந்திகளிலும்
அந்திமங்களிலும்
ஆற்றங் கரையோரங்களிலும்
நாம் அளவளாகிக் கொண்டிருந்தோம்

கனத்த இரவுகளின்
கணப் பொழுதுகள்
காவு கொள்ளப்பட்ட
இந்த அகாலங்களில்
இன்று நாம்
பயணித்துக் கொண்டிருக்கின்றோம்

தூக்கம் அணைத்தும்
இமைகள் மூட மறுக்கின்றன
ஏக்கம் தொலைத்துத்
தூங்க நினைக்கும் மனதில்
பலியும் வலியும் கிலியும்
குடிகொள்கின்றன....

அச்ச அச்சுறுத்தலில்
நகர்கின்றது
அநித்தியங்கள்
மரணங்களையும்
மௌனங்களையும்
அணைத்தபடி
இன்னும்........
எத்தனை... இரவுகள்...?

குறி தவறி....
குடாநாடு....
எங்கே... போகின்றது...?

க.நாகேஸ்வரன்,
சண்டிலிப்பாய்.

## கற்களை எறிகிறார்கள்

நேற்றைய தலைவர்களின் சிலைகளில்
எச்சம் போடுகின்றன காகங்கள்
இன்றைய தலைவர்கள் எமக்குப்
பிச்சை கூட போடவில்லை.

அன்றைய ஓர் அசுரனை அழிக்க
முருகப் பெருமான் தோன்றினார்
இன்று பல அசுரர்கள் ஆடுகிறார்கள்
முருகப் பெருமான்கள் எங்கே

ஓடிக் கொண்டே இருக்கின்றன கால்கள்
ஓய்வெடுப்பதற்காக அல்ல
நாளை ஓடாமல் இருப்பதற்காக.

கற்களை எறிந்து கொண்டிருக்கிறார்கள்
தமது எதிர்ப்பைக் காட்டுவதற்காக அல்ல
[illegible] விடும் என்பதற்காக.

ம.அஜித்தன், சரவணை.

## துப்பாக்கி பேசுகிறேன்

போர்க் களத்தில்
என்னைப் பயன்படுத்தியதால்
நீ வீரனானாய்
வீரன்
என்னைப் பயன்படுத்தியதால்
போர்க்களமானது

நிராயுதபாணிகளையும்
அப்பாவிகளையும்
சுடுவதற்காக
நான் பிறக்கவில்லை.
உன்னைச் சுடுபவனை
எதிர்த்துச் சுடுவதற்காக
நான் பிறந்தேன்.

என்னை
மார்பில் தூக்கியவனுக்கு
மனித நேயம்
பொறுமை
இருக்க வேண்டும்

இரும்பால்தான்
என்னை செய்தார்கள்
ஆனால்
உனது கரம் பட்டு
உனது மனம் இரும்பானதைப்
பார்த்து உருகுகிறேன்.

களவு எடுப்பதற்காக
என்னைப் பயன்படுத்தி
வீடுகளுக்குள் புகுந்து
சுட்டாய்.
களவா, கொலையா
எனத் தெரியாமல்
இருக்கும் நிலை
எனக்கு வேண்டாம்.

தமிழனுக்குப்
பாதுகாப்பில்லாத போது
தீய சக்திகளின்
செயற்பாடுகள்
வெளிப்படுகிறது.
இதனால்
எனது உடலிலிருந்து
வெளியேறும் ரவைகள்
பல பேரின்
உடலினுள் நுழைகிறது.

நான் இயங்குகிறேன்
என்று
நீங்கள் பயத்தில்
பேசாமல்
இருந்து விடாதீர்கள்
நீங்கள் இயங்குகிறீர்கள்
என்றால்
நான் கைமாறும் நிலையில்
எனது இயக்கம்
புதுவடிவம் கொள்ளும்

மூன்று தசாப்த காலம்
என்னை இயக்க வைத்தார்கள்
இதனால்
மக்களிடமிருந்து
கூடுதலான பழி சுமந்து
நிற்கிறேன்.
கொலைகளை நிறுத்து
என்று நான் சொல்லமாட்டேன்
நீங்கள் சொல்லுங்கள்
எனக்கு ஆறுதலைத் தாருங்கள்.

துவாலைச் செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமைமிக்கதொரு புறச்சூழல் அரசியல் தீர்வை எட்ட அவசியம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இலங்கை அரசுக்கும் இடையே மீண்டும் பேச்சுகள் குழு நிலையில் ஆரம்பமாகியுள்ளன. இன்று தொடங்கும் நாளை தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்ட இந்தப் பேச்சு போர் முடிவடைந்து ஒன்றரை வருடங்களின் பின்பு ஆரம்பமாகியுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைமையில் நடைபெற்ற தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்கான போர் தோற்கடிக்கப்பட்டு விட்டது என்பது உண்மைதான். ஆனால் ஒரு போரின் முடிவு என்பது ஒரு போராட்டத்தின் முடிவாகிவிடாது.

ஓர் இனத்தின் மீதான ஒடுக்குமுறை தொடரும்வரை போராட்டமும் தொடரவே செய்யும். அது காலத்திற்கேற்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப வடிவத்தை மாற்றிக் கொள்ளும். அந்த வகையில் ஆயுதப் போர் தோல்வியடைந்த நிலையில் எமது போராட்டமும் வெவ்வேறு வடிவங்களை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டது.

எதிர்தரப்பினரைப் பேச்சுக்கு இறங்கி வர வைப்பது, பேச்சுகளின் போது உறுதியான நிலைப்பாட்டை எடுத்து அதை நியாயமான தீர்வை நோக்கி நகர்த்துவது, எட்டப்பட்ட தீர்வை நடைமுறைப்படுத்தும் வகையில் தந்திரோபாய அணுகுமுறைகளைக் கையாள்வது போன்ற பணிகளும் போராட்டத்தின் வடிவங்கள் தான்.

தமிழர்கள் மீண்டும் ஆரம்பித்துள்ள அரசியல் போராட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது. இனி

**சந்திரசேகர ஆசாத்**

எதிர்கொள்ள வேண்டியது இரண்டாவது கட்டத்தை. இது மிகவும் சிக்கலானது. மிகவும் அவதானத்துடனும் கையாளப்பட வேண்டியது. இதில் நாம் ஆற்றலுடனும் நிதானத்துடனும் உறுதியுடனும் செயற்படத் தவறினால் பேச்சுகள் இடையில் முறிவடையும். அல்லது நியாயமற்ற ஒரு தீர்வு எம் மீது திணிக்கப்படலாம். இந்தக் கட்டத்தைப் பேரம் பேசும் முறையில் மிகவும் நுணுக்கமாக அணுகவேண்டும். அதேவேளையில் தமிழர்களது கோரிக்கைகளுக்கு வலுவூட்டும் வகையிலான புறச்சூழலை வகுத்துக் கொள்ளவும் வேண்டும்.

ஒடுக்குமுறையாளர்கள் என்றுமே ஒடுக்கப்படுபவர்களின் உரிமைகளை மனம் விரும்பியோ, நீதி நியாயத்தின் அடிப்படையிலோ வழங்கிவிடுவதில்லை. அவர்கள் நிர்ப்பந்தங்களின் அடிப்படையிலேயே சில விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்வார்கள். அப்படியான நிர்ப்பந்தங்களை உருவாக்குவதும்கூட பேச்சுக்களின் இன்னுமொரு அம்சமாகும். சிங்கள ஆளும் தரப்புக்கும் தமிழர் தரப்புக்கும் இடையே பேச்சுகள் இடம்பெறுவது ஒன்றும் இதுதான் முதற்தடவையல்ல. எத்தனையோ தடவைகள் பேச்சுகள் இடம்பெற்ற போதும் இரு தடவைகள் மட்டுமே ஏதோ ஒரு தீர்வின் வாசல் வரையாவது எட்ட முடிந்திருக்கிறது.

தீர்வின் வாசல் கதவைத் தட்டிய முதலாவது பேச்சு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவுக்கும் தந்தை செல்வாவுக்கும் இடையே இடம்பெற்றது. இந்தப் பேச்சு ஒரு சுற்றிலேயே நிறைவுபெற்றது. அடுத்த சுற்றில் உடன்பாடும் எட்டப்பட்டது. பேச்சுகள் சுமுகமாகவும், வேகமாகவும் இடம்பெற்று நிறைவுபெற்றமைக்கு அடிப்படையான காரணங்கள் இருந்தன. பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்தியங்களைப் பின்புலமாகக் கொண்டு நிலைபெற்றிருந்த ஐ.தே.கட்சியை



திம்புப் பேச்சு: பூட்டான் தலைநகர் திம்புவில் அரச பிரதிநிதிகளுக்கும் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் இடையே 1985ஆம் ஆண்டில் நடைபெற்ற பேச்சுக்கள் முழுமையடையாமலே முடிவுக்கு வந்தது.

தோற்கடித்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தேசியக் கட்சிகளின் பிரதிநிதியாகவே ஆட்சிப்பொறுப்பை ஏற்றார்.

ஏகாதிபத்தியத்தின் பிடிக்குள் முழுமையாக இருந்த இலங்கையைத் தேசியவாதிகளின் கையில் கொண்டு வர பண்டாரநாயக்க பெரும் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டியிருந்தது. அந்த மாற்றங்களைக் கொண்டுவர அமைதியும் பரந்த ஆதரவும் அவருக்குத் தேவைப்பட்டது.

அதேவேளை, தமிழ் மக்கள் உரிமை கோரி நடத்திய போராட்டங்கள் அஹிம்சை வழியில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவரின் பிரதான நோக்கத்தைப் பலவீனப்படுத்துவனவாக அமைந்திருந்தன. எனவே இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டுவதன் மூலம் நாட்டில் சுமுகமான சூழலையும் மக்களிடையே ஆதரவையும் உருவாக்க முடியும் என நம்பினார். எனவேதான் தந்தை செல்வாவுடன் அவர் பேச முன்வந்தார்.

அந்தப் பேச்சுக்களில், தந்தை எடுத்த உறுதியான நிலைப்பாடு அன்று உருவாகியிருந்த புறச்சூழல் என்பன பேச்சுக்களை வெற்றிகரமாக நிறைவு செய்ய வழி வகுத்தன.

பின்பு 1958ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கண்டி யாத்திரை, புத்தபிக்குமாரின் சத்தியாக்கிரகம், இன அழிப்புக் கலவரம் ஆகியவற்றின் காரணமாகப் பண்டா- செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. அதாவது அந்தப் பேச்சின் மூன்றாவது கட்டம் நிறைவேறாமலே போய்விட்டது.

அடுத்தது 1965 இல் ஏற்படுத்தப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தம். அதற்கான பேச்சுகள் இரகசியமாகவே நடத்தப்பட்டு ஒப்பந்தமும் இரகசியமாகவே கையெழுத்தாகியது. இதுவும் மிக விரைவாகவும், சுமுகமாகவும் நிறைவேற அடிப்படையான காரணம் இருந்தது. அன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சியமைக்கப் போதிய பலம் இருக்கவில்லை. அதற்கு தமிழரசுக் கட்சியின் ஆதரவு தேவைப்பட்டது. எனவே ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்த் தலைமையுடன் ஓர் ஒப்பந்தத்துக்கு இறங்கி வர வேண்டியிருந்தது.

எனினும் நாலரை வருடங்கள் இழுத்துப் பறித்த பின்னர் நிறைவேறாமலே அதுவும் கைவிடப்பட்டது. அந்தப் பேச்சும் தனது மூன்றாவது கட்டத்தை நிறைவேற்றத் தவறிவிட்டது.

**ஞாயிறு காரம்**

அதன் பின்பு இந்திய அனுசரணையுடன் இடம்பெற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா - தமிழர் விடுதலைக் கூட்டணிப் பேச்சு, பிரேமதாசா - விடுதலைப் புலிகள் பேச்சு, சந்திரிகா - விடுதலைப் புலிகள் பேச்சு, ரணில்- விடுதலைப் புலிகள் பேச்சு, மஹிந்த - விடுதலைப் புலிகள் பேச்சு எனப்பல பேச்சுக்கள் இடம்பெற்றன. அவற்றில் எவையும் இரண்டாம் கட்டத்தைக்கூட நிறைவு செய்யவில்லை.

முன்னைய இரு பேச்சுகளையும் விட இவற்றில் ஆயுதப் போராட்டத்தின் தாக்கம் நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ இருந்தது இதற்கான பிரதான அம்சங்களில் ஒன்று. பேச்சின் போக்கைத் தீர்மானிப்பதில் ஆயுதப் போராட்டத்தின் வலிமையும் ஒரு குறிப்பிட்ட வகிபாகத்தைக் கொண்டிருந்தது மட்டுமன்றி பேச்சுக்களின் புறச்சூழலாகவும் அது அமைந்திருந்தது.

ஜே.ஆர். - அமிர்தலிங்கம் பேச்சில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் எந்தவொரு எண்ணத்தையும் ஜெயவர்த்தனா கொண்டிருக்கவில்லை. மாறாக, தனது மேற்குலக சார்புத் தன்மைக்கு எதிராக இந்தியா கொடுக்கும் நிர்ப்பந்தங்களில் இருந்து தன்னைப் பாதுகாக்க இந்தப் பேச்சை ஒரு கவசமாகவே அவர் கையாண்டார். இதைப் புரிந்துகொண்ட இந்தியா, இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் அவரைத் தன் கட்டுக்குள் கொண்டு வந்தது.

அதன் மூலம் இனப்பிரச்சினைத் தீர்வுக்காகப் பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. அதை முழுமையாக நிறைவேற்றாமல் விட்டதன் மூலம் இனப்பிரச்சினைத் தீர்வை ஜே.ஆர். தள்ளிப்போட்டு விட்டார்.

அடுத்து இடம்பெற்ற பேச்சுகள் அனைத்தும் விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்ட வலிமை காரணமாக எழுந்தவை. விடுதலைப் புலிகள் வேகமாக வெற்றியை நோக்கி நகர்ந்த சந்தர்ப்பங்களிலேயே இந்த ஒவ்வொரு பேச்சும் இடம்பெற்றன. இவற்றில் ஈடுபட்ட இரு தரப்பினருக்கும் பேச்சு மூலமாக ஒரு நியாயமான திட்டவட்டமான ஒரு தீர்வை எட்டும் நோக்கம் இருக்கவில்லை.

தம்மைப் பலப்படுத்தவும் விடுதலைப் புலிகளின் போர்க் குணத்தைப் பலவீனப்படுத்தவும் பேச்சை ஒரு கால அவகாசமாக அரசும் அரசுக்கு எதிரான போராட்டத்துக்கு தயார்ப்படுத்தும் காலமாக விடுதலைப் புலிகளும் பேச்சுக்கான காலத்தைப் பயன்படுத்தினர். தமிழ் மக்களால் ஏற்கமுடியாத தீர்வுகளை முன்வைப்பதன் மூலமும் காலத்தை வீணே கழித்தடிப்பதன் மூலமும் பேச்சுகள் முறிவடைவதற்கான சூழலை அரசு உருவாக்கியது. நெகிழ்வுத் தன்மையற்ற விட்டுக்கொடாக் குணத்தை வெளிப்படுத்தியதன் மூலம் புலிகள் அரசின் வலைக்குள் சிக்கினர்.

இதில் ரணில் விக்கிரமசிங்க மிகவும் லாவகமாகச் செயற்பட்டார். ஒஸ்லோ உடன்பாடு எட்டப்பட்ட போதிலும் அடுத்த கட்டப் பேச்சுகள் ஒரு நியாயமான தீர்வை நோக்கிச் செல்லவில்லை. ஆனால் மறுபுறத்தில் விடுதலைப்புலிகளைப் பிளவுபடுத்துவதிலும் பலவீனப் படுத்துவதிலும் கூடுதல் அக்கறையுடன் அவர் செயற்பட்டார்.

இறுதியாக இடம்பெற்ற மஹிந்த- விடுதலைப்புலிகள் பேச்சு முதலாவது சுற்றுடனேயே முறிவடைந்தது. ஏனெனில் மஹிந்த அரசிடமும் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வுகள் எவையும் இருக்கவில்லை.

இவை அனைத்தும் சிங்கள - தமிழ்த் தலைமைகளுக்கு இடையிலான பேச்சுக்களின் வரலாறு. இந்தப் பேச்சுக்கள் மூலம் தமிழர் தரப்பு சந்தித்தவை அனைத்தும் கசப்பான அனுபவங்களே.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சு ஆரம்பமாகி உள்ளது. அதன் முதல் கட்டம் வெற்றி பெற்றுள்ள நிலையில், இப்போது இரண்டாவது கட்டத்திற்குள் காலடி எடுத்து வைத்திருக்கிறோம்.

இந்தப் பேச்சில் தமிழர் தரப்பு உறுதியாகவும் தெளிவாகவும் இருப்பதுடன் ஒவ்வொரு விடங்களையும் தந்திரோபாயமாக அணுக வேண்டியது அவசியம்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தும் வலிமையான ஒரு புறச்சூழல் இல்லாதபட்சத்தில் ஆளும் தரப்பு இந்தப் பேச்சையும் காலத்தை இழுத்தடிக்கவே பயன்படுத்தும். இல்லையேல் தமிழர்கள் திருப்திப்படாத வகையிலான ஒரு தீர்வைத் திணிப்பதற்கு அக்கறை காட்டும்.

ஈழத் தமிழருக்குப் புலம்பெயர் தமிழர்கள் வழங்கும் ஆதரவு அவற்றின் காரணமாக வெளிநாடுகள் இலங்கை அரசுக்குக் கொடுக்கும் அழுத்தம் என்பன பேச்சின் புறநிலையில் தமிழருக்குச் சாதகமான ஒரு சூழலைத் தோற்றுவிக்கும் என்பது உண்மையே. ஆனால் தற்போதைய (26ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 146

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | ■ | 11 | | ■ |
| | ■ | 12 | | 13 | | ■ | 14 |
| ■ | 15 | | | | ■ | 16 | |
| 17 | | ■ | 18 | | 19 | | |
| 20 | | 21 | | ■ | 22 | | |
| 23 | | | ■ | 24 | | | ■ |

அனுப்புபவர் பெயர்:......................................................

விலாசம்:......................................................

......................................................

கையொப்பம்:......................................................

### இடமிருந்து வலம்

1.பாலுணர்வைத் தூண்டும் போக்கு.
4. மீளாத்துயில் இங்கு.
7.மணம்
8. அழகுப் பெண்.
9.கணவன்- மனைவி
11. மறைவில் அடிப்பது.
12. கிடைக்க வேண்டியது.
15.அழுகை இடையே வரும்.
16. உயிர்ப்பின் ஆரம்பம்.
17. முக்கனிகளுள் ஒன்று.
18. இதனால் தான் இவ்வளவு அழிவும்.யுகத்தைச் சொல்வது இப்படி.
20. உங்கள்.
22. தவறு
23.பத உறுப்பில் ஒன்று.
24.முற்கால ஆயுதம்.

### மேலிருந்து கீழ்

1. ஏட்டிக்குப் போட்டி பேசுதல்.
2.குடிக்கவும் சோறுடன் சேர்த்து உண்ணவும் உதவும்.
3.நிகழ்ந்த விவகாரம்.
4.தலைமுறை.
5.திங்கள்.
6. மூன்று.
10. இலட்சுமி.
13.மிளகாய்த்தூள் அரைக்க இதையும் சேர்த்துக் கொள்வர்.
14.பயிர்வகைகளில் ஒன்று.
15. ஒரு மீன் இனம்.
16. சேர்க்கையால் வருவது.
17.அதிகார ஆசை, போட்டி எல்லாம் இதை அடையத்தான்.
19.ஒரு தூர அளவை அலகு.
21.வேகம்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 144 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)பிரசவம். (4)வித. (6)மலை. (7)அரளி. (8)மாதர்.(10)தச்சர். (11)தலைக்கவசம். (13)கதறும்.(15)களவு.(16) தவிடு. (17)பாவம். (18)பாவி. (19)குலை.(20)முதிர்ச்சி.

### மேலிருந்து கீழ்

(1)பிரமாதம். (2)சமர்க்களம். (3)வலை. (4)விரசம். (5)தளிர்(7)அச்சம்தவிர். (9)தலை. (10)தவறு. (12)கதவு. (14)நடுநிசி. (15)கவலை.(17)பாகு. (18)பாதி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 144 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — எஸ்.சரவணபவன், 269/10 கல்ரெக்ஸ் லேன், கண்டி வீதி, சாவகச்சேரி.

**2 ஆம் பரிசு** — பாலகிருஷ்ணன் பாலரஞ்சினி, மே/பா கிராம சேவையாளர் அலுவலகம் கே.என்/57, முள்ளை நீராவி விகவாடு.

**3 ஆம் பரிசு** — க.அனோபன், இல.56/1 ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு** — சி.ஜிந்துஜா, புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை.

**5 ஆம் பரிசு** — மு.கணேசநாயகம், மாணிக்கம் வைரவர் கோவிலடி, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) திருமதி லலித லக்ஷ்மி நிரோஷன், தேவாலய வீதி, சங்கானை.

(2) சிவலிங்கம் சிவாஜினி, 4ஆம் வட்டாரம், அம்பாள் வீதி, முள்ளியவளை.

(3) ஆர்.குகதாசன், இல.67, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 146**

நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,

இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 26.01.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.146 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 30.01.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# அம்மாக்களின்....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

ஒரேயடியாகப் பல குரல்கள். அதைத் தொடர்ந்து மேலும் பல குரல்கள். நான் அதிர்ந்து போய் அம்மாவின் கால்களைக் கட்டிப் பிடித்தேன்.

* *

கோயில் மணியடிக்கிறது. நேரத்தைப் பார்க்கிறேன். அதிகாலை ஐந்து மணி. ஒவ்வொருவராக அசைவது, எழுவது தெரிகிறது. அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது நான் இன்னும் உறங்கவே இல்லை என்பது. வீட்டைக் கூட்டுவதும், முற்றத்தைக் கூட்டிப் பெருக்குவதும் நேற்றைய சமையல் பாத்திரங்களைக் கழுவுவதுமாகப் பெண்கள் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கினர். ஆண்கள் தேநீர் வரும்வரை படுக்கைப் பாயில் அங்குமிங்குமாகச் சோம்பிக் கிடந்தனர்.

படுக்கை விட்டெழ எனக்கு மனம் வரவில்லை.

எல்லாப் பெண்களுக்கும் ஆணை பிறப்பிக்கும் தோரணையில் பொன்னம்மா மாமியின் குரல் ஏறி உயர்ந்து கேட்கிறது. இப்படியான நன்மை, தீமைக் காரியங்களில் எல்லோரும் பொன்னம்மா மாமியின் ஆணைகளைச் சிரமேற்கொண்டு ஏற்றுத்தானாக வேண்டும். இல்லாது போனால் தேவையில்லாத பிரச்சினைகள் வரும். பொன்னம்மா மாமி கோவித்துக் கொண்டு போய் விடுவா.

''நீங்கதான் மாமி எல்லாவற்றையும் பொறுப்பேற்று நடத்தி முடிக்க வேண்டும் என்று விட்டால் அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஒருத்தி என்று சொல்ல முடியாத அளவுக்கு உஷாராக நின்று எல்லாக் காரியங்களையும் ஒப்பேற்றி வைப்பார்.

அம்மாவின் ஒன்றுவிட்ட தம்பியின் மனைவிதான் பொன்னம்மா மாமி. ஆள் கொஞ்சம் வாய்க்காரி என்றபடியாலும் ஓர் இடத்திலே சின்னப்பிழை நடந்தாலும் ஊரெல்லாம் முரசறைந்து திரிகிற சுபாவம் என்றபடியாலும் அம்மா முதலாக எல்லாரும் கொஞ்சம் பயந்து நடப்பதுதான் வழக்கம். வெயில் முதுகில படேக்கை எழும்பினால் காரியம் முடியுமோ? எழும்புங்கோடா...''

எல்லோரும் ஒவ்வொருவராக எழும்பவும், தேநீர் கையில் கிடைக்கவும் சரியாக இருந்தது.

''நீ தேத்தண்ணி, கீத்தண்ணி குடிச்சிடாதை காடாத்து முடிஞ்சாப்பிறகுதான் சாப்பிட்டாலென்ன, தேத்தண்ணி குடிச்சாலென்ன... சரியே...''

என்னைப் பார்த்துத்தான் சொன்னா. நான் 'ஓம்' என்று தலையாட்டுகிறேன்.

''வெயில் ஏறமுந்தி காடாத்தை முடிச்சிட்டு வாங்கோ. பிந்தினால் சுடலையிலை நிக்க மாட்டியள்''

மீண்டும் எல்லோருக்கும் ஆணை பிறந்தது. என்னுடன் என் அத்தான்மார் இரண்டுபேர், ஒன்று விட்ட அண்ணன்மார் இரண்டுபேர், காரியங்களை ஒழுங்காகச் செய்து முடிக்கக் கூடிய கொஞ்சம் விடயமறிந்த சித்தப்பா முறையானவர் எல்லோரையும் கேற்றுக்கு வெளியே ஒப்பாரி வைத்து சுடலைக்கு வழியனுப்பி வைத்தார்கள் பொன்னம்மா மாமி தலைமையிலான மூத்தக்கா உட்பட்ட அயல்வாழ் உறவுப் பெண்கள்.

ஒருவாறாகக் காடாத்து முடித்து சுடலையால் வந்துவிட்டோம்.

தோய்ந்து குளித்து மாட்டுக்குக் குழை கொடுத்து அம்மி மிதித்து மூன்று தடவை சுற்றியதும் காடாத்துக்கான எனது காரியங்கள் முடிந்ததாக எண்ணிக் கொண்டேன். இனிக் காடாத்துப் படையல் மட்டும் தான்.

மூத்தக்கா வந்தா ''இடியப்பம் தோசையள் வந்து கிடக்கு போய்ச்சாப்பிடு'' என்றா... எனது மனைவியைக் கண்டதும்...

''அவன் நேற்றும் முந்தநாளும் ஒரு நேரச் சாப்பாடு கூட ஒழுங்காகச் சாப்பிடேல்லை. உங்கை இடியப்பம் தோசையள் கனக்க வந்து கிடக்கு. அவனுக்குச் சாப்பாட்டைக் கொண்டு வந்து குடுங்கோ'' என்ற போது, மூத்தக்கா சொன்னபடி கொஞ்சம் சாப்பிடுவம் என்று மனம் சொல்லியது.

மனைவி கொண்டு வந்த சாப்பாட்டைக் கையில் வாங்கிக் கொண்டேன். ''நீங்கள் சாப்பிட்டியளோ பிள்ளைகள் சாப்பிட்டுதுகளோ...? கேட்டுத் திருப்திப் பட்டுக் கொண்டேன்.

சாப்பிட்டுவிட்டு கைகழுவும் போது பொன்னம்மா மாமி வந்தா. என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனா.

''அட... நீ சாப்பிட்டிட்டியே. என்ன கோதாரி... காடாத்துப் படையல் இன்னும் முடியேல்லை. அதுக்குள்ள அவசரப்பட்டுச் சாப்பிட்டிட்டியே''

நானும் திடுக்கிட்டுவிட்டேன். மூத்தக்கா, என் மனைவி எல்லோரும் ஏதோ தவறு செய்து விட்டது போல் பயந்து கொண்டு நின்றார்கள்.

''நீங்கள்தானே மாமி காலைமை சொன்னீங்கள் காடாத்து முடிஞ்சாப்பிறகுதான் சாப்பிட வேணுமெண்டு. சுடலையிலை காடாத்து முடிஞ்சு வந்திட்டம்தானே. அதனாலதான் நான் சாப்பிட்டன்''

அது தம்பி காடாத்துப் படையல் முடிஞ்சு அதிலை தான் சாப்பிட வேணும். என்ன வேலை இது.

''சரி... சரி.. பசி வந்திட்டுதாக்கும். தம்பி சாப்பிட்டுது. உதைப் பிரச்சினையாக்காதேங்கோ... போய் மற்ற அலுவல்களைப் பாருங்கோ''.

இது அண்ணியின் குரல்.

''அப்படியில்லை அண்ணி. நான் எவ்வளவு நேரமும் பசி கிடப்பன்

காடாத்து முடிஞ்சாப்பிறகு சாப்பிடலாம் எண்டதை நான் பிழையாக விளங்கியிட்டன்.

''என்ன பிழையாய் விளங்கியிட்டன் எண்டிறாய் குழந்தைப் பிள்ளை மாதிரி''

மாமி கூறியபடியே பின்னுக்குப் போய் சமையல் பகுதியில் நிற்கும் பெண்களுக்கெல்லாம் பட்டயம் வாசிப்பது எனக்குக் கேட்கிறது.

எனக்கும் மனம் குழம்பிவிட்டது.

காடாத்துப்படையல் இப்போது ஆரம்பித்து விட்டபடியால் பயபக்தியுடன் அம்மாவை நினைத்துக் கொண்டு சித்தப்பா சொல்கிறபடி படையல் காரியங்களைச் செய்து கொண்டிருந்தேன்.

படையல் முடிந்ததும் அம்மாவை நினைத்துக் கொண்டு எல்லா உணவு வகைகளிலும் ஒவ்வொரு பிடியாக எடுத்து வாழை இலையில் போட்டுக் கொண்டிருந்தேன். இவை பசு மாட்டுக்குக் கொடுக்கப்பட வேண்டுமாம்.

''கொள்ளிக்காரன் தன்னைப் பெத்த தாயின்ரை காடாத்துப்படையல் முடியமுந்தி சாப்பிட்டதெண்டால் இனி என்ன செய்துமென்ன? இதை ஆரும் கேள்விப்பட்டால் சிரிக்கப் போகினம்''

மாமி இன்னும் ஓயவில்லை.

படையல் அலுவல்களை முடித்துக் கொண்டு எழுப்பி வருகிறேன்.

''மாமி... அம்மா இதுக்கு முந்தி ஒரு நாளும் சாகேல்லை. இப்பதான் முதன் முறையாகச் செத்தவா நானும் முதன் முறையாகத்தான் கொள்ளி வைச்சனான். அதனாலை எனக்கு முன் அனுபமில்லை..ம்ம்...அதோடை நான் ஏதும் வேலைப் பிராக்கிலை.சாப்பிடாமல் பசியோடை இருந்தால் தான் அம்மா என்னோடை சண்டைக்கு வாறவா. நேரத்துக்கு நான் சாப்பிட்டனெண்டால் அவா சந்தோஷப்படுகிறவா. இண்டைக்கு நான் சாப்பிட்டதாலை அம்மாவின்ரை ஆத்மா சந்தோஷப்படுமே தவிர அதாலை ஒரு பிரச்சினையில்லை. நீங்கள் எங்கடை மனங்களைக் குழப்பாமலிருந்தாலே போதும்''

சொல்லிவிட்டுத் திரும்பினேன். அங்கிருந்தவர்களின் முகங்களில் ஒருவித திருப்தி தென்பட்டதை நான் அவதானிக்கத் தவறவில்லை...

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை வளத்தை நம்பி வாழும் மக்களது அபிவிருத்திக்கு வழிபிறக்குமா?

இலங்கைத் திருநாட்டின் வடபகுதிக்குள் நுழையும் எவருக்கும் கண்ணில் தட்டுப்படுவது பனைமரங்களாகத்தான் இருக்கும். அந்தளவிற்கு வட பகுதி மக்களுடனும் இந்த மண்ணுடனும் பின்னிப்பிணைந்து இப்பிரதேசத்து வரலாறு சொல்லும் மரமாக உயர்ந்திருக்கின்றது கற்பக தருவான பனைமரம் தமிழ் மக்களின் வரலாற்றோடு இரண்டறக் கலந்திருக்கிறது. ஒரு வித்திலை மரமான பனைமரத்திற்கும் அதனது வளத்திற்கும் அபிவிருத்தியின் வாசல் திறக்க வேண்டுமென்ற அங்கலாய்ப்பு இப்பிரதேசத்து மக்களுக்கும் குறிப்பாகப் பனை வளத்தையே தஞ்சமென்று நம்பியிருக்கின்ற எம்மினிய உறவுகளுக்கும் எழுந்திருக்கின்றது.

தானாக விதையாக விழுந்து மண்ணினுள்ளே கிழங்காகி அது வளர்ந்து வடலியாகிப் பின் மரமாகி விதையிலிருந்து மரம் வரை அனைத்துப் பகுதிகளும் எமக்கு பயன்தரும் பொருள்களாக விளங்குகிறது. இதுபோன்றொரு மரம் இத்தரணியிலேயில்லை. எமது வாழ்வியலுடன் இரண்டறக்கலந்திருக்கும் இந்த மரத்திற்கு வடமாகாணத்தின் மரமாகும் அந்தஸ்தும் கிடைக்கவில்லை. வட மாகாணத்தின் பகுதிகளான வன்னிப் பெருநிலப் பரப்பிலும் சரி யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் சரி இன்னும் தீவகப் பகுதி களிலும் செறிந்து வாழும் இம்மரத்துக்கு அந்த வாய்ப்பேயில்லாது மருதுமரம் தட்டியெடுத்துள்ளதிலிருந்து அதிலும் இரண்டாந்தர நிலையிலேயே எமது மரமும் வைக்கப்பட்டுள்ளதாக ஆதங்கப்பட வைத்துள்ளது. பனை மரத்தையே வாழ்வாதாரமாக நம்பி வாழும் மக்கள் வாழும் இப்பூமியில் இதற்கென ஓர் முக்கியத்துவம் கொடுக்கப்படாதது அதனது அபிவிருத்தியையும் அந்தளவிலே வைத்திருப்பதாக எண்ணத் தோன்றுகின்றது.

மூன்று தசாப்தமாக நடந்த போரிலே இழக்கப்பட்ட பனைமரங்கள் ஏராளம். பளையிலிருந்து இயக்கச்சி வரை தலையிழந்து தனியனாக நின்று தான் பிறந்த இடத்தின் போரின் வடுக்களையும் உக்கிரத் தன்மையும் இப்போதும் பறை சாற்றி அந்த வழியால் பயணிப்போர் அனைவருக்குமே ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்திருக்கும் மரமாகவும் இது திகழ்கின்றது.

என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் என்பது பனை மரத்திற்கும் அதனது வளத்திற்கும் முற்றுமுழுதாகவே பொருந்தும். இந்த வளத்தைப்பற்றிக் கல்வியியலாளர்கள் சிந்தித்ததும் குறைவு. எங்களூரில் எம்மினிய உறவுகளுடன் குதூகலித்திருக்க இப்படியொரு வளத்தை வைத்துக் கொண்டு அபிவிருத்தி என்ற போர்வையிலே ஏதேதோ கனவு காண்பது போலவே இங்கு எண்ணத்தோன்றுகின்றது. அதிலும் விசித்திரம் என்னவென்றால் இங்கு உற்பத்தியாகும் பனை வெல்லத்தைத் தென்பகுதி மக்கள் முண்டியடித்து வாங்கிச் செல்வதையும் எங்களூரவர், எம்முரிமைக்காகக் குரலெழுப்புவோர் இப்பிரதேசத் திலேயே விளையாத கரும்புச் சீனிக்குத் தவமிருக்கின்ற நிலைமையும் அதிலேயே எமது வாழ்க்கையைக் கழித்து விடுவதையும் பார்த்து நெஞ்சு விம்மு கின்றது.

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வெல்லத் தேவைக்காக எங்களூர் பனை வெல்லத்தை முதலில் பயன்படுத்தத் தொடங்குங்கள். வெள்ளைச் சீனியை உணவாக்கினாலும் எங்களது நிறத்தில் மாற்றமில்லையே, கறுப்பு கறுப்புத்தான், சுவையும் ஒன்றுதான். பனை வெல்லம் கறுப்பாக இருப்பதினாலேயே உங்களுக்கு இந்த அருவருப்பு. ஆனால் பனை வெல்லத்தில் கரும்புச் சீனியில் இல்லாத மருத்துவக் குணம் நிறையவே உண்டு. எமது சுவாத்தியத்துக்கென எங்களுக்கு இறைவனாலும் இயற்கையினாலும் தரப்பட்ட அரும்பெரும் சொத்து, முதுசம் எங்களூர் பனைமரங்கள் தான். இதனது நிழலிலே இருந்து கொண்டு இம்மரத்தினது பயனைப் பற்றியும் அதனது அபிவிருத்தியைப் பற்றியும் சிந்தியாது மேற்குலக உணவை இரசித்து உண்டு இறுதி யில் நோய் வாய்ப்பட்டு அங்குமிங்கு மாக அலைந்து திரிகின்றோமே! இனியாவது இது விடயத்தில் ஓரளவு கரிசனை கொள்வோமா?

நடந்தேறிய போரில் அழிந்த பனை மரங்கள் அதிகம் எனக் கணக்கிட்டுள்ளனர். பனை, தென்னை மரங்கள் கூவிப்பாய்ந்த ஷெல்களினை இடைமறித்ததால் தமது தலைகளையிழந்தது ஒருபுறமிருக்க இதனால் பலவுயிர்கள் காப்பாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வளவுக்கும் மேலாகப் போரிலீடுபட்ட இருபகுதியினரும் தற்பாதுகாப்புக்காக அமைத்த காவலரண்களுக்கு இவ்விரு மரங்களையுமே வசதி கண்டு வெட்டித்தறித்துத் தூண்களாக்கியிருந்தனர். இதிலுமே பல மரங்கள் அழிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் பனை, தென்னை சமாசத்தினது முன்னை நாள் தலைவர் நடராசா அவர்களது கருத்துப் படி மக்கள் இடம்பெயர்ந்த பகுதி களில் பனம் பழங்கள் விழுந்தவை விழுந்த இடத்திலேயே விடப்பட்டதனால் அதிலிருந்து முளைத்தெழும்பிய வடலிகள் கணிசமான அளவு இருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது என்றும் இந்த வடலிகளை முழுமையாகப் பயன்படுத்தி பனையோலையின் தண்டிலிருந்து நார் பெறுவதன் மூலம் சுயவேலை வாய்ப்பை உருவாக்க முடியும்.

### பனைமரத்தின் எண்ணிக்கையை அதிகரித்தல்

வடபகுதியிலுள்ள பயிர்ச்செய்கை நிலங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களைத் தெரிவு செய்து பனம் விதைகளை நடவு செய்தலை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இது விடயத்தில் பனை அபிவிருத்தி அதிகாரசபை பல முன் மாதிரித் திட்டங்களை வடிவமைத்துச் செயற்படுவது பாராட்டுக்குரியது. பனை அபிவிருத்தி அதிகார சபையும் பனை, தென்னை கூட்டுறவு சமாசத்தினதும் கூட்டுமுயற்சியுடன் பல்கலைக்கழகப் புத்திஜீவிகளும் இணைந்து கொள்வதுடன் பல நலன் விருப்பிகளும் இதில் கரிசனை கொண்டிருப்பது இந்த முயற்சிக்கு உறுதுணை யாயிருப்பதாகக் கொள்ளலாம். இருப்பினும் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பனம் விதைகளை நடவு செய்த 'மில்க்வைற்' முன்னை நாள் அதிபர் அமரர் கனகராசாவினதும் அண்ணா கோப்பி ஸ்தாபகர் உயர்திரு நடராசா அவர்களதும் சமூக செயற்பாட்டை இவ்விடத்தில் பதிவு செய்தல் தகும். இவர்களைப் போல பல தொண்டு நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் பக்கபலமாக நின்று பனை வளத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவ வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பனம் விதைகளை நடுகைக்காகத் தெரிவு செய்யும் போது தாய் மரத்திலுள்ள நல்ல இயல்புகளைக் கவனத்திலெடுத்து அவற்றின் அடிப்படையில் விதைகளைத் தெரிவு செய்து நடுகை செய்தல் சிறந்தது. இங்கே நல்ல இயல்புகளைக் கொண்ட பல பனைமரங்களை நாம் இழந்துவிட்டோம் என்பதனைக் கருத்திற் கொள்வது நல்லது.

இவ்வியல்புகளில் குட்டையினங்கள், நன்றாகப் பனங்[illegible] பனம் பழங்களை [illegible] மரங்கள், பனங்களியில் கசப்புத் தன்மை குறைவான பனம் பழங்கள் ஒரேஞ் நிறத்தினையெடுக்கும் பனம்பழங்கள், பெரிதான பனம் விதையை யுருவாக்கும் மரங்கள், சீவல் தொழிலில் அதிகளவு பூந்துணர் சாற்றைக் கொடுக்கும் மரங்கள், (அது ஆண் பனை ஆயினும் சரி பெண் பனையாயினும் சரி). அகன்ற அடியைக் கொண்ட பனைமரங்கள் எனப் பல இயல்புகளைக் குறிப்பிட்டுக் கூறலாம். இவ்வாறான பல விரும்பத்தக்க இயல்புகளைக் கொண்ட பனைமரங்கள் இருக்கும் இடங்கள் பொதுமக்களின் உதவியுடன் இனங்காணப்பட்டு அவை தறிக்கப்படாதிருப்பதை உறுதிசெய்து கொள்வதுடன் அவற்றின் இயல்புகள் ஆவணப்படுத்தப்பட்டு அவற்றை மேலும் இனம் பெருக்கும் வழிவகைகளையும் திட்டமிட்டுச் செயலாக்க வேண்டும்.



குட்டையினப் பனை மரங்களை எதிர்காலத்தில் நடுகை செய்வது சீவல் தொழில் உட்படப் பல வேலைகளுக்கு உதவியாக இருக்கும். பனை சார்ந்த தொழிற்றுறையில் ஏற்பட்ட விழுக்காடு காரணமாகவும் அதனது அபிவிருத்தி மற்றும் மேம்பாடு சார்பாக முக்கியத்துவப்படுத் தப்படாமையும், சீவல் தொழில் உட்பட ஏனைய பனைசார் தொழிலிருந்து வள முள்ள இளைஞர், மகளிரை ஏனைய தொழிற்றுறைகள் கவர்ந்திழுத்துள்ளன. இவை அனைத்துக்கும் பனை வளஞ் சார்ந்த தொழிற்றுறையை சமகால தேவைகட்கும், சந்தைத் தேவைக்குமேற்ப அபிவிருத்தி செய்யாமையே காரணமாகும். பனம் பொருள்களை உள்ளூர் நுகர்வுக்கு தரமான பொருள்களாக மதிப்பேற்றஞ் செய்து தயார்ப்படுத்த வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. எமது நாட்டிலேயே சிறந்த சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டங்கள் விரைந்து தீட்டப்பட வேண்டும். அதற்கும் மேலாக உலக சந்தையில் இப்பொருள்களுக்கான தேவையை அதிகரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்தல் அவசியமாகும். எம்மவர்கள் செறிந்து வாழும் கனடா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளில் வர்த்தக இணையத்தை இங்கிருந்து ஏற்படுத்தினால் இச்செயன் முறையை விரைந்து செயலாக்க முடியும்.

பனை, தென்னை அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடல்களிலிருந்தும் அதனது தலைவர், பொது முகாமையாளர் திரு.சிவகுமார் குறிப்பாக பண்டத்தரிப்பு பனை, தென்னை அபிவிருத்திச் சங்க முகாமையாளர் திரு குணரட்ணம் அவர்களுடன் கலந்துரையாடியதிலிருந்தும் பின்வரும் விடயங்களை முக்கியப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதில் பனை அபிவிருத்திச்சங்க பொது முகாமையாளர் திரு.ப. லோகநாதன் அவர்களது கருத்துக்களையும் உள்வாங்கி இவ்விடயங்கள் அலசி ஆராயப்பட்டன.

அவசியம் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள்

1.கள் உற்பத்தியைக் குறைத்தலும் பூந்துணர் சாற்றை நொதிக்காது பதனிடலும். சீவல் தொழிலாளர்களுக்கு பெரும் பிரச்சினையாகக் கள் உற்பத்தி அமைந்திருக்கின்றது. யாழ்ப்பாணத்து பனங்கள்ளுக்குத் தென்பகுதியிலிருந்து வருகை தரும் மக்களிடையே பலத்த வரவேற்பிருந்தும் அதிகமாக உற்பத்தியாகும் கள்ளைத் தவறணைகளுக்கும் மீதியை வடிசாலைக்கும் அனுப்பி அங்கே சாராயமாக மாற்ற வேண்டியிருக்கின்றது. இவ்வாறு மாற்றி சாராயமாக விற்பனை செய்வதற்காக ஏறக்குறைய வருடமொன்றுக்கு 35 இலட்சம் ரூபாவை வரிப்பணமாகச் செலுத்த வேண்டியுமுள்ளது. இதில் ஆச்சரியம் என்னவென்றால் மக்கள் தமது சுயமான உழைப்பினால் பெறும் பொருளை விற்பதற்கு வரிப்பணமும் கட்டுவதுதான். விந்தையிலும் விந்தையிதுவன்றோ! இங்கே இந்த வரிப்பணத்தில் அவரவர் சொந்த வாழ்க்கையை எளிதாக நடாத்திக் கொண்டும் மக்களுக்காக செய்யவேண்டிய வேலையைச் செய்யாமலும் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கள் உற்பத்தியை மாற்றி பூந்துணர் சாறாக, பதநீராக இதனைப் பாதுகாக்க முடியுமாயின் 35 இலட்சம் ரூபா வரிப்பணமும் இச்சமாச மக்களின் இலாபப் பணமாக மாறிவிடும். இந்த நிலையை ஏற்படுத்திக் கொடுத்தால் மட்டுமே போதுமானது இம் மக்கள் வாழ்க்கை செழிப்படைந்து விடும், வருமானமும் பெருவிடும்.

நொதிப்பதை தடுப்பதற்கான மாற்று வழி அவசியம் தேவை.

பேராசிரியர் கு.மிகுந்தன்
தலைவர்,
விவசாய உயிரியல் துறை, விவசாயபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பனம் பாளையைச் சீவி விட்டு, கட்டப்படும் பாத்திரம்(முட்டி) அன்று மாலையில் அன்றி அடுத்த நாள் காலையில் மாற்றப்படும். இது காலவரைக்கும் அந்த பாத்திரத்துள் சிறிது சிறிதாக ஊறிச் சேர்ந்திருக்கும் பூந்துணர் சாறு நொதியங்களின் தாக்கத்திற்குட்பட்டு கள்ளாக மாறிவிடும். இவ்வாறு நொதித்தலைத் தடுப்பதற்காகவே முட்டியின் உட்புறச் சுவரில் சுண்ணாம்பு பூசிவிடுவர். இவ்வாறு சுண்ணாம்பு பூசுவதைத் தாம் அதிகமாகவே பூசவேண்டியிருப்பதாகவும் அளவைக்குறைத்துப் பூசினால் நொதியங்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது போய்விடுவதாகவும் இதனால் இச்சாறு நொதிப்படைந்து விடுவதாகவும் குறைபட்டுக் கொள்ளும் எங்களூர் சீவல் தொழிலாளர்கள் சுண்ணாம்பு பூசுவதற்குப் பதிலாக மாற்றுப் பொருளொன்றினை இனங்கண்டு கொண்டால் அல்லது ஆய்வுக்குட்படுத்தி வெற்றிகண்டால் அதுவே இம் மக்கள் அனைவரது வாழ்வாதாரப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பதாக அமையும். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக்குறைந்த அனுமதிக் கட்டணம் (Admission Fees) முதலாம் வருடத்திற்கு மட்டுமே

# சர்வதேச தரம் வாய்ந்த BBS பாலர் பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் January 2011ற்கான புதிய அனுமதிகள்

- 10 வருடமாக சர்வதேச தரத்திலான BBS இன் ஆங்கிலக் கற்கை நெறிகளால் யாழ்குடாநாட்டில் ஆயிரக்கணக்கான சிறார்கள் பயன் பெற்றுள்ளார்கள்.
- இது வரை BBS இன் வளாகங்களில் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான சிறுவர்களில் 95 வீதமானோர் யாழ்குடாநாட்டின் அதி சிறந்த பாடசாலைகளில் கற்பதற்கு அனுமதி பெற்றிருப்பதுடன் 5ஆம் ஆண்டு புலமை பரிசிலிலும் சித்தியடைந்துள்ளார்கள்.
- யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்கென இயங்கிய ஒரே ஆங்கில மொழிமூல தனியார் பாடசாலை.
- அன்றிலிருந்து இன்று வரை அனைவரும் செலுத்தக் கூடிய ஒரே கட்டணம்.
- உங்கள் வசதி கருதி யாழ்குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் சர்வதேச தரத்திலான வளாகங்கள்.

Dr. Maria Montessori & Canadian Early Learning Method ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்.

## பாலர் பிரிவுகள்

**Play Group ( 2+ சிறார்களுக்கு)**
- Sensorial Activities
- விளையாட்டுகளுடன் கூடிய அதிநவீன கற்கை நெறிகள்.
- Song, Poems, Nursery Rhymes, Drama & Dialogue

**Montessori ( 3+ சிறார்களுக்கு)**
- மொழி அறிமுகம் – ஆங்கிலம் (Speech Skills) – தமிழ்
- எழுத்து அறிமுகம் – ஆங்கிலம் (Writing Skills) – தமிழ்
- எண் பயிற்சிகள் (Arithmetical Operations)
- Sensorial Activities
- Song, Poem, Drama, Dialogue

**Pre School ( 4+ சிறார்களுக்கு)**
- எண், எழுத்து கருதுகோள்
- ஆங்கில பேச்சுத்திறன் செயற்பாடுகள் Audio, Visual
- Sensorial Activities
- Song, Poem, Drama, Dialogue
- அடுத்த கல்வியாண்டுக்கான முழத் தகுதி நிலை

## பாட விதானம்

- பாடசாலை ஆரம்பம் காலை 7.30
- பாடசாலை முடிவு மதியம் 12.30
- வாரத்தின் 25 மணித்தியாலங்களுக்கான கல்விச் செயற்பாடுகள்
  - Language Skils- English - 5 Hrs
  - Language Skils- Tamil - 4 Hrs
  - Maths - 4 Hrs
  - Sensorial Activities - 2 Hrs
- Song, Poem, Drama, Dialog - 2 Hrs
- Art and Craft - 2 Hrs
- Play Activities - 3 Hrs
- Baratha Natyam - 1.5 Hrs
- Computing - 1.5 Hrs

### எம் அனைத்து சிறார்களும் பங்குபெற்றும் கல்விசார் நிகழ்வுகள்

- English Day & Concert - ஆங்கில தின கலைவிழா
- Sports Day- விளையாட்டு விழா
- Bharatham Festival- பரத நாட்டிய விழா
- Art & Craft Exhibition- சித்திர கைவேலைக் கண்காட்சி
- Muthamilzh Vizhla- முத்தமிழ் விழா
- Pre-School Graduation and Carol Ceremony

## BBS இன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர்: | 140, கோயில் வீதி நல்லூர். |
| கோப்பாய்: | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி. |
| நீர்வேலி: | 1ம் கட்டை, இராச வீதி, நீர்வேலி. |
| சாவகச்சேரி: | சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அருகாமை. |
| மானிப்பாய்-1: | 252, ஆலடி சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். |
| மானிப்பாய்-2: | சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| சுன்னாகம்: | Lakshmi(புதிய நீதிமன்ற அருகாமை) கே.கே.எஸ் வீதி, மல்லாகம். |
| புலோலி: | ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |
| அச்சுவேலி: | அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை. |
| சங்கானை : | நிகர வைரவர் கோவிலடி, AGA Office அருகாமை |

British BUSINESS SCHOOL
Where Students Come First

வெளிநாடுகளில் தேர்ச்சி பெற்ற கல்வியாளர்களால் சர்வதேச தரத்திற்கமைய நடாத்தப்படும் கல்வி நிலையம்.

# BRITISH BUSINESS SCHOOL

140, கோயில் வீதி, நல்லூர். தொலைபேசி: 021 222 5796, 077 362 7055, 077 408 3656, 077 664 6357

''நயினை நாகபூசணி துணை''

# நீங்கா நினைவலைகள்

## 1ஆம் ஆண்டு நினைவு | 20ஆம் மாத நினைவு



மண்ணில்
1917.10.22

விண்ணில்
2010.01.27

### வைத்திலிங்கம் சொர்ணலிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: பூர்வபட்ச துவாதசி

மண்ணில்
1927.02.01

விண்ணில்
2009.04.18

### வைத்திலிங்கம் குகதாசன்
(குகநாது)

திதி: அபரபட்ச நவமி

எழுத்தாணி பிடித்து எம்மை
ஏற்றமுற வைத்தீர் அப்பா!
கட்டிய மனையாளை இளமையில் இழந்தபோதும்
சிதைக்கு தீ மூட்டும் தலைமகனை
அரக்கர் அழித்தபோதும்
சிந்தை கலங்காமல் கல்விதனை
எமக்கூட்டி அவையத்தில் முந்தியிருக்க செய்தீர் அப்பா!
நீர் படுக்கையில் போய் பல நாள்கள் ஆகவில்லை- அப்பா!
பரமனவன் காலடியில் பக்குவமாய் போய்ச்சேர்ந்தீர்- அப்பா!
அடுக்களையில் உம்மை ஆகுதியாக்கி
எம்மை அரவணைத்து ஆளாக்கினீர்- அப்பா
எமக்கு மீண்டும் பிறப்புண்டேல்
உமக்கு மகனாக வந்துதிக்கவரம் தருவாய்
நயினைத்தாய் நாகபூசணியே!

மேழி பிடித்தெம்மை மேதினியில் உயர்த்திவிட்டீர் ஐயா!
பக்குவமாய் எம்மை பாரினில் வளர்த்து விட்டீர்- ஐயா!
கல்விச் செல்வம் தனை எமக்கூட்டிப் பட்டதாரி ஆக்கிவிட்டீர் - ஐயா
நோய் என்று ஒருநாளும் படுக்கைக்குப் போகாமல்
நொடிப் பொழுதில் போனதெங்கே-ஐயா
தனயன் வீடு சென்று பார்த்துவா என அம்மாவை அனுப்பி விட்டு
தனியே இருந்து அம்பாளை அடைந்துவிட்டீர்- ஐயா
நெஞ்சு இருக்கும் வரை உமது நினைவு இருக்கும்- ஐயாவே!

**தாயேயாகி வளர்த்தனை போற்றி**

நெஞ்சு கலந்த நினைவுகளுடன்:
திருமதி குகதாசன் செல்லம்மா, திவாகரன் முத்துலெட்சுமி (குடும்பம்),
பகீரதன் யமுனா (குடும்பம்), கனகேஸ்வரன் திருமலர் (குடும்பம்),
மோகனேஸ்வரன் திவாகரி (குடும்பம்), விசுவலிங்கம் விமலேஸ்வரி (குடும்பம்),
யோகேஸ்வரராசன் கேதீஸ்வரி (குடும்பம்)

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவைத் தெய்வமாகப் போற்றிப் பாதுகாத்த நம் முன்னோர்

இன்று பட்டிப்பொங்கல் நன்னாள். வயலில் நெல் விளைச்சலுக்கு உழவர்களுடன் சேர்ந்து பாடுபட்டு உழைத்த எருதுமாடுகளுக்கும் எமக்கு வேண்டிய ஒரு பூரணமான சத்துணவாகிய பாலைத் தருகின்ற பசுக் கூட்டங்களுக்கும் புத்தரிசிப் பொங்கலிட்டுக் குதுகலிக்கும் பொன்னான நன்னாள் இன்றாகும்.

ஆலயத்திலே கோயில் கொண்டெழுந்தருளி வீற்றிருக்கின்ற முழுமுதற் கடவுளான சிவபெருமானுக்கு வேண்டிய அபிஷேகத் திரவியங்களைத் தருகின்றதும் தமிழ் மக்களால் ''கோமாதா'' என்று பூஜிக்கப்படுகின்றதுமாகிய பசு எமது மனித வாழ்க்கையிலே முக்கிய பிரதான இடத்தை வகிக்கின்றது. அது மாத்திரமின்றிக் குழந்தைகளின் முக்கிய சத்துணவாகிய பாலைத் தருகின்ற பசு தெய்வமாகப் போற்றி வணங்கப்படுவதுடன் அது ஒரு தெய்வீகம் நிறைந்த பிராணியாகவும் கருத்தப்படுகின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த பசுக்கூட்டத்துக்கும் எருது மாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாக இனிய அமுது பொங்கிப் படைக்கும் பட்டிப் பொங்கல் நன்னாளாக இன்றைய நாள் அமைகிறது. பூரண உணவான பால் தரும் பசுக்கள் தெய்வீகம் நிறைந்தவை. அவற்றை வணக்கஞ் செலுத்தி வழிபாடு செய்ய வேண்டுமே தவிர வதைக்கப்படலாகாது.

பசுவின் உடம்பு முழுவதும் தேவர்கள் உறைந்திருப்பதாகப் புராணக் கதைகளில் கூறப்படுகிறன. அதுமாத்திரமின்றி பசுமாடு ஒரு சாதுவான பிராணியுங்கூட. அதனால் தெய்வமாகப் போற்றி வணங்கி வழிபாட்டியற்றபட வேண்டிய பசுக்கூட்டங்களுக்கும் இராப்பகலாகப் பாடுபடும் எருது மாடுகளுக்கும் இனிப்பான பொங்கல் பொங்கிப் படைக்கப்படுகின்றது. மேலும் மாடு என்றால் செல்வம் என்று பொருள். ஆகவேதான் நமது முன்னோர் தை மாதம் பிறந்தவுடன் சூரியபகவானுக்குப் பொங்கிப் படைக்கின்ற தைப்பொங்கல் விழாவுக்கு மறுநாளே பட்டிப் பொங்கலையும் செய்துவிடுகின்றனர்.

முன்பு வயலிலே பாடுபட்ட எருது மாடுகளும் இனிய பால் தருகின்ற பசுமாடுகளும் தமிழர்களின் அருஞ் செல்வமாகவே மதிக்கப்பட்டு வந்தன. பண்டைக்காலத்தில் நாடு பிடிக்கும் ஆசையில் யுத்தம் செய்ய அறைகூவல் விடுக்கும் அரசர்கள் தமது முதல் நடவடிக்கையாக அந்த நாட்டின் பிரதான செல்வமான பசுநிரைகளைக் கவர் வதையே செய்யத் தொடங்குகின்றார்கள். அவ்வாறு செய்துவிட்டால் அவனின் பல வீனத்தையே பறை சாற்றுவதாகக் கருதப் பட்டது.



எனவே ஒரு நாட்டின் அரச செல்வாக்கு அந்நாட்டின் பசு நிரைகளிலேயே தங்கியிருந்திருக்கின்றது. அதன் காரணமாகவே 'பட்டிப்பொங்கல்' எனப்படும் இன்றைய கொண்டாட்டம் வெகுசிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. அந்தவகையில் இன்று பசுக்கூட்டங்களுக்கும் எருது மாடுகளுக்கும் இனிய அமுது வழங்குகின்ற பொங்கல் விழா சிறப்பாக நடத்தப்படுவதுடன் அவைகளை வணங்கி, அவற்றுக்குப் பூமாலை அணிவித்துப் பட்டுச் சாத்தி விசேட பூஜை வழிபாடுகளுடன் தீபாராதனையும் செய்யப்படுகின்றது.

ஆகவே இன்றைய நல்ல நாளான 'பட்டிப்பொங்கல்' சிறப்பு நாளிலே பசுவுக்கும் காளைக்கும் பொங்கிப் படைத்துப் பூஜை வழிபாடுகளியற்றி சிந்தித்து, வந்தித்து, சேவித்து வணங்கி, வாழ்த்தி, இறும்பூ தெய்தியிருப்போமாக!

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

# சீனித் தயாரிப்புக்கு மூலப் பொருளான கருப்பஞ்சாறு நோய் நீக்கும் நிவாரணியாகவும் பயன் தருகிறது

## கலியாண முருக்கு

வேறுபெயர்: முள்முருக்கு, மலை எருக்கு, கவிர், கிஞ்சுகம்
தாவரவியற் பெயர் - எரித்திரைனா இண்டிக்கா (Erythrina indica)
குடும்பம் - பப்பிலியோனேசியே (Papilionaceae)
சிங்களப் பெயர் - எரபடு
சமஸ்கிருதப் பெயர் - பலாச
ஆங்கிலப் பெயர் - coral tree

இந்துக்களின் திருமணத்தின் போது பந்தற் கால், கன்னிக்கால் நடுவது வழக்கம். அதற்குப் பயன்படுவதால் இந்த மரத்திற்குக் கலியாண முருக்கு என்று பெயர். இதன் முக்கூட்டிலைகள் முறையே சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மும்மூர்த்திகளைக் குறிப்பதாகவும் எனவே திருமணத்தில் மும்மூர்த்திகளின் பிரசன்னத்தை எடுத்துக் காட்டும் ஐதீகமாகவும் முருக்குப் பயன்படுகிறது. அதுமட்டுமன்றி அகலிகையிடம் தப்பாக நடந்ததால் இந்திரன் உடலில் ஆயிரம் கண்கள் உண்டாகும்படி சபிக்கப்பட்டதாகப் புராணவரலாறு கூறுகிறது. முருக்கில் காணப்படும் முள்கள் இந்திரன் பெற்ற சாபத்தை எடுத்துக் காட்டுவதாக உள்ளன. எனவே திருமணச் சடங்கில் அருந்ததி காட்டல், அம்மி




மிதித்தல் போன்றன பெண்ணுக்குக் கற்பின் முக்கியத்துவத்தை உணர்த்துவதுபோல ஆணுக்குப் பிறன்மனை நயந்தால் ஏற்படும் விளைவை எச்சரிப்பது போல திருமணச்சடங்கில் கலியாண முருக்கு நாட்டப்படுகிறது எனலாம். கலியாண முருக்கில் முள்ளுள்ளது, முள்களற்றது என்ற வகைகள் உண்டு. இது சிறுமர வகுப்புக்குரியது. வைரமற்ற தண்டு, சிறுமுள்களைக் கொண்டுள்ளது. கூட்டிலை மூன்று சிற்றிலைகளைக் கொண்டது. பலாசம் இலைகளைப் போலிருக்கும். மாசி, பங்குனியில் பூக்கும். பூக்கள் செந்நிறமானவை. 'நெற்றுக்கள்' கரிய நிறமாகவும் 12 விதைகள் வரை கொண்டதாகவும் இருக்கும். வெற்றிலைக் கொடி, மிளகுக் கொடி என்பவற்றைப் படரவிடுவதற்காக முள்முருக்கு அதிகம் நடப்படுகிறது.

இதன் இலையைக் குறுணலாக நறுக்கி சுடு நீரிலிட்டு, சூடாக இருக்கும் போதே கீல் வாதத்துக்கு வைத்துக் கட்டடினால் வலி நீங்கும். இலைச்சாறு 2 மேசைக் கரண்டியளவில் எடுத்து சிறிது தேன் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்க வயிற்றுப்புழுக்கள் வெளிப் படுவதுடன் மலமும் நன்கு கழியும்.

இதன் இலைச்சாற்றை 1-2 தேக்கரண்டி வீதம் காலை, மாலை இருவேளையும் பருகிவர பெண்களுக்குண்டாகும் சூதகவலி நீங்கும். சிறுநீர் எரிச்சல்

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

உள்ளவர்கள் பருகிவர எரிச்சல் மாறும். பூவைக் குடிநீர் செய்து குடித்துவர இரத்தகுன்யம் மாறும். புண்களில் கிருமியிருப்பின் பட்டைச் சாற்றைப் பிழிந்து புண்களின் மேல் விடக் கிருமிகள் அழியும்.

## கரும்பு

வேறுபெயர்: இக்கு, இக்ஷ•, புனற்பூசம், வேழம், கன்னல்ஸ்
தாவரவியற் பெயர் - சக்காரம் ஒபி சினேரம் (Saccharum officinarum)
குடும்பம் - கிராமினே (Gramineae)
சிங்களப் பெயர் - உக்
சமஸ்கிருதப் பெயர் - இக்ஷ
ஆங்கிலப் பெயர் - sugar cane

அம்பிகையின் வில்லாக (மன்மதனின் வில்லாகவும்) உள்ள அமிர்தம் போன்ற ''கரும்பை - அரும் பெறல் அமிழ்தம் அன்ன கரும்பு இவன் தந்தோன்'' என்று அதியமான் நெடுமான் அஞ்சியின் முன்னோர்கள் விண்ணுலகில் இருந்து இவ்வுலகுக்குக் கொண்டு வந்தனர் என்று ஒளவையார் புகழ்ந்து பாடியுள்ளார். கரும்பில் வெண்கரும்பு, செங்கரும்பு, பேய்க்கரும்பு என்று பலவகையுண்டு. இதில் பேய்க்கரும்பு கரும்பு போலவே இருந்தாலும் அதில் சாறு குறைவாகவும், கசப்புச் சுவையுடையதாகவும் இருக்கும்.

கரும்பு நீண்டு, உயர்ந்து வளரும் கணுக்களுடைய ஒரு புல் வகையாகும். இலைகள் பசுமையாகவும் சொர சொரப்பாகவும் நீண்டும் காணப்படும். வெண்ணிறமான பூக்கள் மஞ்சரியில் காணப்படும். கருப்பஞ்சாறு 1-2 மேசைக்கரண்டி வீதம் கொடுத்துவர விக்கல் தணியும்.

கடுமையான நாவரட்சி, தாகத்திற்குக் கருப்பஞ் சாற்றை நீருடன் கலந்து அடிக்கடி பருகக் கொடுக்கலாம். கருப்பஞ்சாற்றைப் புளிக்க வைத்துச் செய்யப்படும் காடிக்குக் கருப்பங்காடி என்று பெயர். இது 15-30 மி.லீ.அளவில் சாப்பிடமுன் பருகிவர பசியை உண்டு பண்ணுவதுடன் சமிபாட்டையும் சீராக்கும்.

தேள், குளவி, தேனீ முதலியன குத்தினால் அந்த விடத்தில் கருப்பங்காடியைப் பூசச் சுகமுண்டாகும். கரும்பின் வேரைக் குடிநீரிட்டுப் பருகக் கொடுக்க சிறுநீர் எரிச்சல் தணிவடையும் .

கருப்பஞ் சாற்றிலிருந்து தயாரிக்கப்படும் சீனி, கற்கண்டு என்பன மருந்துகளுக்கு அனுபானமாக வழங்கப்படுவதுடன் மருந்துகளின் கசப்புத் தன்மையைக் குறைக்கவும் உதவுகின்றன.

## ஆனைப்புளி

வேறுபெயர்-பப்பரப்புளி, பூரிமரம், சீமைப்புளி.
தாவரவியற்பெயர்-Adansonia digitata (அடன் சோனியா டிஜிற்றேற்றா)
குடும்பம்-Bombaceae (பொம்பகேசி)
சமஸ்கிருதப்பெயர்-கோரக்.
ஆங்கிலப்பெயர்-Baobab

பண்டைக்காலத்தில் கோரக்கர் என்ற துறவி இம்மரத்தின் கீழ் இருந்து தமது சீடர்களுக்கு உபதேசம் செய்ததால் இதற்கு கோரக் மரம் என்று பெயர். மேலும் இந்திரலோகத்தில் இந்திரன் இம்மரத்தை வளர்ப்பதாகப் புராணங்கள் கூறுவதால் இந்துக்களிற் சிலர் இதனைப் புனிதமான மரமாகக் கருதி வழிபடுகின்றனர். இம்மரம் விசித்திரமான வடிவுடையது. அடிமரம் தடித்துப் பல மீற்றர்கள் விட்டமுடையதாகும். தண்டு சிறிது உயரத்திலேயே நிலைத்து அதிலிருந்து பல சிறு கிளைகளை உருவாக்கும்.

நடுமரத்தின் அடியிலிருந்து பலவேர்கள் உருவாகித் தடித்து நான்கு புறமும் பரவிப்படர்ந்து காணப்படும். மரத்தின் நடுப்பகுதி பட்டுப்போனாலும் வெளிப்புறமுள்ள பட்டை உயிர்ப்புடன் பரந்து விரிந்து வளர்ந்து கொண்டேயிருக்கும். எனவே இம்மரத்தை வெட்டிச்சாய்த்தாலும் அது இலகுவில் பட்டுப் போகாமல் துளிர்த்துக்கொண்டே இருக்கும். எனவே இதை அழிவில்லாத மரம் என்றும் கூறுவர். அடியில் வேர்கள் பரந்தும் மேலே கிளைகள் ஒடுங்கியும் இருப்பதால் இம்மரத்தைப் பார்க்கும்போது தலை கீழாக உள்ள மரம் போலத் தோன்றும். இதன் இலைச் சாற்றால் வேர்க்கொம்பை அரைத்து மூட்டுவாதம், பறங்கிப்புண் என்பவற்றுக்குப் பூசலாம். கை, கால் மூட்டுவீக்கம், வலி என்பவற்றுக்கு இலையை அவித்து ஒற்றடம் கொடுக்க மாறும். பட்டையைக் குடிநீர் செய்து கொடுக்க முறைக் காய்ச்சல் தணியும்.

(தொடரும்...)



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கைதடி, கண்டி வீதியில் அமைந்துள்ள அரசினர் வயோதிபர் இல்லம் மற்றும் அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் கண்டி வீதியில் இருந்து 100 யார் தூரத்தில் நாலே கால் (4¼) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0775440293, 0728509134


## மரண அறிவித்தல்

### திருமதி சாரதா பரராசவிருந்தம்



சித்தம்பாதியைப் பிறப்பிடமாகவும் மூத்த விநாயகர் கோயிலடி, காவில் வயலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதா பரராசவிருந்தம் 13.01.2011 வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் பரராசவிருந்தம் (விருந்தம்) அவர்களின் மனைவியும் அமரர் வடிவேலு- ராஜபூபதி தம்பதியரின் மகளும், அமரர் கனக சபை- ஆயிலியம் தம்பதியரின் மருமகளும், வினோதன் (பிரான்ஸ்), விசோந்தன் (பிரான்ஸ்), விஜிதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருட்செல்வி (பிரான்ஸ்), கலைச்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் சாஜிசன், மிதுனா, தாரிகா, அஜீத் ஆகியோரின் பேர்த்தியும், சாந்தினி, அருள்நந்தன் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் வெள்ளையம்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனத்திற்காக வெல்லன்கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
விருந்தம் (கணவர்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 . 03 . 1997



மறைவு 27 . 01 . 2010

அமரர்
**சந்திரகாந்தன் ஐஸ்வர்யா**
சிரார்த்ததிதி: பூர்வபட்ச துவாதசி
16.01.2011

எமது அன்புச் செல்வமே
ஆண்டு ஒன்று ஓடி மறைந்ததம்மா
கண்ணுக்குக் கண்ணாக பாரில் உமை வளர்த்தோமே!
ஏன் தான் பிரிந்தீரோ எமைப்பரிதவிக்கவிட்டு
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

331,(257),நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 31.12.1948 உதிர்வு 16.12.2010

**அமரர் முருகேசு செல்லையா**

(ஓய்வு பெற்ற அதிபர்- யா/இளைதம்பி இந்து வித்தியாலயம், முன்னாள் செயலாளர், வடமாகாண அதிபர் சங்கம்)

அன்பு மொழி பேசி, எம்மை ஆதரவாய்
அரவணைத்து பண்புடனே வழிகாட்டி
இன்பமுடன் வாழவைத்து துன்பச்சுவடே
தெரியாமல் அன்புடனே வளர்த்தெடுத்த எங்கள்
குடும்பத் தீபமே! மண்ணுலக வாழ்வு
போதுமென்றோ விண்ணுலகு நோக்கி
விரைந்தீர்! மாதம் ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எமது உள்ளம் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

71,பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.

## சாவகச்சேரி லயன்ஸ் கழக நலத்திட்டங்கள் ஆரம்பம்

தென்மராட்சி, ஜன.16

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் நலத் திட்டங்கள் சில சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் பிராந்தியத் தலைவர் லயன் ஏ.சபாநாதனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கழக அலுவலகத்தில் கழகத் தலைவர் லயன் தி.முருகதாஸன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 20 மாணவர்களுக்குக் காலணிகள் வழங்கப்பட்டதுடன் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளுக்குக் கற்பித்தல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதேவேளை கழகத்தில் மரக்கன்று நடும் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (201-207)

## வடமாகாணத்துக்கு புதிய அஞ்சல் மா அதிபர்

தென்மராட்சி, ஜன.16

வடக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபராக எஸ்.இரத்தினசிங்கம், கடந்த வாரம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதுவரை கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபராகக் கடமையாற்றியவர். அதேவேளை இதுவரை காலமும் வடமாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபராகக் கடமையாற்றிய வீ.குமரகுரு அஞ்சல் தலைமையகத்துக்கு மாற்றமாகிச் சென்றுள்ளார். (ம-122)

## வேலணை ம.ம.வியில் மின் இணைப்புப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன.16

முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் தையல் மின்சார இணைப்புப் பயிற்சிகளை வழங்க வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பயிற்சிகள் இந்த மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.இப் பயிற்சி நெறிகளில் கலந்துகொண்டு பயிற்சிபெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்போது மிகவும் பாதிப்புற்ற நிலையில் காணப்படும் முறைசாராக் கல்விப் பிரிவுக்கான கட்டடம் திருத்தியமைக்கப்படவுள்ளதாகவும் வேலணை மத்திய கல்லூரி அதிபர் பொ. அருணகிரிநாதன் தெரிவித்தார். (ம-7)

## கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர் தெரிவு

தென்மராட்சி, ஜன.16

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட் டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை 15 கிளைகளில் நடைபெற்றன.15 கிளைகளிலிருந்தும் 112 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 96 பொதுச் சபை உறுப்பினர்கள் மூலம் ஒன்பது பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204-207)

## கூட்டம்

நவாலி,ஜன.16

நாவலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிறுக்கிழமை மாலை 4மணிக்குத் தலைவர் க. தர்மகுலசிங்கம் தலைமையில் ஆலய [illegible] பெறும். (201-100)


## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 20.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.

★சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★நெல்லியடி பல்பொருள் விற்பனை, நெல்லியடி - 0774656377
★முகுந்தன், பருத்தித்துறை - 0771392593
★துர்க்கா பாம், சுன்னாகம் - 0779346599

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
(109021) தொ.பே. 021 222 6944


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தியாகராசா தேவகுருநாதன்**
(மன்னன்)
திதி: பூர்வபக்க துவாதசி

தோற்றம் 06★04★1950

மறைவு 06★02★2009

ஆண்டுகள் இரண்டு
ஓடி மறைந்தாலும்
ஆறாது உன் நினைவு
எம் உள்ளத்திலிருந்து.

தற்காலிக முகவரி:
அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

நிரந்தர முகவரி:
அல்லிப்பளை,பளை.

தே. அரியதேவி
(மனைவி).


## Study in India

Bangalore University, VTU, RIMS - Bangalore
SRM, Annamalai, Hindustan, Vel's- Chennai
::Courses Offered::

MBBS | BDS | BBM Management | BCA Comp. Appⁿ
B.Sc BioTech, Micro Bio, Gene, BioChe, Vis Comm, Fashion Design
LLB 3 Yrs / 5 Yrs | B.Phar | BMLT | BSW Social Work
BE Mech, E&C, EEE, Civil, AeroSpace, CompSci, IT, BioTech, Biomedical, Telecom, Automob, BioInfo, Etc.

Lakshaya Educational Consultancy
# 36B, Hampden Lane, Colombo 06.
077 9703866 011 2366243


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் பொன்னுத்துரை சின்னத்தங்கம்

தோற்றம் 14★05★1943

மறைவு 26★01★2010



அம்மா.....
நாம் அழுத போது
உன் பசியை மறந்தாய்!
நம் உறக்கத்திற்காக
உன் உறக்கம் தொலைத்தாய்!
நம் வாழ்க்கைக்காக
உன் வசந்தத்தை இழந்தாய்!
ஆனால் - நாம் மட்டும்
வாழ்கின்றோம் தாயே!
உன்னை எங்கேயோ
தொலைத்துவிட்டு.....

தற்காலிக முகவரி:
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

நிரந்தர முகவரி:
[illegible]

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கதிர்

## மூன்று கடைசி ஆசைகள்

ஒரு நாட்டில் இரண்டு இளைஞர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அந்த நாட்டு மக்களுக்குத் தீங்கு செய்து வந்தனர். அந்த நாட்டு மன்னன் இவர்கள் செய்யும் கெடுதல்களைத் தண்டித்தும் அவர்கள் திருந்துவதாக இல்லை. அரசன் இவர்களை என்ன செய்யலாம் என்று யோசித்தான். இறுதியில் அவர்களுக்கு மரணதண்டனை வழங்க எண்ணினான். மரணதண்டனை விதித்தபடியால் அவர்களின் மூன்று கடைசி ஆசைகளை நிறைவேற்றி வைப்பதற்காக இரு இளைஞர்களினதும் மூன்று ஆசைகளைக் கேட்டார். அதில் ஒருவன் புத்திசாலி. மற்றவன் சாதாரண மானவன். சாதாரணமானவனிடம் ''உன் முதலாவது ஆசையைச் சொல்'' என்று கேட்டார் அரசன். அவன் ''எனக்கு.விதம் வித மான இனிப்பு வேண்டும்'' என்று கேட்டான். அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவனின் முதலாவது ஆசை நிறை வேறியது. இரண்டாவது ஆசையைக் கேட்டான். அவன் ''எனக்கு அழகான உடைகள் வேண்டும்'' என்று கேட்டான். அவனுக்கு அழகான உடைகள் கொடுக்கப்பட்டது. அவனது மூன்றாவது ஆசை ''என் உடலை என் அண்ணாவின் கல்லறைக்குப் பக்கத்தில் புதைக்கவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். அவனின் மூன்றாவது ஆசையை நிறைவேற்றுவதாக அரசன் கூறினார்.

அரசன் புத்திசாலியிடம் உன் முதலாவது ஆசை என்ன என்று கேட்டான். அவன் எனக்கு மாம்பழம் வேண்டும் என்று கேட்டான். குளிர்காலம் ஆனபடியால் மாம்பழம் வர ஆறு மாாதம் ஆனது. முதலாவது ஆசை நிறைவேறியது. அவனின் அடுத்த ஆசையைக் கேட்டார் அரசன். அவன் தனக்கு ஒரு நாய் வேண்டும் என்று கேட்டான். அவனின் இரண்டாவது ஆசையும் நிறைவேறியது. அவனின் மூன்றாவது ஆசையைக் கேட்டான் அரசன். அவன் அரசனைப் பார்த்து ''நீங்கள் சிறந்த அரசர்; தண்டனை கொடுத்தும் திருந்தாததால் என் உடலை உங்கள் கல்லறைக்குப் பக்கத்தில் புதைக்கவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். அரசன் உயிருடன் இருக்கும்வரை அவனும் உயிருடன் இருப்பான். எப்படி புத்திசாலியின் அறிவாற்றல்.

சிறீதரன்.சிந்துஜன்,தரம் 5C
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை.

## பொது அறிவு

➢ WWW இன் விரிவாக்கம் என்ன?
உலக விரிவலை World Wide Web

➢ 2 பிரதமரால் ஆளப்பட்ட நாடு எது?
கம்பூச்சியா

➢ வானிலுள்ள மிகப் பிரகாசமான நட்சத்திரம் எது?
சியாஸ்

➢ இருவேறுபட்ட தேசியக் கொடிகளைக் கொண்ட நாடு எது?
பனாமா

➢ இலங்கையின் முதலாவது ஜனாதிபதி யார்?
சேர்.வில்லியம் கோபல்லாவ

➢ தாள் நாணயம் பயன்பாட்டுக்கு வந்த ஆண்டு எது? 1885

செ.கிருஷன், தரம் 8C,
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி.

## உங்களுக்குத் தெரியுமா?

★ தனது எடையைப் போல 50 மடங்கு எடையைத் தூக்கக்கூடிய உயிரினம்- எறும்பு

★ வாழ்நாளில் குரைக்காத நாய்- டிங்கோ

★ தனது வாலில் உணவையும் நீரையும் சேமித்து வைக்கும் பிராணி- பல்லி

★ காலைப்பிடித்துத் தூக்கினால்இறக்கும் பிராணி- தாரா

★ நாக்கில்லாத உயிரினம்- முதலை

★ பறக்க மட்டும் தெரிந்த பறவை- ஹம்மிங்பேர்ட்

ச.சங்கவி,
தரம் 6,
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை.

## விடை தெரியுமா? 91

1. தமிழ் ஆண்டுகள் 60 ஆகும். அதில் 23 ஆவது வருடத்தின் பெயர் என்ன?
2. அரச மருந்துக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக் கப்பட்ட ஆண்டு?
3. அகச் சிவப்புக் கதிர்களை எது அதிகமாக ஈர்க்கும்?
4. கௌடில்யர் எழுதிய நூல் எது?
5. P.C. ஹவுஸின் தலைவர் யார்?

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 22.01.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை 88

1. ஜப்பான்
2. உதயதாரகை
3. 1945 ஆம் ஆண்டு
4. எலி
5. புறா

### வெற்றிபெற்றவர் விவரம்

1. கனகசபை நிருஜன், தரம்- 2பி
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.
2. வி.வைஷ்ணவி, தரம்-5,
ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
3. லஷீர்தன், தரம்-6,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
4. சு.ஸ்ரீவித்தியா 8 'ஏ'
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
5. சி.சிந்துஜா
கொக்குவில் இந்துக் கல்லூரி.
6. க.பிரியதக்ஷி 7'ஏ'
மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,பருத்தித்துறை.

## உடைந்த குடையின் சுயசரிதை

என்னையும் எனது நண்பர்களையும் ஒரு பெரிய தொழிற்சாலையில் உருவாக்கினார்கள். அப்போது நான் குடையானேன். ஒரு குடை வியாபாரி என்னையும் எனது நண்பர்களையும் பணம் கொடுத்து வாங்கி விற்பனைக்காகத் தனது கடையில் வைத்திருந்தார். வருபவர்கள் எல்லோரும் எனது நண்பர்களையே வாங்கிச் சென்றார்கள். என்னை யாராவது வாங்குவார்கள் என்று யோசித்துக் கொண்டிருந்த போது ஒரு பெரியவர் ஒரு சிறுமியின் பிறந்தநாளுக்கு என்னை வாங்கிச் சென்று அந்த சிறுமியின் கையில் ஒப்படைத்தார்.

அந்தவேளையில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். நான் அந்தச் சிறுமிக்கு மழையிலும் வெயிலிலும் பாதுகாப்பாக இருந்தேன். அந்தச் சிறுமி தனது நண்பி ஒருவரிடம் என்னை ஒப்படைத்தாள். அந்த நண்பி என்னை அந்தச் சிறுமியிடம் ஒப்படைக்கவில்லை. அப்போது நான் யாருக்கும் உபயோகம் இல்லாது ஒரு மூலைக்குள் இருந்தேன்.

அந்தவேளையில் நான் யோசித்துக் கொண்டேன். அடுத்த ஜென்மத்தில் நான் ஒரு பேனாவாகப் பிறப்பெடுத்தால் ஒரு சிறுமிக்கு அல்லது ஒரு சிறுவனுக்கு நல்ல அறிவை ஊட்டவேண்டும் என்று.

தி.பிரசாந்தன், தரம் 7B,
யா/புனித சென் சாள்ஸ் ம.வி.

## காற்று


விண்ணைத் தாண்டி வரும் காற்றே!
என் மழலை மொழியில் கலந்தாய் நீயே!
காற்றின் இனிய கீதம் என் காதருகே கேட்கிறது
உன் ஒவ்வொரு அசைவும் என்னை வருடிச்
செல்கிறது
காற்றே! காற்றே! எங்கே செல்கிறாய்?
உன் இனிய கீத அசைவைக் கேட்காமல் இருக்க
முடியுமா?
எமக்கு உயிருள்ள வரையும் சுவாசிக்க
உதவுவாய்
எம் உயிர் பிரிந்த பின்னும் உனது தென்றல்
தொடரட்டும்!

கு.ஜனீல்சன், தரம்-9D,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.






தி.சதுர்ஜன்,
7 C,
யாழ்.இந்துக் கல்லூரி.



இன்பநாதன் பவீவுன்,
07,
சத்தியசாயி பாடசாலை, மானிப்பாய்.



எஸ்.டினுஷாந்தன்,
ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.



எஸ்.சானுகா,
ஜோன்.பொஸ்கோ வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### கௌதமி பத்மலிங்கம்



குரும்பசிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கௌதமி பத்மலிங்கம் (15.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பத்மலிங்கம் (கிளி)- காலஞ்சென்ற இந்திரா தம்பதியரின் அன்பு மகளும் கௌரி, கஜேந்திரன், வாசுகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக் கிழமை பி.ப.2 மணியளவில் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கில் உள்ளஅவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ.பத்மலிங்கம்.
தொ.பே: 0778689760
0213210280

## சேதமடைந்த வீதிகள் புனரமைப்பு

வண்ணை,ஜன.15

மழையைத் தொடர்ந்து வழுதடைந்து போன வீதிகள் அவசர அவசரமாகச் செப்பனிடப்படுகின்ற வேலைகள் நடைபெற்று வருகின்றன.யாழ். பிரதான வீதி மற்றும் அரசடி வீதி என்பன இவ்வாறு திருத்தப்பட்டு வரு கின்றன. அதேவேளை நான்காம் குறுக்கு வீதியில் கடந்த ஒரு வருடமாக சேத மடைந்திருந்த குடிநீர் விநியோகக் கட் டுக்குழி புதிதாக மூடி போட்டு மூடப்பட்டுள்ளது. இதனால் இதுவரை காலமும் மக்கள் எதிர் கொண்டு வந்த சிரமங்கள் நீங்கி யுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது. (ம-160)

## கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி

சுன்னாகம்,ஜன.13

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி நடைபெறவுள்ளது. மாணவர்களிடையே ஆக்க இலக்கிய எகுத்தாற்றைலையும் சித்திரத் திறன் விருத்தியையும், குழு முறைக் கற்றல் மற்றும் தொடர் பாடல் ஆர்வங்களை வளர்க்கும் நோக்குடன் இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 'செய்நன்றி மறவாமை' என்ற வாசகத்தை மையமாகக் கொண்டு இடை நிலை வகுப்புப் பரிவுகளிடையே இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளதாக மேலும் தெரிவிக் கப் படுகிறது. (ம-38)

## வீடுகாணி விற்பனை

தாவடி மானிப்பாய் வீதியில் 112 பரப்புக் காணி வீடுடன் விற்பனைக்கு உண்டு. தாவடிச் சந்தியில் இருந்து 12மஅ தூரத்தில் உள்ளது.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 0775059055 (தாவடி), 0775486570 (கொழும்பு)

## மணமகன் தேவை

1965 இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை
தொடர்பு: அ.விசுவநாதபிள்ளை, வேளவை, அளவெட்டி மத்தி, அளவெட்டி.

## காணிவிற்பனைக்கு

சுது மலை அம்மன் கோயிலுக்கு எதிரில் 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 4/6 பரப்பு துண்டுகளாக விற்கப்படும்.
தொடர்பு: 011 2583499, 0722242805

## காணி வீடு விற்பனைக்கு

இல 14, திருமகள் வீதி, அரியாலையில் 1½ பர. காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை
தொடர்பு: உரிமையாளர் அ.செல்வமலர் 0776177247, 0712829098, 0779918995

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக் கூடிய 30 வயதுக்கு மேற்பட்ட பெண் உடன் தேவை.
சம்பளம் ரூபா 10,000/=
தொடர்பு : 0771965666

## கட்டடம் வாடகைக்கு

யாழ்.நகருக்கு அண்மையில் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய 3200 சதுர அடியிலான கட்டடத் தொகுதி வாடகைக்கு விடப்படும். வியாபார ஸ்தாபனம் /களஞ்சியசாலை/ அலுவலக பாவனைக்கு ஏற்றது. தொடர்பு: 0776063597, 0212221480 011 2679582

## விற்பனைக்கு

பாவித்த தரமான பனைமரம், தீராந்தி, கதவு,யன்னல், நிலைகள், ஓடுகள், சிலாகைகள் என்பன நீர்வேலியிலும், கற்கள், மண என்பவற்றிற்கான பழைய உடைக்கப்பட வேண்டிய வீடு துன்னாலையிலும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0772263560

## பிரயோக ஆங்கிலப் பயிற்சிநெறி

- அடிப்படை ஆங்கிலத்தை விருத்தி செய்ய (எழுத, பேச, வாசிக்க,உரையாட)
- தொழில் வாய்ப்பு, நேர்முகப் பரீட்சைகளை எதிர்கொள்ள
- ஆங்கில அறிவை மேம்படுத்த பயிற்சி வழங்கப்படும்.

ஆரம்பம்: 17.01.2011

வகுப்பு வாரநாள்கள் (3.30-5.45 மணி வரை

பாடசாலை விலகியோர்,உயர் கல்வி மாணவர்கள், வேலை தேடுவோரும் விண்ணப்பிக்கலாம்

English Language Teaching Unit
St.John's College, Jaffna.

## JAYJAY World (pvt) Ltd.

email: jayjayworldworlduk@hotmail.co.uk
Skype: jane9
Tel: 00447707679653
Mob: Kaja- 0726706226/ Jasi-0770517355




UK செல்ல ஆங்கிலம் இல்லை என்று கவலையா? உடனடியாக எம்மிடம் வாருங்கள்.

- Spot Admission
- குறைந்த தகைமை G.C.E (O/L)
- Sponsor வசதி செய்து தரப்படும்.
- Visaக்கு 100% உத்தரவாதம்
- ஒரு மாதத்திற்குள் Apply பண்ணலாம்
- USA க்கும் Student Visa க்கு Apply பண்ணலாம்.

- தொடர்பு கொண்டவர்களுக்கு மட்டுமே Spot Admission வழங்கப்படும்...
- உடனடியாக பதிவுகளுக்கு அழையுங்கள்




JAFFNA International 2011 TRADE FAIR 2nd Edition

ஜனவரி 21, 22, 23 திகதிகளில்
சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக
(பிரதான வீதி, துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகிலுள்ள)
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளவை
தினசரி இசை நிகழ்ச்சி
உயர் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் / விசேட உணவுகள், குடிபானங்கள் முதலியன / கைத்தொழில், விவசாய மற்றும் உங்கள் வீட்டுக்கு தேவையான அனைத்து உபகரணங்களும் / கட்டிட பொருட்களும் உபகரணங்களும் / கைத்தொழில் கருத்தரங்குகள் மற்றும் முதலீட்டு அரங்கம்

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2011

ORGANISED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED. A member of SAES SOUTH ASIA Exhibition Services network

FOR INFORMATION CONTACT:
4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mw, Colombo 03
Tel: 2390560-2 Fax: 2390563
E-mail: rizwan@saexhibitions.com
HOTLINES: 0773959834, 0773959835, 0772814109
www.saexhibitions.com/jitf

SILVER SPONSOR: dimo TECHNOLOGY

CO-ORGANISED BY: FCCISL

IN ASSOCIATION WITH: CCIY

CO-SPONSORS: Elephant House, KEELLS, Nilkamal

SUPPORTED BY: SRI LANKA CONVENTION BUREAU | PARTNER COUNTRY: INDIA | OFFICIAL BANKER: BOC | OFFICIAL PRINT MEDIA: Sunday Observer, Daily News | OFFICIAL ELECTRONIC MEDIA: சக்தி, சக்தி | OFFICIAL FREIGHT FORWARDER: dart

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 4

# சூழல் மாசடைவதைத் தடுப்பது எப்படி?


*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது.மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம் போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம்..என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக் களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

சூழல் மாசடைதல் என்றால் தீங்கு விளைவிக்கும் பொருள்கள் சூழலில் உட்புகுவதால் அதன் சமநிலையில் ஏற்படும் குழப்பம் அல்லது ஒரு பாதிப்பு ஆகும். எமது சூழலை நீர், நிலம், வளி என வகைப்படுத்த முடியும் . எனவே சூழல் மாசடைதல் என்பதை நீர் மாசடைதல், நிலம் மாசடைதல், வளி மாசடைதல் என்ற வகையில் நோக்கலாம்.

வளியானது இரசாயனக் கழிவுகள் காற்றில் கலத்தல்மூலம் மாசடைகிறது. அவையாவன $Co_2$ $So_2$ CFS அத்துடன் நைதரசன் ஒட்சைட்டுக்கள் (Nitrogen oxides). இவை தொழிற்சாலைகள், வாகனங்கள் மூலம் விடப்படுகின்றன. நீரானது கழிவுப்பொருள்கள் ஆறு, குளங்கள், நிலக்கீழ் நீருடன் கலத்தல் மூலமும் மற்றும் கழிவுநீர் தூயநீருடன் கலத்தல் (waste water discharge) மூலமும் மாசடைகிறது. நிலமானது தொழிற்சாலைக் கழிவுகள், விவசாயக் கிருமிநாசினிகள் போன்றவை நீரில் விடப்படுவதால் மாசடைகிறது. இக் கழிவுப் பொருள்களாவன, ஐதரோகாபன்கள், பார உலோகங்கள் (heavy metals (Hg), pesticides, chlorinated hydrocarbons) என்பனவாகும்.

இதுதவிரக் கதிர்வீச்சு மாசடைதல், ஒலி மாசடைதல் போன்றவையும் தற்போதைய உலகின் ஒரு முக்கிய பிரச்சினைகளாக வளர்ந்து வருகின்றன. கதிர்வீச்சு மூலம் மாசடைதல் (Radiation-pollution) அணுத்தொழில் நுட்பம், அணு இராசயன சக்தி உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றின் மூலம் ஏற்படுகின்றது.

ஒலி மாசடைதல் (Noise-Pollution) போக்குவரத்து இரைச்சல் (Road way Noise) கைத்தொழில் தொழிற்சாலை இரைச்சல்(Industrial Noise) போன்றவற்றின் மூலம் ஏற்படுகின்றது. இது மட்டுமல்லாது ஒளி மாசடைதல் (Light Pollution), வெப்ப மாசடைதல் (Thermal-Pollution) என்பனவும் சூழல்மாசடைதலில் பங்கு வகிக்கின்றன.




சூழல் மாசடைவதால் ஏற்படும் பாதிப்புக்களைப் பார்த்தால் வளிமாசடைதல் மனிதன் உட்படப் பல உயிரினங்களை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றது. நீர்மாசடைதல் ஒரு நாளைக்கு 14,000 உயிரிழப்புக்களுக்குக் காரணமாகின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கழிவுநீர் குடிநீருடன் கலப்பதால் இவை நிகழ்கின்றது.

இவ்வாறு ஏற்படும் சூழல் மாசடைதலையும், அதன் விளைவுகளையும் சர்வதேச ரீதியில் தடுப்பதற்கு உணவுக் கழிவுப்பொருள்கள், விவசாயக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுப் பொருள்கள் போன்றவற்றை கழிவுப் பொருள்களை ''waste Minimization" என்ற தொழிற்பாட்டிற்கு உட்படுத்தப்படுகிறது. அதாவது கழிவுப் பொருள்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்துவதன் மூலம் கழிவின் அளவு குறைக்கப்படுகிறது. மற்றும் தூசி அகற்றும் முறைகளான (Cyclones Electrostatic Precipitator Baghouse) போன்ற கருவிகள் கையாளப்படுகிறன. கழிவுநீர் அகற்றும் முறைகளான Oil water separator, sedimentation, Dissolved air Floatation, Bio Filters, vapor recus system போன்ற நடைமுறைகள் கையாளப்படுகின்றன. இந்நடைமுறைகளை எமது நாட்டிலும் அமுல்படுத்துவதன் மூலம் சூழல்மாசடைவதைத்தடுக்க முடியும்.

மற்றும் சாதாரணமாக எமது வீடுகளிலும் எமது சுற்றுப்புறங்களிலும் உள்ள சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் தனித்துவமாகச் செயற்படவேண்டும். இதிலே வீடுகளில் உக்கக்கூடிய குப்பைகளைக் குழிகளில் இட்டு மூடுதல்,சரியான மலசலகூடங்களை அமைத்தல், தேங்கி நிற்கும் வாய்க்கால்களில் அடைப்பினை நீக்கி நீரோடும்படிசெய்தல், பொலித்தீன் போன்ற உக்காத பொருள்களை எரித்துவிடுதல், சுற்றுப்புறங்களில்உள்ள பற்றைகளை வெட்டி அகற்றுதல் என்பன உள்ளடங்கும். இதன் மூலம் சூழல் சுத்தமாக்கப்படுவதுடன் நுளம்புகளின் மூலம் பரவும் கொடிய நோய்களையும் (டெங்கு, மலேரியா)தடுக்க முடியும் .மற்றும் புற்றரைகளை வளர்த்தல், மரங்களை நடுதல், காடழிப்புகளைத் தவிர்த்தல்,மிகையான கிருமிநாசினிப்பர்வனையை தவிர்த்தல், மீள்சுழற்சிப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளுதல் போன்றவற்றால் மண்ணரிப்பு, மண்வளம் குன்றல் என்பவற்றைத் தவிர்த்து இதன் மூலம் ஏற்படும் சூழல் மாசடைதலைத் தடுக்க முடியும். மற்றும் கழிவுநீர் தேங்குதல், கடலுடன் கலத்தல், குடிநீருடன் கலத்தல் என்பவற்றைத் தடுத்து ''கழிவுநீர் சுத்திகரிப்பு'' மூலம் அந்நீரை மீள் பாவனைக்கு உட்படுத்த முடியும்.

**R.C.A. அருணன்**
**2007/FM/06 மருத்துவபீட மாணவன்.**

நீர், நிலம், வளி என்பவற்றாலான சூழல் மாசடைதலை மேற்காட்டிய முறைகள் மூலம் தடுப்பதால் சுகாதாரமுடையதும், சுத்தமானதுமான நோய்களற்ற வாழ்க்கைத்தரத்தைப் பெறுவோம்.

# நகங்களின் பாதுகாப்பு

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போல உடலின் நலத்தை, நகத்தில் தெரிந்து கொள்ளலாம். மருத்துவ உலகில் நகத்தினுடைய நிறம் வடிவம், நயம் இவற்றை வைத்து நம் ஆரோக்கியத்தையே கணிக்க முடியும்.

நகங்கள் விரல்களுக்கு அழகு சேர்க்க மட்டுமல்ல நுண்மையான நரம்பு கட்டமைப்பிலான நமது விரல் நுனிகளை ஊறுபடாத வண்ணம் காப்பதும் நகங்களே. நாம் நுட்பமான பொருள்களைக் கையாளவும், நமது தொடுஉணர்வுக்கும் நகம் பெரிதும் உதவுகிறது. நம் உடம்பிலுள்ள உரோமத்தினைப் போலவே கெராட்டீன் என்ற புரதச்சத்தைக் கொண்ட நகங்கள் முளைக்கும் போது மிருதுவான செல் (Cell) களால் உருவாகின்றன. பிற்பாடு வளரும் போது கடினத்தன்மை அடைகின்றன. நகத்தின் அடிப்புறம் உள்ள சருமத்தின் புற அடுக்கு 'க்யுடிகிள்' (cuticle) எனப்படும். இதில் அழுக்கு, நுண்ணிய கிருமிகள் போன்றவை உள்ளே ஊடுருவாமல் தடுத்து வைக்கிறது.

பொதுவாக நகங்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். ஆனால் நமது உடலில் ஏற்படுகின்ற பாதிப்புக்களைப் பொறுத்து நகங்களின் நிறம் வேறுபட்டிருக்கும். ஈரல் பாதிக்கப்பட்டிருந்தால் நகங்கள் வெண்மையாக இருக்கும். சிறுநீரகச் செயலிழப்பு ஏற்பட்டிருந்தால் நகங்களின் வளர்ச்சி குறைந்து பாதி நகங்கள் சிவப்பாக இருக்கும். மஞ்சள்காமாலையால் (Jaundice) பாதிக்கப்பட்டிருந்தால் நகங்கள் மஞ்சள் நிறத்தில்காணப்படும். இதயநோயால் பாதிக்கப்பட்டிருந்தால் நகங்கள் அழுத்தமான இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். இதயத்தில் ஓட்டை ஏற்பட்டு நல்ல இரத்தமும்,கெட்ட இரத்தமும் கலந்திருந்தால் நகங்கள் நீல நிறத்தில் இருக்கும்.

இரத்தச் சோகை ஏற்பட்டு இரும்புச்சத்து குறைவாக இருந்தால் நகங்கள் வெளுத்து குழியாக இருக்கும். (koilonychia) - தட்டையாக அல்லது கரண்டி போல் நகங்கள் தோற்றமளிக்கும்.(அனீமியா, தைரொட்சைய்டு கோளாறு மற்றும் சிபிலிஸ் நோய்த் தொடர்புகளைச் சுட்டும்).

சக்கரையின் அளவு அதிகமாகவும் புரதம் மற்றும் துத்தநாகச் சத்துக் குறைவாக இருந்தால் நாகத்தில் வெண் திட்டுக்கள் காணப்படும். நகத்தில் மஞ்சள் கோடுகள் இருப்பதற்கு காரணம், புகைப்பிடிப்பதனால் நிக்கோடின் கறை படிந்து ஏற்பட்டதாக இருக்கலாம். (நகங்களுக்கு பொலிஷ் தீட்டுவதனால் ஏற்பட்ட இரசாயன மாற்றத்தின் காரணமாகவும் மஞ்சள் கோடுகள் இருக்கலாம்.) நகத்தில் சின்னச் சின்னக் குழிகள் உண்டாகி அவற்றில் வெடிப்பு ஏற்பட்டுச் செதில் செதிலாக உதிர்ந்தால ''சொரியாசிஸ்'' (Psopriasis) என்ற தோல்வியாதியின் அறிகுறியாகும். இரத்தத்தில் போதிய அளவுக்கு ஒட்சிசன் இல்லாவிட்டால் நகங்கள்நீலமாக இருக்கும். ஆர்சனிக் என்ற நச்சுக்களால் பாதிக்கப்பட்டிருந்தால் நகங்கள் நீலநிறத்தில் காணப்படும். இரத்தத்தில் சர்க்கரை அதிக அளவு இருந்தால் குறைத்துக்கொள்ள வேண்டும். 'க்ளப்பிங் (Clubbing) நகங்கள் மேற்புறத்தில் [illegible] விரல் நுனியில் [illegible] டால் அவை நாள்பட்ட நுரையீரல், இதய, குடல் நோய்களின் வரவைக் குறிப்பதாகும்.

''லிண்ட்ஸே''(Lindsay): நகத்தின் முனைப்பக்க பாதி இளஞ்சிவப்பு அல்லது பழுப்பாக இருக்கும். க்யூடிகிள் (cuticle) சார்ந்த பாதியும் வெண்மையாய் காணப்படும். இது நாள்பட்ட சிறுநீரகக் கோளாறின் அறிகுறியாகும். ''ஸ்ப்ளிண்டர் ஹெமரேஜஸ்''(splinter haemorrhages) ரேகை மாதிரி ஓடும் செந்நிறக் கீற்றுக்கள். இரத்தக் கசிவைப் பற்றி நமக்கு எச்சரிப்பதாகும்.

**நகங்களின் பாதுகாப்புக்கு...**

அதிக அமிலத் தன்மையுள்ள சோப்பு மற்றும் புளிக்கரைசல் போன்றவற்றை பயன்படுத்தக்கூடாது. நகங்களின் நுனிப்பகுதிகளை முழுவதுமாக வெட்டக்கூடாது. அவ்வாறு வெட்டினால் நகத்தை மூடி சதை வளர்ந்து அதிக வலியினை ஏற்படுத்தும். நகத்தினைப் பற்களால் கடிக்கக்கூடாது. இதனால் நகங்கள் உடைந்து போக வாய்ப்பு அதிகம். நகம் வெட்டும் கருவியினால் மட்டுமே வெட்ட வேண்டும்.

சாப்பிட்ட பின்னர் கைகளை கழுவும் போது நகங்களையும் சுத்தம் செய்ய வேண்டும். (நகங்களின் இடுக்குகளில் தங்கும் நுண்ணுயிரிகளால் வயிற்றுத் தொல்லை, வலி, வாந்தி, வயிற்றுப்போக்கு ஆகியவை உண்டாகும்.) நகத்தின் இயல்பான வளர்ச்சிக்குச் சத்துள்ள உணவு தேவை. போஷாக்கின்மை அதன் வளர்ச்சியைத் தாமதப்படுத்தும். ''ப்யூலைன்'' (Beauline) என்று சொல்லக்கூடிய பள்ளங்கள் நகத்தில் [illegible] விழும் சத்தின்மை [illegible] அது முறிவுத்தன்மை அடையவும் உதிரவும் வாய்ப்பு உண்டு. நகங்கள் அழகுடன் திகழ காய், கனிகள் நிறைய உட்கொள்ள வேண்டும். இரவில் குளிர்ந்த நீரினால் கை மற்றும் கால் நகங்களைச் சுத்தமாகக் கழுவிக் கொள்ள வேண்டும்.

குளித்தவுடன் நகம் வெட்டினால் நகம் ஈரத்தன்மையுடன் இருப்பதால் எளிதாக வெட்ட வரும். அதே போல் தேங்காய் எண்ணெய் தடவி சிறிது நேரம் கழித்து வெட்டினாலும் எளிதாக வெட்டலாம். தண்ணீரை மிதமாக சூடுபடுத்தி, சிறிது உப்பு கலந்து அதில் விரல்களைச் சிறிது நேரம் வைத்திருந்தால் விரல்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும். எலுமிச்சைச் சாற்றுடன் வெந்நீரைக் கலந்து கைகளை சிறிது நேரம் ஊற வைத்துக்கழுவலாம். இப்படிச்செய்வது விரல்களுக்கும் நகங்களுக்கும் மிகவும் நல்லது.

கிளிசரின் மற்றும் எலுமிச்சைச் சாறு கலந்து, அதை நகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால், நகங்கள் பளபளப்பாக இருக்கும். அதே போல் பாதாம் எண்ணெயை நகங்களில் பூசி சிறிது நேரம் கழித்து, கடலை மாவினால் கழுவினாலும், நகங்கள் பளபளப்படையும்.

ஒலிவ் எண்ணெய்யை மிதமாக சூடுபடுத்தி அதை விரல்களில் தேய்த்து சிறிது நேரம் கழித்துக் கழுவ வேண்டும். இவ்வாறு தினமும் செய்து வந்தால் நகங்கள் நன்றாக வளரும்.

**S.Rushanthini (2007/FM/42)**
**மருத்துவபீட மாணவி.**

மிதமான சூடுள்ள பாலில் பஞ்சை நனைத்து அதை வைத்து நகங்களைத் தேய்த்து சுத்தப்படுத்தினால் நகங்களில் காணப்படும் அழுக்குகள் நீங்கி நகங்கள் பளபளப்பாகும். நகங்கள் உறுதியற்று உடைவதற்கு இரும்பு மற்றும் கல் சியம்போன்ற சத்துக்குறைபாடுகளே காரணம். எனவே நகங்கள் ஆரோக்கியமாக வளர ஊட்டத் சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை நவரத்தினம்



சூளானையைப் பிறப்பிடமாகவும், பருத்திக்கலட்டி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை நவரத்தினம் நேற்றுமுன் தினம் (14.01.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - இத்தினி தம்பதியரின் நான்காவது மகனும் காலஞ்சென்றவர்களான காத்திகேசு - செல்லமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும் இராஜகோபால், புஸ்பலதா, கேதீஸ்வரன், கிருபாகரன், யோகநாதன், செல்வக்குமார், ஜெயலதா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேஸ்வரி, இலட்சுமணன், ராணிமலர், மலர்விழி, ஜெயந்தி, கலைமதி, உதயசீலன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*பருத்திக்கலட்டி,*
*சுன்னாகம்,*
*தொ.பே.: 0779789365*

## வலிமைமிக்க....

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள நிலையில் இது ஓர் இரண்டாம் தர அம்சமே. இவற்றின் சக்தி ஒரு கட்டம் வரையே எட்டும்.

தமிழர்கள் மத்தியில் உருவாகக் கூடிய ஐக்கியமே இந்தப் பேச்சின் பின்னணியில் பலமான சூழமைவாக அமையும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் கூட்டமைப்புக்கும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்திற்கும் இடையில் காணப்படக் கூடிய இணக்கம் முதன்மையானது. குறிப்பாக தீர்வுக்கான அடிப்படைகளில் இணக்கத்தை எட்டத் தமிழ்க் கட்சிகள் எடுத்துள்ள முயற்சி வெற்றியளித்தால் அது பேச்சு மேசையில் தமிழர் பலத்தை உறுதியாக்க பெருமளவில் உதவும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையே இடம் பெறும் பேச்சுகூட இந்த வகையில் ஆரோக்கியமான அறிகுறியே. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் விரைவானதும் உறுதியானதுமான ஓர் ஐக்கியம் உருவாகினால் பேச்சு வெற்றி அளிப்பதற்கான சாத்தியம் அதிகரிக்கும். *

### பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் வீட்டோடு தங்கி நின்று பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு: 0777222515

ask GROUP

Dolphin

## பொது அறிவித்தல்

ஸ்ரீ லங்கா கேபிள் ரீவி (Cable TV) மற்றும் கட்டணத் தொலைக்காட்சியை (PayTV) நடத்துவதற்கு ஸ்ரீ லங்கா ஊடக அமைச்சின் (தொலைக்காட்சிகளை நடத்துவதற்கான அனுமதியை வழங்கும் அமைச்சு) அனுமதி பெற்ற ஒரே நிறுவனம் றேடியோ அன்ட் ரெலிவிசன் நெற்வேர்க் லிமிட்டெட் (Radio and Television Network Limitted) மட்டுமே.

றேடியோ அன்ட் ரெலிவிசன் நெற்வேர்க் லிமிட்டெட் (Radio and Television Network Limitted) நிறுவனமே ஆஸ்க் மீடியா பிறைவெட் லிமிட்டெட்டுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் இப்பொழுது டொல்பின் என்ற பெயரில் கேபிள் (Cable TV) மற்றும் கட்டணத் தொலைக்காட்சியை (PayTV) வழங்கி வருகின்றது. (109363)

Multilac® PREMIUM PAINTS

## நாடு பூராவுக்குமான விநியோகிப்பாளருக்கான அழைப்பு

மெக்ஸன்ஸ் பெயின்ட் இலங்கையின் பிரதான பெயின்ட்கம்பனி தங்களுடைய கீழே சொல்லப்பட்ட துணைரக உற்பத்திகளுக்கு விநியோகிப்பாளர்களை அழைக்கின்றது.

01. மல்டிலெக் எக்கிரிக் இமல்ஷன்
02. மல்டிலெக் வெதர் கார்ட் பிலெக்ஸிபெல் இலக்ட்ரோமெட்ரிக் வோல் பிரைமர்
03. மல்டிலெக் அக்குவா ஷீல்ட்
04. மல்டிலெக் பாத்ரூம் பெயின்ட்
05. மல்டிலெக் பிறைட் கோல்ட் பெயின்ட்
06. மல்டிலெக் ஹார்மர் பினிஷ்
07. மல்டிலெக் எப்பொக்ஸி புலோர்பெயின்ட்
08. மல்டிலெக் மெட் இனாமெல் ஜெட் பிளேக்
09. மல்டிலெக் ரூப்பிங் பெயின்ட் (வோட்டர் பேஸ்ட் / சொல்பெண்ட் பேஸ்ட்)
10. மல்டிலெக் ரோட் மார்க்கிங் பெயின்ட்
11. மல்டிலெக் பெயின்ட் புருசுகள் / ரோலர்கள்
12. மல்டிலெக் பிளேக்போர்ட் பெயின்ட்
13. மல்டிலெக் வோல் புட்டி
14. மல்டிலெக் டிஸ் இன்பெக்டிங் வோல் வோஷ்
15. மல்டிலெக் G.I. எடிசியன் பிறமோட்டர்
16. மல்டிலெக் பென்னர் பெயின்ட்
17. மல்டிலெக் சைனீஸ் லெக்கர்
18. மைக்ரோன் ரெட் ஒக்சைட் பவுடர்
19. மைக்ரோன் அன்டிகொரோசிவ் பெயின்ட்
20. மைக்ரோன் P.U. வார்ணிஷ்
21. மைக்ரோன் எக்ரிலிக் வோல் பில்லர்
22. மெக்லைட் இமல்ஷன்
23. மெக்ஸன்ஸ் வுட் பிரிஸவெட்டிவ்
24. மெக்ஸன்ஸ் மிரைவ் டெர்படைன்
25. மெக்ஸன்ஸ் N.C. தினர்
26. மெக்ஸன்ஸ் பிரைன்ஜ் பொலிஷ்
27. மெக்ஸன்ஸ் பிடடுமெக்ஸ் பிரோகோட்
28. மெக்ஸன்ஸ் பிட்டுமெக்ஸ் லீக் ஸ்டொப்
29. மெக்ஸ்பிக்ஸ் ஜெனரல் பெர்பஸ் எட்ஏசிங்
30. மெக்ஸ்பிக்ஸ் எபொக்சி எட்ஏசிங்
31. M.கெம் சேன்டிங் சீலர்
32. மலேசியன் ஜொயின்ட் கம்பவுன்ட்
33. சேன்ட் பெப்பர்ஸ் (இங்கிலிஷ் எபரேசிங் / அட்லஸ் / மைக்ரோன்)

விநியோகிப்பு வர்த்தகத்தில் நல்லனுபவமுள்ள அக்கறையுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது. நாடு பூராவும் விநியோகிப்பை வழங்க நாங்கள் திட்டமிட்டு வருகின்றோம். தயவு செய்து உங்களுடைய கம்பனி மற்றும நீங்கள் கையாள விரும்பும் பிராந்தியத்தை குறித்த விபரங்களோடு விண்ணப்பிக்கவும்.

சுமார் 3000 சதுர அடி பரப்பளவைக் கொண்ட பொதியறை வசதியை கொண்டவராக விநியோப்பாளர் இருப்பது அவசியமாகும்.

- விநியோகிப்பாளர் வாகனம் மற்றும் தகுதியான உத்தியோகத்தர்களை கொண்டிருத்தல் அவசியம்

விநியோக்கிப்பில் அனுபவமிருப்பின் அது ஒரு மேலதிக தகைமையாக கொள்ளப்படும்

தயவுசெய்து உங்கள் பெயர்கள் மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களுடன் உங்கள் முழு விபரங்களை எங்களுக்கு கிடைக்கக்கூடியதாக கீழ்க் காணும் விலாசத்திற்கு அனுப்பவும்.

**General Manager**
**Sales & Marketing**
**P.O. Box 4**
**Keselwatte - Panadura**
**Sri Lanka**
**Fax : 5550267**
**E mail : office@multilac.com**

MICRON Macklite®

## மலேசியா

### தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 850 |
| இலங்கைப் பெறுமதிக்கு | ரூபா. 28,000 |

- கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
- மெடிக்கல் (Medical) - இலவசம்
- இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
- விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
- தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
- உணவு (Food) - இலவசம்
- 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் — முற்றும் இலவசம்

Labour Licence No. 2516

**GOODLINE MANPOWER SERVICES**

38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592

AMCO




## எடுப்பான தோற்றம். நலமான வாழ்வு.

அம்கோ வெயிட் கெயின் மூலம் உங்கள் எடையைக் கூட்டுங்கள்

அம்கோ வெயிட் கெயின் என்பது உங்கள் உடல் இழையங்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை உள்ளடக்கியதாக மோல்ட் சாற்றிலிருந்து விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட புரதச்சத்து நிறைந்த பாலாகும். அது லைசின் பதார்த்தம் கொண்டு செறிவூட்டப்பட்டுள்ளதால், உடலின் எடையை அதிகரிக்கும் ஆற்றலை அல்லது புரத உள்வாங்கலை (புரத விளைத்திறன் விகிதம்) முன்னேற்ற உதவும். சமபோஷாக்கான உணவுடன் அம்கோ வெயிட் கெயின் எடுத்தால் உங்கள் எடையை அதிகரிக்கலாம்.

சிபாரிசு செய்யப்பட்ட அம்கோ வெயிட் கெயின் அளவு
ஒவ்வொரு உணவு வேளைக்கும் 1 மணிநேரம் கழித்து
ஒரு கிளாஸ் சூடாக அல்லது குளிரூட்டிப் பருகவும்.
(நாள் ஒன்றிற்கு குறைந்தது 3 கிளாஸ்கள்)

ரூ. 980/=
ரூ. 1,200/=



ஏக விநியோகஸ்தர்,
சூரி ட்ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்
இல. 6, மாபோல, வத்தளை, இலங்கை.
தொலைபேசி: +94 11 4810251 ஈ-மெயில்: info@suritrading.com
வெப்தளம்: www.suritrading.com

Gracewind Advertising

Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### திருமதி சண்முகநாதன் அன்னம்மா

(பூமணி)

அன்னை மடியில்
23 * 12 * 1934



ஆண்டவன் மடியில்
17 * 12 * 2010

கடந்த 17.12.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உடன்பிறப்புக்கள். (லண்டன், கனடா, ஜேர்மனி)

முருகன் கோயில் முன்பாக,
ராஜவீதி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (109353)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அப்புத்துரை சின்னப்பிள்ளை



பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை சின்னப்பிள்ளை நேற்று (15.01.2011) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருளம்பலம் அப்புத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருளம்பலம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் நடராஜா (கிருஷ்ணா ஸ்ரோர்ஸ் - பேராதனை), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் இரஞ்சிதமலர், விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் துஷ்யந்தினி (பேராதனை), சுபாஷினி (சுவிஸ்), சுதர்சினி (சுவிஸ்), சுகந்தினி (ஆசிரியை, மாத்தளை சாஹிராக் கல்லூரி), சுமதினி(16th Batch விவசாயபீடம், யாழ்ப்பாணம்), ராதிகா (ஆசிரியை, கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை), ஜெஷிந்தன் (பழைய மாணவன் யா/ நெ.ம.ம.வி), பிரியா(12 Sc. மாணவி யா/நெ.ம.ம.வி), முகுந்தன் (சுவிஸ்), குணராஜா (சுவிஸ்), மயில்வேந்தன் ( Unilever distributor, Matale), ஹரிகரன் (Glaxo Distributor - Trinco) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுஜானி (சுவிஸ்), முபிதா (சுவிஸ்), அபிஷனா (சுவிஸ்), விபிஷன் (சுவிஸ்), அக்ஷயா (சுவிஸ்), அனுஷீகா (மாத்தளை) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
0212262402

தம்பித்தாவத்தை,
பொலிகண்டி மேற்கு, பொலிகண்டி.

### சுந்தரம் மதியாபரணம்



இல.23, பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் மதியாபரணம் நேற்று (15.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் உத்தமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் மல்லிகாதேவி, செல்வரெத்தினம், இராஜரெத்தினம் (பிரான்ஸ்), சண்முகராஜா (பிரான்ஸ்), ஜெயரெத்தினம் (பிரான்ஸ்), கமலாதேவி, சந்திராதேவி (பிரான்ஸ்), ஜீவரெத்தினம் (பிரான்ஸ்), தர்மராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகசபாலிங்கம், மங்கையர்க்கரசி, ராணி (பிரான்ஸ்), கலைமதி (பிரான்ஸ்), பஞ்சவர்ணம் (பிரான்ஸ்), தவராஜா, ஜீவராஜா (பிரான்ஸ்), ஆனந்தி (பிரான்ஸ்), தர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற நடராஜா (சிவஞானம்), காசுபதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.23, பெரிய தம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (109360)

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலை வாய்ப்பு

★எழுதுநர், ★புத்தகம் கட்டுநர் ★விற்பனையாளர்
தேவை. நேரில் வரவும்.

கற்சுமி வெளியீட்டகம்

166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 0718474325.

## மணப்பெண் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பம், வயது -50, சொந்தமாக ஒரு நிறுவனத்தை நடத்தி வருபவக்கு மணப்பெண் தேவை. விவகாரத்துப் பெற்றவர், குழந்தைகள் அற்றவர், நல்ல குடும்பப் பின்னணியைக் கொண்ட இவருக்கு அதே குலத்தில் உள்ளவர்கள் சாதக குறிப்பு (தாரமிழந்தவர்களும்) தாய், தந்தையர் சகோதரர் மற்றும் தொலைபேசி இலக்கங்களுடன் பின்வருமாறு தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. -4108,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய் வடக்கில் வீடு கட்டக்கூடிய (4 பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு. பரப்பு 4 இலட்சம். இக் காணி, சங்கானை, சுன்னாகம், பஸ் ஓடும் மெயின் றோட்டுக்கு மிக அருகிலும் இரட்டைப் புலம் வைரவ கோயிலுக்கு முன்பாகவும் உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்.

U.S.A - 07813218980, இலங்கை - 0718345969

## கடை வாடகைக்குத் தேவை

யாழ். நகருக்குள் 10 சதுர அடி கொண்ட கடை வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0750417512, 021 320 7323

## பிறின்ஸி போல்றி பாம்

புறொயிலர் இறைச்சி கிலோ 400/-

கல்பேட், முட்டை, கோழித்தீன் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவுண்டு.

இல.380, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
இ.பிறிடாஸ் -0776095749

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகருக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் 10 பரப்புக் காணியுடன் சுற்று மதிலுடன் அமைந்த சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.

தொ.பே.: 0776331914

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பொஸ்கோ பாடசாலை முன்பாக அமைந்த ஒன்றரைபரப்புக் காணி, வீட்டுடன் விற்பனைக்குண்டு. அறைகள் (4) குளியல் அறை, குசினி, வாகனவசதி உண்டு.

தொடர்பு: 077 3477711





இப்பொழுது
வெள்ளவத்தையில்
உங்கள் வசதிக்காக...
சகல விதமான விளம்பரங்களும் கையளிக்கலாம்.
FLEX Graphic
4, IBC Road, Wellawatte.
Call: 0777-555026



STUDY IN UK

VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் இலவசம்

O/L உடன் குறைந்த கட்டணத்தில்!

NO NEED IELTS

flex Institute
Step Towards a Bright Future
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
(A Subsidiary of Flex Graphic)
FLEX Graphic


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### திருமதி இராசம்மா ஆறுமுகசாமி



கடந்த 17.12.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயின் துயரச் செய்திகேட்டு உதவியவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மூலம் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளிலும் கலந்துகொண்டவர்களுக்கும் ஏனைய பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (16.01.2011) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பங்களா லேன்,
மல்லாகம். (109359)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பசுபதிப்பிள்ளை இராசம்மா



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பசுபதிப்பிள்ளை இராசம்மா 13.01.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னம்மா தம்பதியரின் மகளும் சின்னத்துரை, சபாரத்தினம், சோமசுந்தரம், பொன்னுத்துரை, இராசரட்ணம், கந்தசாமி, இரத்தினம்மா, அருளம்மா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் ஸ்ரீ ஆனந்தகுமார் (ஜேர்மனி), இரஞ்சினிதேவி, சந்திராதேவி (ஜேர்மனி), ஸ்ரீசிவா (லண்டன்), றஜீவி (ஜேர்மனி), ஸ்ரீராசகுமார் (லண்டன்), ஸ்ரீரஞ்சகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வைகுந்தநாதன், விக்ரமன், ஸ்ரீரமணி, காலஞ்சென்ற செந்தில்குமார் மற்றும் ஞானவல்லி, கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும் கோகுலன், விதுஷா, சதீஸ், ஆரபி, ஆதவன், ஆரபிசன், சுபானி, சரிகா, செந்தூரி, செந்நிலானி, செந்துசன், செஞ்ஜிவ், அபிராம், ஹரிராம், பவிற்றன், சாநன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,
மருமகன்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் (சி-574928)

### திருமதி சிவபாக்கியம் குமாரவேலு



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் குமாரவேலு நேற்று (15.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலுவின் (C.G.R. Work Shop, Trincomalee) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான அம்பலவாணர் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான செல்வராஜா, தியாகராஜா, மணிவண்ணன் மற்றும் உமாதேவி, கமலாதேவி (சாந்தா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நல்லம்மாவின் அன்புச் சகோதரியும் விஜயகுமார், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மாமியும் மன்மதராஜ் (Land Surveyor, Libya) , சுதர்சனன், (Junior Executive, Dipped Products PLC), சிந்துஜா, செந்தூரன் மற்றும் சிவப்பிரியா, மகிழாயினி, அகிலாயினி, ஜனகன் (யாழ். இந்துக் கல்லூரி) கௌசிகன், மதிவதனன், சுதாகரன் (France) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மதுசா, தரங்கினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.விஜயகுமார்
(மருமகன்).

காளி கோயிலடி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையின் இவ்வாண்டு இலக்கு என்ன?

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை புதிய முகங்களின் வழிகாட்டலின் கீழ் இவ்வாண்டு புதிய சாதனைகளைத் தேசிய மட்டத்தில் ஏற்படுத்த . வேண்டுமென்ற கருத்து இப்போது பல்வேறு மட்டங்களிலும் எழுந்துள்ளது.

வடமாகாண ஆளுநர், வடமாகாண கல்வி, கலாசார பண்பாட்டலுவல்கள், விளையாட்டு அமைச்சின் செயலாளர், விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் ஆகியோர் இணைந்து வடமாகாண விளையாட்டுத்துறையில் அதிக முன்னேற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற அவாவில் செயற்பட்டு வருகின்றனர்.

இது ஒரு வெள்ளிடை மலையான செயற்பாடாகும். இதற்குச் சிறந்த உதாரணம் கடந்த ஆண்டு இடம் பெற்ற வடமாகாண ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான கல்வி வலயங்கள் ரீதியாக கிரிக்கெட், உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றமையும் அதில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பல லட்சம் ரூபா பணம் பரிசாக வழங்கப்பட்டமையையும் குறிப்பிடலாம்.

இந்த வகையில் வடமாகாணக் கழகங்களிடையே விளையாட்டை வளர்க்க வேண்டும், வெற்றிகளைப் பெற வேண்டும் என்ற துடிப்புடன் கடந்த மாதம் விளையாட்டுத் துறைக்கு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நியமனங்கள் முன்னெப்போதும் இடம்பெறாத அளவுக்குச் சமகாலத்தில் அதிக எண்ணிக்கையானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வடமாகாண விளையாட்டுத்துறையை மிளிரச் செய்ய வேண்டும். தேசிய மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளை எட்டவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை வடமாகாண ஆளுநர் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலும் சுட்டிக்காட்டியுள்ளார்.



**இன்று தேசிய சர்வதேச வலைப்பந்தாட்ட வீராங்கனையாக வளர்ந்துள்ள சிவலிங்கம் தர்சினியை இங்குள்ள பாடசாலைகளும் சரி, கழகங்களும் சரி, விளையாட்டு அலுவலர்களும் சரி இதுவரை இனங்காணாமல் விட்டமை வேதனைக்குரிய விடயமாகும்.**

## புதிய' அலுவலர்கள் புரிந்து கொள்வார்களா?


இதன் அடிப்படையில் புதிதாக நியமனம் பெற்ற விளையாட்டு அலுவலர்களும் தமது கடமைகளை மிகவும் தெளிவான எண்ணங்கள், சிந்தனைகளுடன் செயற்படத் தொடங்கியுள்ளார்கள் என்றே கூற வேண்டும்.

வடமாகாண மாவட்டங்களில் 17 விளையாட்டு அலுவலர்கள் நியமனம் பெற்றுள்ளார்கள். இதேபோன்று வடமாகாண மாவட்டங்களில் ஏற்கனவே கடமையாற்றிய 15 விளையாட்டு அலுவலர்கள் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களாக மாவட்ட ரீதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இதில் முக்கியமாக யாழ்.மாவட்டம் புதிய விளையாட்டு அலுவலர்கள் பத்துப் பேரையும் பயிற்றுவிப்பாளர்கள் ஐந்து பேரையும் பெற்றுள்ளது.

புதிதாக நியமனம் பெற்றவர்கள் துடிப்புடன் கடமையாற்றக் கூடியவர்கள். விளையாட்டுத்துறையில் கடந்த ஆண்டு இடம்பெற்ற பின்னடைவுகள் இந்த ஆண்டு இடம்பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும், கடமையும் இவர்களை இணைத்து வழி நடத்தும் அதிகாரிகளுக்கு உரியதாகும்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற சில நிகழ்வுகளையும் நாம் இங்கே சுட்டிக் காட்ட வேண்டும். புதிதாகப் பதவியேற்றுள்ள வர்களும் இவ்வாறான தவறுகளை விடக்கூடாது என்பதற்காகவே நாம் இதனைச் சொல்கிறோம்.



கடந்த காலத்தில் மாவட்ட மட்டப் போட்டிகள் சிலவற்றில் அணிகள் கலந்து கொள்வது பெரும்பாலும் அணி ஒழுங்குடன் மட்டும் முடிந்தது. அணி ஒழுங்கில் இடம்பெற்றுள்ள அணிகளில் பெரும்பாலானவை குழுப்போட்டிகளில் கலந்துகொள்ளாத சம்பவங்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன.

இதற்குச் சிலர் காரண காரியங்கள் கூறி அதனை சமாளித்து விடுவார்கள். இந்த நிலை கடந்த ஆண்டு மாவட்டப் போட்டியிலும் குறிப்பாகத் தடகளப் போட்டியில் காணப்பட்டமையையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

தெரிவுப் போட்டிகளில் தெரிவாகிய பின் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளாமல் விட்ட நிகழ்வுகள் கடந்த ஆண்டைப்போல இந்த ஆண்டில் நடைபெறாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் உரிய விளையாட்டுதுறை சார்ந்த அலுவலர்களுக்கும் உள்ளது.

பிரதேச மட்டத்தில் விளையாட்டு அலுவலர்கள் தமது கடமைகளை உரியமுறையில் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். ஏனோதானோ என்று போட்டிகளை நடத்தும் மனநிலையில் இருந்து அவர்கள் விடுபட்டுப் பொறுப்புடனும் கடமையுணர்வுடனும் செயற்பட்டு விளையாட்டுக் கழகங்களை வழி நடத்திச் செல்ல வேண்டும்.

இதேபோன்று மாவட்ட மட்ட அணி ஒழுங்கில் குறிப்பிட்ட பிரதேச செயலர், உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகள் கலந்து கொள்ளும் எனக்கூறி பெயரை மட்டும் பதிவு செய்தல் பேர்தும் என்ற நிலை இவ்வாண்டு காணப்படக் கூடாது.

அணி நிரலில் ஓர் அணி கலந்து கொள்ளும் எனப் பதிவு செய்யப்பட்டால் அந்த அணி அந்தப் போட்டியில் கலந்து கொள்கின்றதா என்பதை கண்காணிக்க வேண்டிய பொறுப்பும் இந்த அலுவலர்களுக்கு உள்ளது.

கழகங்களின் வீரர்கள், வீராங்கனைகள் கூடப் பாடசாலை மட்டத்தில் இருந்து உருவாகியவர்களே. இந்த வகையில் கடந்த ஆண்டு யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகள் சுமார் பத்துப் பதக்கங்கள் வரை தேசிய மட்டத்தில் பெற்றுள்ளன.

ஆனால் கழகங்களுக்கான தேசிய மட்டப் போட்டிகளில் எம்மால் மிளிர முடியாமல் போனது வேதனையாகும். இதனை நாம் மீளாய்வு செய்ய வேண்டிய தேவையும் அவசியமும் உள்ளது.

இந்த ஆண்டில் எமது இலக்கு தேசிய ரீதியான போட்டிகள் என்பதைக் கருத்தில் கொண்டு அனைவரும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும்.

இவ்வாண்டு விளையாட்டுப் போட்டிகளின் போது எம்மீது விமர்சனங்கள் எழாமல் பார்த்துக் கொள் வதுடன் பிரதேச, மாவட்ட, மாகாண வெற்றிகளை மட்டும் நோக்காகக் கொள்ளாமல் தேசிய மட்ட் வெற்றியை நோக்கி நாம் முன்னேற வேண்டும்.

இதனைச் செய்வதற்கு விளை யாட்டு அலுவலர்களே கடந்த கால நிலைமைகளே தொடருமாக இருந்தால் எம்து விளையாட்டுத்துறை படுபாதக மான நிலைக்குச் செல்லும் என்பதை யும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**விண்ணன்**

எமது விளையாட்டுத்துறையின் நிலைக்குச் சிறந்த உதாரணம் ஒன்றாகக் குறிப்பிடலாம். இன்று தேசிய சர்வதேச வலைப்பந்தாட்ட வீராங்கனையாக வளர்ந்துள்ள செல்வி சிவலிங்கம் தர்சினியை இங்குள்ள பாடசாலைகளும் சரி, கழகங்களும் சரி, விளையாட்டு அலுவலர்களும் சரி இதுவரை இனங்காணாமல் விட்டமை வேதனைக்குரிய விடயமாகும்.

ஆனால் அவரை மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் சிறந்த முறையில் வெளிக்கொண்டு வந்ததால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரை இனங்கண்டு அழைத்துச் சென்று தேசிய வீராங்கனையாக உருவாக்கி இன்று சர்வதேச வீராங்கனையாக மிளிரச் செய்துள்ளார்.

இத்தகைய தவறுகள், புறக் கணிப்புக்கள் எதிர்காலத்தில் இடம் பெறாது ஒருவருடைய திறமைகள் ஆற்றல்களை இனம்கண்டு அவரை அத்துறையில் பிரகாசிக்கச் செய்ய ஆவண செய்ய வேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் இந்தியாவுக்கு எச்சரிக்கை

ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா பங்கேற்கத் தடை விதிப்போம் என்று சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் (ஐ.ஓ.சி) எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்திய ஒலிம்பிக் சங்கம் ஐ.ஓ.சியிடம் அளித்த வாக்குறுதிகளின் படி நிர்வாகிகள் பதவிக்காலம் உள்ளிட்ட விஷயங்களைக் கடைப்பிடிக்காததால் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.ஓ.சி செயற்குழு கூட்டம் சுவிற்சர்லாந்தின் லாசென் நகரில் நடைபெற்றது. இதன் பின் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பது:

இந்திய ஒலிம்பிக் சங்கத்திடம் நாங்கள் கூறி பல பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன. இது போன்ற சூழ்நிலை தொடர்ந்து நீடிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே இதனைத் தீவிரமாகப் பரிசீலித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் பிரச்சினைகளை வைத்து ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கு தடை விதிக்கவும் முடியும் என்று கூறியுள்ளது.

இந்திய ஒலிம்பிக் சங்க நிர்வாகிகளின் பதவிக்காலம் உள்ளிட்ட சில விஷயங்கள் தொடர்பாக இந்திய அரசுக்கும், ஐ.ஓ.சிக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அடுத்து ஒலிம்பிக் போட்டிகள் 2012ஆம் ஆண்டு லண்டனில் நடைபெறுகிறது.

இதில் எந்தெந்த நாடுகள் பங்கேற்கலாம் என்பதைத் தேர்வு செய்யும் அதிகாரமும், நாடுகளுக்குத் தடை விதிக்கும் அதிகாரமும் ஐ.ஓ.சிக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# இந்திய அணித் தேர்வு நாளை

உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் இந்திய அணி நாளை திங்கட்கிழமை சென்னையில் தேர்வு செய்யப்பட உள்ளது.

இந்தியா, இலங்கை,பங்களாதேஷ் நாடுகள் இணைந்து உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை நடத்தவுள்ளன. இதில் இந்தியா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து உட்பட மொத்தம் 16 அணிகள் பங்கேற்கின்றன. இந்திய அணி ''பி'' பிரிவில் இடம்பெற்றுள்ளது. தவிர, பங்களாதேஷ், இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், அயர்லாந்து மற்றும் நெதர்லாந்து என, மொத்தம் 7 அணிகள் இந்த பிரிவில் இடம் பெற்றுள்ளன.

உலகக் கிண்ண தொடரின் தொடக்கவிழா எதிர்வரும் பெப்ரவரி 18 ஆம் திகதி பங்களாதேஷில் நடக்கிறது. மறுநாள் டாக்காவில் நடக்கும் முதல் போட்டியில் இந்திய அணி, பங்களாதேஷை எதிர்த்து விளையாடுகிறது. இதற்கான 30 வீரர்கள் அடங்கிய உத்தேச அணி கடந்த டிசம்பரில் அறிவிக்கப்பட்டது. இதில் கப்டன் டோனி, சச்சின், ஷேவக் உள்ளிட்ட வழக்கமான வீரர்களுடன், பியுஸ் சாவ்லா, புஜாரா, பார்த்திவ் படேல், சிகர் தவான், ரகானே போன்றவர்கள் இடம்பெற்று இருந்தனர்.

இதில் இருந்து தொடரில் பங்கேற்கும் 15 வீரர்கள் அடங்கிய அணி தேர்வு செய்யப்பட உள்ளது. ஸ்ரீகாந்த் தலைமையிலான தேசிய தேர்வுக் குழுவினர், சென்னையில் நாளை திங்கட்கிழமை இந்திய அணியை அறிவிப்பார்கள் என்று தெரிகிறது. இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபை வட்டாரங்கள் கூறுகையில், ''சென்னையில் நாளை உலகக் கிண்ண இந்திய அணி அறிவிக்கப்படும்,'' என்று தெரிவித்துள்ளன. (த)

# சச்சினுக்கு கலாநிதிப் பட்டம்



இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு மைசூர் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கவுள்ளது.

இவரோடு மத்திய சட்டத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி காலம் சென்ற மைசூர் மகாராஜா கிருஷ்ணராஜ உடையார் ஆகியோருக்கும் கலாநிதி பட்டம் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பட்டம் இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாதத்தில் நடைபெறவுள்ள பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின் போது வழங்கப்படவுள்ளது.

புதன்கிழமை நடந்த பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழு கூட்டத்தின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (த)

# லாரா தத்தா - மகேஷ் பூபதி திருமணம்



பிரபல நடிகை லாரா தத்தாவுக்கும் இந்தியாவின் முன்னணி ரென்னிஸ் வீரர்களில் ஒருவரான மகேஷ் பூபதிக்கும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி கோவாவில் திருமணம் நடக்கிறது.

மகேஷ் பூபதி ஏற்கெனவே திருமணமானவர். பிரபல மாடல் ஸ்வேதா ஜெய்சங்கரை திருமணம் செய்து விவாகரத்து பெற்றவர். அதே போல லாரா தத்தா ஏற்கெனவே கெல்லி டார்ஜி, டினோ மேரியாவுடன் நெருக்கமாக இருந்தவர்.

இப்போது பழைய உறவுகளை வெட்டிவிட்டு, இருவரும் புதிதாக இணைகின்றனர்.

இவர்களின் நிச்சயதார்த்தம் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நியூயார்க்கில் நடந்தது. இப்போது இருவரது திருமணம் நடைபெறும் தேதி முடிவு செய்யப்பட்டுள்ளது. பெப்ரவரி 19 ஆம் திகதி நடக்கிறது. கோவாவில் உள்ள ஆடம்பர ரிசார்ட்டில் இந்த திருமணம் நடக்கிறது. இருவரும் முதலில் சந்தித்து காதலை பரிமாறிக் கொண்டது கோவாவில்தானாம். இதனால் அங்கேயே திருமணம் மற்றும் முதலிரவை வைத்துக் கொள்ள முடிவு செய்தார்களாம்.

300 திருமண அழைப்பிதழ்கள் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளனவாம். உறவினர்கள், நெருங்கிய நண்பர்களுக்கு மட்டுமே திருமண அழைப்பிதழ் கொடுக்கப்படுகிறது.(த)

# இந்தியா அசத்தல் வெற்றி




ஜோகனஸ்பேர்க், ஜன.16

இந்தியாவுக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இடையே நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்தியா அசத்தல் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 47 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது.

முரளி விஜய் - 16, டெண்டுல்கர் - 24, ஹோலி - 22, யுவராஜ்சிங் - 53, டோனி - 38, ரெய்னா - 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் டிசோட்சபே 10 ஓவர்கள்பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 22 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

190 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 42 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கைத் தவறவிட்டது.

தென்னாபிரிக்க அணி சார்பில் ஸ்மித் - 77, இங்ராம் - 25, பாட்னெல் - 12 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொண்டனர்.


இந்திய அணியின் பந்து வீச்சில் 29 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்திய பட்டேல் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (23)

# 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை ரோஜர் பெடரர் வெல்வார்

சுவிட்சர்லாந்தின் நட்சத்திர ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரரினால் 20 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றெடுக்க முடியும் என அவரது பயிற்றுவிப்பாளர் போல் அனாகொன் தெரிவித்துள்ளார்.

உடல் ஆரோக்கியத்துடன் இருந்தால் ரோஜர் பெடரருக்கு 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வெல்வது சாத்தியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

29 வயதான ரோஜர் பெடரர் இதுவரையில் 16 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றெடுத்துள்ளார். நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள அவுஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ்



போட்டித் தொடரில் பெடரர் விளையாடவுள்ளார்.

அண்மைக்கால தமது வெற்றிகளில் அனாகொனின் பங்களிப்பு அளப்பரியதென பெடரர் புகழாரம் சூட்டியுள்ளார்.

ரோஜர் பெடரர் உலக ரென்னிஸ் தர வரிசையில் இரண்டாம் நிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பெடரர் இந்தப் பருவகாலத்தை கட்டார் ஓபன் சம்பியன் பட்டத்துடன் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, குயின்ஸ்லாந்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் வகையில் ஏதேனும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய முடியுமா என போட்டி ஏற்பாட்டாளர்களுடன் கலந்தாலோசிக்க திட்டமிட்டுள்ளதாக பெடரர் தெரிவித்துள்ளார்.(த)

# கம்ரன் அக்மல் அணியில்



பாகிஸ்தான் மற்றும் நியுசிலாந்து அணிக்கு இடையிலான ஒரு நாள் தொடரில் பாகிஸ்தான் அணியின் கம்ரன் அக்மல் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

கம்ரன் அக்மல் கடந்த டெஸ்ட் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளில் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. தற்போது நியூசிலாந்து தொடருக்காக அறிவிக்கப்பட்டுள்ள அணி, பெரும்பாலும் அடுத்த உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் அணியாக இருக்க லாம் என விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் கமரன் அக்மல் எதிர் வரும் உலகக் கிண்ண போட்டித் தொடருக் கான பாகிஸ்தான் அணியில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்மதியாள் வாழ்த்துகிறாள்



**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக மகளிர்குழு மாதர்தம் மழலைகளின் ஓகன் இசை அரங்கேற்றம்**

செல்வி துஷ்யாகி சுரேஸ்குமார், செல்வி மயூரகி சுரேஸ்குமார், செல்வி சுவர்ஷிகா சதீஸ்

**காலம்: இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை**
**இடம்: கலைத்தூது கலையகம் (திருமறைக் கலாமன்றம்)**



வளர்மதி முன்றலினில் வண்ணத்துப் பூச்சிகளாய்
ஆனந்தமாய் சிறகடித்து மகிழ்ந்திட்ட பூஞ்சிட்டுக்களே
இன்றும் எங்களுடன் ஆங்கிலம் பயிலும் ஆர்வலராய் மிளிர்ந்திட்டீர்
உங்கள் தம் ஓகன் இசை அரங்கேற்றம் உம் திறமை செப்பிடவே
நாளைய நம் சமூக நம்பிக்கை நட்சத்திரங்களே
– நீவிர் உயர்ந்திட
அன்னை வளர்மதியாள் அகமகிழ்ந்து வாழ்த்துகிறாள்
– வாழியவே

சம்பியன் லேன்,
கொக்குவில்.

கொக்குவில் வளர்மதி
முன்னேற்றக் கழக மகளிர் குழு.

## மரண அறிவித்தல்கள்

### சூசை அடைக்கலமுத்து



கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் குளமங்கால், மல்லாகத்தைச் சொந்த முகவரியாகவும், 23/1, புறூடி லேன், அரியாலையைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சூசை அடைக்கலமுத்து நேற்று (15.01.2011) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - இன்னேசம் தம்பதியினரின் மகனும் திரேஸ்மலரின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான மனுவல், அன்னம்மா, சவிரிமுத்து ஆகி யோரின் சகோதரனும் எலிசபெத், கால்ஞ்சென்றவர்களான ஜெயமணிறீற்றா, ஜீவரட்ணம் ஆகியோரின் சிறிய தகப்பனும் செல்வமாணிக்கத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மாமனும் சுபாஷினி (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), சுதர்ஷினி, சுதர்ஷன் ஆகியோரின் பேரனும் பிரான்சிஸ் சேவியரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*23/1, புறூடி லேன்,*
*அரியாலை.*
(109368)
ம.பிரான்சிஸ் சேவியர்,
செ.சுபாஷினி.

### செல்லையா சற்குணம்



அச்செழுவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா சற்குணம் நேற்று (15.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் சந்திராதேவி, சிவசக்தி ஆனந்தராசா (அச்செழு), சிவலிங்கராசா (லண்டன்), சிவஞானமலர் (லண்டன்), காலஞ்சென்ற சிவயோகமலர் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் கமலாதேவி, சந்திரகுமாரி (இலண்டன்), பகீரதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் பிரதாபன் (இத்தாலி), அருந்ததி (இத்தாலி), உமாசங்கர் (இத்தாலி), பிரசாத் (பியூட்டி சில்க், யாழ்ப்பாணம்), மாலதி, நிசாளி (யாழ்.இந்துக் மகளிர் கல்லூரி), கிருஷாந் (யாழ்.இந்துக் கல்லூரி), நிரூசன் (லண்டன்), சதுர்சன் (லண்டன்), சுதர்சன் (லண்டன்), சுபாசினி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் அபிஷா, விதூஷன், மதுஷிகன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நீர்வேலி சந்திராதேவியின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அச்செழு.*
(சி/574925)
குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

வத்தளை, அல்விஸ் ரவுண் (Alwis Town) 40 பேர்ச்சஸ் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. காணியைச் சுற்றி மதில் கட்டப்பட்டிருக்கிறது. வத்தளை - நீர் கொழும்பு வீதியில் Pizza Hut உணவகத்தில் இருந்து 10 நிமிடத்தில் நடந்து செல்லலாம். லொறிகள், பஸ் நிறுத்தக்கூடிய தரிப்பிடம் கட்டப்பட்டுள்ளது. காணிக்கு அண்மையில் சர்வதேசப் பாடசாலை, கோயில், கிறிஸ்தவ தேவாலயம், பள்ளிவாசல், பிரபல ஆஸ்பத்திரி என்பன அமைந்துள்ளன.

**தொடர்பு: 0770780395**

## மணமகள் தேவை

1975 பூரட்டாதி 4ஆம் பாதம் பிறந்த சவூதியில் Sponsor செய்யக்கூடிய நிலையில் Asst. Accountent ஆகப் பணிபுரியும் மணமகனுக்குப் பொருத்தமான மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.

**தொடர்பு:** kvijay0990@gmail.com

## வாடகை

யாழ். வீதி, சுன்னாகத்தில் தற்பொழுது ஐங்கரன் Fancy யாக இயங்கிவரும் கடை வாடகைக்குக் கொடுக்கப்படும்.

**தொடர்பு: 0773596961**

## வாகனம் விற்பனைக்கு

Nissan Atlas - 226-4XXX டிறக் றக வாகனம் விற்பனைக்கு உண்டு. விலை - 9,25000 ரூபா

**தொடர்பு:** 0773763122
0771308767

## காணி விற்பனைக்கு

தாவடியில் 4 பரப்பு வீடு கட்டக் கூடிய தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:** UK - 00447706050360
கொழும்பு - 0775486570

## வீடு காணி விற்பனை

தாவடி, மானிப்பாய் வீதியில் 1½ பரப்புக் காணி வீடுடன் விற்பனைக்கு உண்டு. தாவடிச் சந்தியில் இருந்து ½km தூரத்தில் உள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்- 0775059053 (தாவடி), 0775486570 (கொழும்பு)

## மணமகள் தேவை

29 வயதுடைய 5' 10" உயரமுள்ள அமெரிக்கக் குடியுரிமையுள்ள அழகான மகனுக்கு பெற்றோர்கள் மணமகளைத் தேடுகின்றனர்.
அவர் CISஇல் Master's Degree உள்ளவர். IT துறையில் நல்ல வேலையில் உள்ளார்.
மணமகள் ஒரு மருத்துவர் அல்லது பல் மருத்துவப் பட்டமுள்ள மெல்லிய அழகானவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**தொடர்பு: சிறி 0019546756883**

## காணி தேவை

கிளிநொச்சி நகருக்கு அருகில் கொங்கிறீற் Pat phing Plant அமைப்பதற்கு (1-2) ஏக்கர் காணி பிரதான வீதியில் இருந்து (A-9) 10Km உள் விலைக்குத் தேவை.

**தொடர்பு: 0718694029**

## குத்தகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் கஸ்தூரியார் சந்திக்கு அண்மையில் 5 பரப்பு வெற்றுக் காணி குத்தகைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:
0773510511**

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இரத்தினம்மா



சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி இரத்தினம்மா நேற்று (15.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சம்பியன் லேன்,*
*கொக்குவில்.*
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மருதலிங்கம் இராசையா

(சோதிடர்)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு, வராகி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட மருதலிங்கம் இராசையா நேற்று (15.01.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கௌசலாதேவியின் அன்புக் கணவரும் பாமினி, யசோதினி, நிமலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பஞ்சாட்சரம், செல்வானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்து எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*வராகி கோயிலடி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
### செல்லம்மா கணபதிப்பிள்ளை
(செல்லக்கா - அச்சுவேலி)

இனித்திருக்க வந்தது
14-10-1920

நினைத்திருக்கச் சென்றது
17-12-2010

சென்றிடும் நாள்களின் எண்ணிடும் நாள்களில்
நின்றிடும் அம்மாவே என்றென்றும் எம்மனங்களில்
கன்றுகள் போல நாம் சென்றிட்ட தாய்முகத்தினை
என்றினி நம்பிடம் பெய்துவாய் என ஏங்குகின்றோம்
வாழும் பொழுதினில் நாமும் நினைத்திட
நாளும் நலந்தந்த அன்னையே!
நீளும் உலகினில் சேரும் நம் உறவுக்கு
நீதான் என்றும் நம் தெய்வம்!
சூழும் பொழுதெல்லாம் வாழும் நினைவதால்
தாயே நீயே எம் மனத்திலே!
நாளும் ஓடியே மாறும் தினம்தினம் – ஆயினும்
மறவா நினைவதாய் தாயே நம் மனந்தினம்.


எங்கள் குடும்பத்தலைவரின் மறைவு அறிந்து இல்லத்துக்கு வருகை தந்தவர்களுக்கும், அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு உதவிகள் வழங்கிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வளாய் மேற்கு,
அச்சுவேலி.

பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
1921
.
09
.
15



விண்ணில்
2010
.
12
.
19

### சின்னையா சுப்பிரமணியம்

கடந்த 19.12.2010 அன்று எமது குடும்பக் குல விளக்கு இறைபதமடைந்த செய்தி கேட்டு ஓடி வந்து உதவிகள் பல புரிந்து உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் தொலைபேசி ஊடாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி ஊடாக இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (16.01.2011) ஞாயிற்றுகிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது அஸ்திக் கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், 18.01.2011 செவ்வாய்க்கிழமை வீட்டுக்கிருத்தியக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் எமது இல்லத்தில் நடைபெற்றுத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை வீதி,
நாவற்குழி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஷீர் சேகு தாவுத், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா மற்றும் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத் தில் முன் கொண்டு மதிப்பிடப் பட்டதன் பிரகாரம் 18 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள் ளன.

அந்த வீடுகளைப் புனரமைப்பதற் காக 45 மில்லியன் ரூபா உடனடியாக ஒதுக்கப்பட்டுவதாக அமைச்சர் பஸில் மாநாட்டில் அறிவித்தார். ஏனைய வீடுகளின் மதிப்பீடு பூர்த்தி யானதும் மேலும் நிதி ஒதுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் குழுவினர் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று மக்களின் நிலைமையை ஆராய்ந்தனர். (ஒ-ஐ)

## தமிழ்க் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேசமயம் நான்கு கட்சிகளின் தலை வர்களும் ஒன்றுகூடி நேற்று கலந் துரையாடிய பின் இதுவரை நடந்த பேச்சுக்கள் தொடர்பாக அறிக்கை ஒன்றை ஆனந்த சங்கரி நேற்று மாலை விடுத்தார்.அறிக்கை வெளியிட்ட கையோடு சங்கரி இந்தி யாவுக்குச் சென்றுள்ளார்.

அறிக்கை விவரம் வருமாறு:-

தற்பொழுது தமிழ் மக்கள் எதிர்நோக் கும் பெரும் துன்பங் கள், அவலங்களுக்கு தீர்வுகாண வேண்டுமாயின் தமிழ்க்கட் சிகள் அனைத்தும் ஓரணியில் திரளவேண் டியது அவசியம் என்பதனை நாம் உணர்ந்துள்ளோம். அதன் அடிப்படையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் அதன் மூலம் பலமிக்கதொரு அழுத்தத்தை நாம் அரசுக்கு கொடுக்க முடியும் என்றும் கருதுகிறோம். அதற்கு அடித்தளமாக பல வேறு குரோதங்களையும் மறந்து எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் அனைத்து தமிழ்க்கட்சிகளையும் ஒன்றி ணைத்து போட்டியிட்டால் அது பெரும் பயனளிக்கும் என்ற நம்பிக்கையில் தமிழ்க்கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமைக் காக ஈடுபட்ட அனைவருக் கும் தமிழர் விடுதலைக் கூட்டணி முழு ஒத்துழைப்பையும் வழங்கி வந்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் ஈழமக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடு தலை முன்னணி மற்றும் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு ஜனவரி முதலாம் திகதி கொழும்பில் கூடி தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் இணைத்து ஒரு கூட்டணி அமைத்து எதிர் வரும் தேர்த லில் போட்டியிடவேண்டியதன் அவசி யத்தைத் தீர்மானித்தோம். இது தொடர் பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப் புடன் பேசுவதாயும் ஈ.பி.டி.பி. மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் அழைப்பு விடுவதெனவும் தீர் மானித் தோம். அதனடிப்படையில் ஈ.பி.டி.பியுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் ஆர்வம் காட்டாமையினால் பேச்சு வார்தை இடம்பெறவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடன் முதற் கட்டமாகசித்தார்த்தனும் பின்னர் சிவாஜிலிங்கமும் பேச்சு வார்த்தை நடத்தினர். இதில் பல காத்திரமான உடன்பாடு களில் ஆர்வம் காட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து 14ஆம் திகதியன்று நான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் பேசினேன். தமிழ் மக்களின் துயரமான நிலைமைகளையும் தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான ஒன்று மையையும் வலியுறுத் தியது மட்டுமல் லாது தமிழரசுக் கட்சியின் பெயரையும் அதன் சின்னமான வீட்டுச் சின்னத்தையும் அனைவருக்கும் பொது வானதாகவும் ஏற்க நாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்தேன்.

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது எமது மக்களுக்கு அவசியமானது ஒன்று என்பது மட்டுமல்ல, இன்று அதற்கான நிலை மைகளும் உருவாகியுள் ளன. இதைத் தவறவிடுவது தமிழ்மக்களுக்குச் செய் யும் பெரும் கேடாக அமைந்துவிடும் என்பதனை அனைத்துத் தரப் பிற்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தேர்தலில் நான் ஒரு வேட்பா ளராக எந்த ஒரு உள் ளூராட்சி மன்றத்துக்கும் போட்டியிடப்போவதில்லை என்பத னையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓரணியாகவும் ஏனைய தமிழ்க்கட்சிகள் இன்னொரு அணியாகவும் போட்டியிடுவது தமிழ்மக்களுக்கு நல்லதல்ல என்பதனையும் உணர்ந்து தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பினர் விரைந்து எமக்கு தமது முடி வினைத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கின்றேன் - என்றுள்ளது. (ஒ-ஐ)


### கைமாறிய பயணப் பை

13.01.2011 இரவு கொழும்பில் இருந்து வந்த N.C.G. பருத்தித்துறை பஸ்ஸில் கொடிகாமத்தில் வ்ழிமாறும் போது இரத்தினம் சுகனியா என்பவரது பயணப்பை தபால் அடையாள அட்டையுடன் தவறிவிட்டது. 20.01.2011 பரீட்சைக்கு தபால் அடையாள அட்டை தேவைப்படுவதால் கைமாறி எடுத்துச்சென்றவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது முதலைக்குழி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ள தொலைபேசி இலக்கம்
0777847583



### அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மயிலிட்டி வடக்கு பாரதி சனசமூக நிலைய வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு 2909
2 ஆம் பரிசு 1465
3 ஆம் பரிசு 1046

ஆறுதல் பரிசுகள்

1. 063
2. 379
3. 2549
4. 1276
5. 1527

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
ப.காந்தராசா (காந்தன்)
சைக்கிள் கடை, மருதனார் மடம் சந்தி.


## காட்டுத்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது வீடுகளை விட்டும் வெளியேறினர்.

நள்ளிரவுக்குப் பின்னர் இரவு இரண்டு மணியளவில் இந்த வதந்தி பரவத் தொடங் கியதும், விழுந்தடித்துக் கொண்டு கரை யோரங்களில் வாழ்ந்த மக்கள் வெளி யேறி மேட்டுப் பகுதிகளை நோக்கி யும் தமது உறவினர் வீடுகளுக்கு இடம் பெயர்ந்தனர்.

இரவு முழுவதும் பீதியுடன் தூங்காது விழித்திருந்த மக்கள் விடியும் வரை காத்திருந்து பின்னர் தமது வீடுகளைச் சென்றடைந்தனர்.

இதேவேளை, நேற்று சனிக்கிழமை காலநிலை சீரடைந்து காணப்பட்ட போதும், இடையிடையே வானம் இருண்டு தூறல் மழையும் பெய்தது.

அம்பாறை மாவட்டத்தில் பெருக் கெடுத்த வெள்ளம் படிப்படியாக வடிந்து வருகின்ற போதிலும் பல கிராமங் களின் தாழ்ந்த பிரதேசங்களில் வெள் ளம் வற்றாது தேங்கி நிற்கின்றமையால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலம் தொடர்ந்த வண்ணமே உள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஒ -30)

## ஜனாதிபதி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கலந்துகொள்ள விருக்கிறார்.

அந்நிகழ்வில் வைத்து சிவாச்சாரி யார்களுக்கும் கலைஞர்களுக்கும் ஜனாதி பதி வேட்டிகளை வழங்கவிருக்கிறார். பல்கலைக்கழகத்துக்கு தெரிவான 100 மாணவர்களுக்கு மடிக்கணினிகளையும் ஜனாதிபதி வழங்கவிருக்கிறார்.

பௌத்த, இந்து ஆலயங்களுக்கும் ஜனாதிபதி சென்று வழிபாடுகளில் கலந்துகொள்வார். (ஒ-ஐ)

## கிழக்கில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லற்படும் மக்களுக்கு உதவ சகலரும் முன்வந்துள்ள நிலையில் யாழ்ப் பாணத் தில் கோலாகலமாக களியாட்ட விழாவாக பொங்கல் தினத்தை கொண் டாடுவது அவசியமானதா? வடக்கில் இப்படி விழா கொண்டா டுவதுமன்னிக்கமுடி யாத விடயமாகும்.

1913ஆம் ஆண் டுக்குப் பின் இடம் பெற்றுள்ள பேரழி வில் இருந்து மக் கள் மீளாத நிலை யில் களியாட்டம் தேவை தானா?

இனவாதப் போக்கை மீண் டும் ஒரு முறை அரசு நிரூபித்துள் ளது. பொல நறுவை வரை சென்ற ஜனாதிபதி மட்டக் களப்புக்கு செல் லாமல் தவிர்த்தது ஏன்?

78ஆம் ஆண்டு சூறாவளியால் பேரனர்த்தம் ஏற் பட்டபோது அப் போது பிரத மராக இருந்த பிரேமதா ஸவும் அம் பாறை, பொலநறு வவுக் குப் போனார். ஆனால் மட்டக் களப் புக்கு செல்ல வில்லை. அன்று பிரேமதாஸ செய்த தைத்தான் இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவும் செய்துள்ளார்.

யாழ்ப்பாணத் தில் ஏற்பாடு செய் துள்ள விழாவைரத் துச் செய்து அதற்கு செலவிடும் நிதியை கிழக்கு மக்களுக்கு வழங்கவேண்டும் என்றார் சிவாஜி லிங்கம். (ஒ-ஐ)

## போர்க்குற்றங்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. நிபுணர் குழு இலங்கைக்கு நேரில் சென்று விசாரணை களை நடத்தும் என்று பான் கீ மூன் கடந்த டிசெம்பர் மாதம் 17ஆம் திகதி அறிவித்திருந்தார். இது தொடர்பில் நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொண்ட ஜனாதிபதியையும் அவர் பாராட்டினார். எனினும் ஐ.நா. நிபுணர் குழு விசாரணைகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்படாது என்று இலங்கை அரசு திட்டவட்டமாகத் தெரிவித்தது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்பாகச் சாட்சியம் அளிக்க மட் டுமே அதற்கு அனுமதி அளிக்கப்படும் என்றும் தெரிவித்தது.

ஆனால், ஐ.நா. நிபுணர் குழு எப்போது இலங்கை வரும் என்ற திகதி முடிவு செய்யப்படவில்லை. இதற்கிடையில் இலங்கையில் இல்லாமல் வேறொரு நாட்டில் இரு குழுக்களும் சந்தித்துப் பேச்சு நடத்தலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இலங்கைக்குச் செல்வதற்கான திகதியை இறுதி செய்வதில் நிபுணர் குழு மும்முரமாக இருப்பதாக ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் தெரிவித்தார்.

'இன்னர் சிற்றி பிரஸ்' எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக் கையிலேயே அவர் இப்படிக் கூறினார். ''இலங்கைக்குச் செல் வதற்கான திகதிகளை இறுதி செய்வதில் நிபுணர் குழு மிக மும்முரமாக ஈடுபட்டுள்ளது'' என்றார் அவர்.

தொடர்ந்து, ''கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்பாகத் கருத்துத் தெரிவிக்க மட்டுமே முடியும்; விசாரணைகள் எதனையும் நடத்த முடி யாது என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளதே'' என்று 'இன் னர் சிற்றி பிரஸ்' கேள்வி எழுப்பியது. பதிலளித்த செயலாளர், ''அவர்களால் அதனைச் (விசாரணை) செய்ய முடியும்... அது குறித்துக் கலந்துரையாடி வருகின்றார்கள்'' - என்றார். (உ)

## இயல்பு.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

சில ஆலயங்கள் துப்புரவு செய்யப்பட்டு பிராயச்சித்த அபிஷேகம் இடம் பெற்று, பொங்கலுக்காக விசேட பூசை கள் இடம்பெற்றன.

வீடுகளில் தங்கியிருந்தவர்கள் வீடுகளுக்குள் பொங்கல் பொங்கி சூரிய வழிபாட்டில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

பொலநறுவ ஊடாகவும் அம்பாறை ஊடாகவும் பொருள்கள் நகருக்கு எடுத்து வரப்பட்டதால் பொருள்களின் விலைகள் ஓரளவு சரிந்து காணப்பட்டது.

வழமையான இயல்பு நிலை திரும்ப இன்னும் ஒரு வாரம் செல்லும் என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-ஐ)


### 16 ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியை

சீவனாய்
17 - 02 - 1920

சிவமாய்
01 - 01 - 2011



சிவமாய சிவபூசாதுரந்தரர்

வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

அப்புக்காய் தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கும்

(108362)

'எபநேசர்'
செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகரில் முதல்முறையாக AMI முறையிலான Nurserry............

Trillium MONTESSORI
"Our Students Bloom"

2011 தை 20 முதல் ஆரம்பம்

- Dr Montessori ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விமுறை
- சிறுவர்களுகான சிறந்த வகுப்பறை வசதி (Special Material Avilable)
- அனுபவம் மிக்க AMI Diploma holder ஆசிரியரினால் வகுப்புக்கள் நடத்தப்படும்
- ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலமான கற்கைநெறி

2 ½ வயது முதல் 5 வயது வரையான குழந்தைகளுக்கானது.

அனுமதிகளுக்கு முந்துங்கள்

மேலதிக விபரங்களுக்கு....

திருமதி பி பிரதாயினி AMI (Dip),BSc (Teaching Tech)
இல 45, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

வடபகுதி நெற் செய்கையாளரே...!

"நெல் எரிபந்தம்"

நோய்க்கு BAYER இன் ஒரே தீர்வு




பொலிகர்
EW 250

HAYLEYS AGRO
ஹேலீஸ் அக்ரோ காட்சியறை
72, ராஜா பிளாஸா, கோண்டாவில்.
0777 594992 / 0777 288337

The World Of Hayleys Since 1878
ஹேலீஸ் காட்சியறை
47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 2221292

பீடைநாசினிகள் ஆபத்தானவை அவதானமாக கையாளவும்.

## ஓகன் இசை அரங்கு

கலாபூஷணம் எஸ்.பொன்னுத்துரையின் மாணவர்களான செல்விகள் துவாரகி சுரேஷ்குமார், சதுர்சிகா சதீஸ், சுபோதினி சிவகுமார், மயூரதி சுரேஷ்குமார் ஆகியோர் இணைந்து வழங்கும் ஓகன் இசை அரங்கு இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும் இந் நிகழ்வுக்கு யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் சி.குமாரவேள் தலைமை வகிப்பார்.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகள், செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(ஓ-55)

பொருளியல்

NB. கஜிதரன்
A/L 2011
அரச
பொருளாதாரம்
ஆரம்பம் :
14.01.2011
மாலை 5 மணி

BPI
குருநகர்

கடையும் வீடும் விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள கடையுடன் சேர்ந்த வீடும் காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
Te.No
0718454025

வாகனப் பெயின்ற்

30 வருட தொழில் அனுபவமுடையவரால் தங்கள் வாகனங்களுக்கு தரமான முறையில் பெயின்ரிங் செய்து கொடுக்கப்படும்.
பெயின்ரர் துரை
இல.05, செபஸ்ரியன் றோட்,
குருநகர், யாழ்ப்பாணம்.

கணக்கீடு

திரு.பாலகஜன்
A/L 2011
A/L 2012
கட்டுப்பாட்டுக் க/கும் இருப்பும்
ஆரம்பம் :
17.01.2011
(மாலை 4.30 மணி)
BPI
குருநகர்

2011ஆம் ஆண்டுக்கான கணினிவகுப்புக்கள் ஆரம்பம்
Computer Course

| | | |
|---|---|---|
| ✱Diploma In Ms office | - | 2 Months - 2500 |
| ✱Desktop Publishing | - | 2 Months - 3000 |
| ✱Diploma In Hardware | - | 2 Months - 3000 |
| ✱Diploma In Web Design | - | 3 Months - 3500 |
| ✱Diploma In Graphic Design | - | 3 Months - 3000 |
| ✱Certificate In Internet & E-mail | - | 1 Month - 2000 |
| ✱Diploma In Computerized Accounting | - | 3 Months - 3500 |
| ✱Kids Programe | - | 2 Months - 1500 |

- பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான விஷேட பிரிவுகள் ஆரம்பம்.
- உங்களிற்கு விரும்பிய நேரத்தினை தெரிவுசெய்யலாம்.
- எமது நிறுவனத்தில் கணினிக் கற்கையினைத் தொடரும் மாணவர்களுக்கு விஷேட கழிவுடன் கணினி வழங்கப்படும்.

Sky Computers (Pvt) Ltd.
162, Main Street, Jaffna.
T.P. No:- 021-2221417
Today You Learn Tomorrow You Lead

அறுகுப்பா பல்கலைக் கழகம்-இந்தியா
தபால்மூல பட்ட/பட்டபின் படிப்புகள் 2011
க.பொ.த.(உ/த)இல் 3 பாடங்களில் சித்தியுடன்
பட்டப் பாடநெறிகள் 14 / பட்டப்பின் பாடநெறிகள் 24

அரச உத்தியோகத்தர்கள்.
தனியார்துறை உத்தியோகத்தர்கள்.
பல்கலைக்கழகம் நுழையத் தவறியோர்.
பதவி உயர்வை எதிர்பார்ப்போர்
போன்றோருக்காக....

வீட்டில் அலுவலகத்தில் இருந்தவாறே கற்பதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
விண்ணப்ப முடிவுத்திகதி 24-01-2011
மேலதிக விபரங்களிற்கு, 15ரூபா முத்திரையுடன், சுயமுகவரி எழுதப்பட்ட நீண்ட அஞ்சலுறையுடன் உடன் தொடர்பு கொள்க.

SUN BRITISH BUSINESS MANAGEMENT COLLEGE (Pvt) Ltd.
No: 90, Katkuli Vavuniya.

## மரண அறிவித்தல்



### பேரம்பலம் துரைராஜா
(அம்மான்)
(இளைப்பாறிய உ.பர் அதிகாரி, சமூக சேவைகள்திணைக்களம்)

யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பேரம்பலம் துரைராஜா 10.01.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம் - காமாட்சிப் பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற சதாசிவம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, ஸ்ரான்லிக் கல்லூரி) அன்புக் கணவரும், பத்மினி (பப்பி), ஸ்ரீகாந்தா (சிறி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புவனகோபன் (கோபன்), யசித்தா (யசி) ஆகியோரின் அன்பு மாமனும் கரேஸ், பிரதீஸ், யதீஸ், கிரீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணிக்கு லண்டனில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி நந்தினி மோகனதாஸ்,
588/8, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(109046) 00442084237816.

காணி உடனடி விற்பனைக்கு

யாழ்.நகர், ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமையில் பருத்தித்துறை பிரதான வீதியில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
✱குடியிருப்புக்கு/
✱தொழில் நிறுவனங்கள்/
✱வியாபாரஸ் தாபனங்கள்/
✱தொடர்மாடி வீடுகள்
முதலியவற்றுக்கு உகந்தது.
தொடர்பு:-0725305782, 0783088249.

தேவை

பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றிற்கு கணக்காய்வுப் பயிலுநர்கள் (Audit Trainees) தேவைப்படுகின்றார்கள். இதற்கான விண்ணப்பங்கள் Chartered Accountancy, HNDA, AAT பயிலும் மாணவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.விரும்புவோர் சுயவிவரக் கோவையுடன் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| W.S கிருபரட்ணம் அன்கோ | 96, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். |

STUDY and WORK IN UK

அனைத்து மாணவர்களிற்கும் எம் நிறுவனத்தின் ஊடாக இனியபுதுத்திருநாள் வாழ்த்துக்கள்

VISA WITHIN 4 WEEKS

★ G.C.E. O/L உடன், உயர்கல்வியை London இல் தொடர இறுதிச் சந்தர்ப்பம்
★ IELTS கட்டாயம் தேவையில்லை.
★ மிகக்குறைந்த கல்லூரிக்கட்டணங்களுடன் UKBA இனால், அங்கீகாரம் பெற்ற சிறந்த கல்லூரிகளில் சென்று - உங்கள் பட்டப்படிப்பை தொடரலாம்
★ ஆங்கிலம் பேசக்கூடியவர்களுக்கு - மிகவும் இலகுவாக London செல்லக்கூடிய சந்தர்ப்பம்.
★ London இல் ஆங்கிலக்கல்வியை (Advance English) தொடர விரும்புவர்களுக்கு நாம் 100% விசாவை உறுதிப்படுத்தி தருவோம் என்பதை தெரிவித்து நிற்கின்றோம்.
★ விசாவை 100% உறுதிப்படுத்துவதற்கு முன்னர் எவ்விதக்கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது
★ UK உயர்ஸ்தானிகர் நிலையம் (UKBA) மிகவிரைவாக புதிய நடைமுறையை கொண்டுவருவதன் விளைவாக- இன்றே இணையுங்கள்....

★ எம் நிறுவனத்தின் மேலுமொரு சேவை.
London இற்கான Student Visitor / January 10, 2011 இலிருந்து.
★ ஒரு வருடத்திற்கான Visit visaவை சிறந்த சட்ட நிபுணர்களின் வழிகாட்டலிற்கமைய- பெற்றுத்தருவோம் என்பதை- தெரிவித்து நிற்கின்றோம்...

COLOMBO HIGHER EDUCATION CONSULTACY
UK Office: Mr.Haris,
28, College Road, Harrow, HA11 BE, London.

U.SISIL REMINDAS
Contact Now: 077 9265447 (Jaffna)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## 16.01.2011 முதல் 22.01.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறப்பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். கடன் மிகுதிகள் வசூலாகும். ஒன்றுக்கு இரு மடங்காகச் செலவாகலாம். தேவையற்ற அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சிலரிடம் உதவி கேட்கலாம். தேக ஆரோக்கியக் குறைவுகள் இல்லாமல், தெம்பு, உற்சாகமாகச் செயற்படுவீர்கள். மேலும் ஓய்வாக இருக்காமல் தொழில் ரீதியாக ஏதாவது வேலைகளைப் பரபரப்பாகச் செய்து கொண்டிருப்பீர்கள். நிலம், பூமி தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். சகோதரர்களால் ஆதாயம் பெறலாம். கையில் பணப் புழக்கம் அதிகரிக்கும். நெடு நாள்களாக வராமல் இருந்த, பண வரவுகள் வரலாம். சகோதரிகள், உறவுப் பெண்கள், மனைவி வழி உறவுகளில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பொழுதுபோக்கு விடயங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். எதிர்ப்புகள், போட்டிகள் குறையும். தொழில் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். பரபரப்பாகச் செயற்படலாம். உதிரி வரவுகளைப் பெறலாம். குடும்பச் செலவு கூடும்.

### இடபம்

உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரும். விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு உண்டு. விருந்து, விசேடங்களால் சந்தோஷம் அடைவீர்கள். குடும்பத்தினரின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். எதிர்பார்த்த பண வரவு வந்து சேரலாம். வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். வளர்ந்த பிள்ளைகள் மூலமோ, வேறு வகையிலோ கிடைக்கும் பணத்தால் வசதி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். நீண்ட நாள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். பெரிய மனிதர்களின் நட்பால் ஆதாயம் பெறலாம். வங்கிகளில் கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. கொடுக்கல் வாங்கல்களில் கொஞ்சம் அக்கறை அவசியம். சர்ச்சைக்குரிய பேச்சுக்களையும் தவிர்க்க வேண்டும். கணவன், மனைவி உறவில் பிரச்சினைகள் வரலாம். வாகனங்கள் வழியிலோ, திடீர்ப் பயணங்கள் செல்வதாலோ, பந்தாவுக்காகச் சில காரியங்களைச் செய்வதாலோ பணம் கரையலாம். அதேநேரத்தில் பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிந்து மற்றவர்கள் மத்தியில் பளிச்செனத் தோற்றம் அளிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம், அனுகூலம் பெறலாம். குடும்பத்திற்காகவோ அல்லது தெய்வ வழிபாடுகளுக்காகவோ கணிசமான பணத்தைச் செலவிடலாம். ஊக்கம், உற்சாகம் கூடும்.

### மிதுனம்

கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வேலையாகவோ வெளியூர்ப் பயணம் செல்லலாம். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன், மனைவி உறவில் சச்சரவுகள், வாக்குவாதங்கள் ஏற்படலாம். கூட்டுத் தொழில் புரிவோர் பங்குதாரர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். முக்கிய வேலையாக நீண்டதூரப் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். அதிகமான செலவுகளால் பணப் பற்றாக்குறையைச் சந்திக்கலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகச் சில காரியங்களைச் செய்து விட்டு அவதிப்படுவீர்கள். வாகனங்கள் பராமரிப்பாலும் பணம் கரையலாம். இருந்தாலும், சகோதரர்கள், பங்காளிகள், நிலம், பூமி தொடர்பான விடயங்கள், கடன் பிரச்சினைகள் போன்றவற்றில் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். தொழில் ரீதியான பொறுப்புக்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம்.

### கடகம்

மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, திட்டமிட்ட காரியங்களில் தடை போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். எதிர்பாராத சந்திப்புக்கள் நிகழும். தொழில் ரீதியான அல்லது பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம். உங்களுக்கு வேண்டியவர்களுக்காக மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். வருமானம் அதிகரிப்பதால், கையில் பணப் புழக்கம் அதிகரிக்கும். நெடுநாள்களாக வாங்க நினைத்த சில பொருள்களை வாங்குவீர்கள். பெரிய மனிதர்கள் சிலரின் யோசனைகளைக் கேட்டுச் செயற்படுவதன் மூலம் ஆதாயம் பெறுவீர்கள். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். நெடுநாள்களாக விற்காமல் இருந்த சொத்துக்களை விற்கும் சூழ்நிலை உருவாகும். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெற்றோர் விருப்பங்களை நிறைவேற்றி திருப்தி காண்பீர்கள். முகவர் தொழில் புரிவோருக்கு வருமானம் அதிகரிக்கும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்களாலும் சந்தோஷம் உண்டு. காரிய வெற்றி உண்டு. பணவரவுகளைப் பெறலாம். சுகமான அனுபவங்களைப் பெறலாம்.

### சிங்கம்

தெம்பு, புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். திட்டமிட்ட வேலைகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் ஏமாற்றம் அடையலாம். பயணங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். உடன் பிறப்புக்கள், பங்காளிகள், சகலைகள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் வழியில் உதவிகள் கிடைத்தோ அல்லது நீண்ட நாள்களாகச் சந்திக்காத அவர்களைச் சந்திப்பதன் மூலமோ மகிழ்ச்சி அடையலாம். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. பயணங்கள் அதிகரிக்கும். சொந்த வேலையாகவோ, தொழில் ரீதியாகவோ அடிக்கடி வெளியிடங்களுக்குச் செல்ல நேரிடலாம். சகோதரிகள், பெண் பிள்ளைகள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். விருந்து, விசேடங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். தந்தை, பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். சோர்வு, சோம்பல் ஆள் கொள்ளும். பொழுதுபோக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். பணவரவு உண்டு.

### கன்னி

எதிர்பாராத அல்லது எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். சில வேலைகளைச் சிரமம் இல்லாமல் சுலபமாக செய்து முடிப்பீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தினர் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். வெளியூர்ப் பயணங்கள் செல்ல நேரிடலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களால் சந்தோஷம் அடைவீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பெண்களால் இனிமையான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். தேவையான பணத்தைப் புரட்டிக்கொள்வீர்கள். நீங்கள் கேட்காமலேயே சிலர் உதவி செய்யலாம். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட மனக்கசப்புகள் விலகி, பாசம் அதிகரிக்கும். தெய்வகாரியப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். தாயார் உடல்நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கும் ஆள்படலாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்களால் தொல்லைகளே அன்றி, ஆதாயம் இல்லை. மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். எந்தக் காரியத்தையும் ஒன்றுக்குப் பல முறை யோசித்துச் செய்ய வேண்டும். மறதியால், தண்டச் செலவால் அவதிப்படலாம். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

### துலாம்

பிள்ளைகள் வழியில் திடீர்ச் செலவுகளைச் சந்திக்கலாம். சில விடயங்களில் தெளிவான முடிவுக்கு வர முடியாமல் குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். பணவரவுகளைப் பெறலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத சிலரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பண விடயங்களில் தட்டுப்பாடான நிலைமை தொடரும். நீங்கள் செய்த நன்றியை மறந்து விட்டு, சிலர் சுயநலத்துடன் நடந்து கொள்வதால் எரிச்சல் அடையலாம். கைமாத்தாகவோ, கடனாகவோ கொடுத்த பணம் வராமல் இழுத்தடிக்கலாம். மற்றவர்களுக்காகப் பிணை கொடுப்பதையும் தவிர்க்க வேண்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் குடிகொள்ளும். பெண் பிள்ளைகள், உறவுப் பெண்கள், சகோதரிகள் வழியில் உதவிகள் கிடைக்கும். தந்திரமான, சாமர்த்தியமான பேச்சுக்களால் சில காரியங்களைச் சாதிப்பீர்கள். அரசியல்வாதிகள் மேலிடத்தின் பாராட்டுக்களைப் பெறுவர். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். மாற்று மொழி பேசுவோரால் சில நன்மைகள் அடையலாம். இருந்தாலும், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் தொல்லைகள், சிரமங்கள் உண்டு. அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். கவனம் அவசியம்.

### விருச்சிகம்

உறவினர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பணவரவுகள் வந்தாலும், அது மற்றொரு வகையில் செலவாகும். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பற்றாக்குறை நிலைமை அகலும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதிச் சில நல்ல காரியங்களைச் செய்வீர்கள். சொத்து விற்பனை முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சிலருக்கு இந்தவகையில் பெரும் தொகை கிடைக்கவும் வாய்ப்பு உண்டு. புதிய வீடு வாங்க, கட்ட மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கவுரவம் மேம்படும். எந்த விடயத்திலும் புத்துணர்ச்சியுடனும், தெம்புடனும் செயற்படுவீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். உங்களைப் பற்றி மற்றவர்கள் பாராட்டிப் பேச வேண்டும் என்பதற்காகவே சில காரியங்களைச் செய்வீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்களால் சந்தோஷம் உண்டு. தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். எதிர்ப்புகள், போட்டிகள் விலகி ஏற்றம் பெறுவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். உருப்படியான வேலை நடக்கும். சுபச் செலவு கூடும்.

### தனுசு

திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்திற்கு நடக்கும். மற்றவர்கள் செலவில் உங்களின் தேவைகள் நிறைவேறும். வழக்கத்திற்கு மாறாக கடும் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான விமர்சனங்களைச் சந்திக்கலாம். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். மற்றவர்களால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம். வரவுகள் வந்தாலும், அதற்கேற்ற செலவுகள் உண்டு. பூர்வீக சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்ந்து, அதனால் ஆதாயம் பெறலாம். எதிர்பாராத வகையில் சில நல்ல காரியங்கள் நடக்கலாம். மற்றவர்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் இழுத்தடிக்கலாம். அரசியல்வாதிகள் அலைச்சல், சிரமங்களுக்கு ஆள்படலாம். தந்தையுடன் வாக்குவாதங்கள் ஏற்பட்டு மனஸ்தாபம் உண்டாகலாம். மற்றவர்கள் மீது அவ்வப்போது எரிந்து விழும் சூழ்நிலை உருவாகலாம். தேக ஆரோக்கியத்திலும் அக்கறை அவசியம். விருந்தினர்கள் வருகையால் செலவுகள் கூடும். பொழுதுபோக்கு விடயங்கள், குடும்பத்துடன் வெளியூர்ப் பயணங்கள் செல்வது, சகோதரிகள் வீட்டு நல்ல காரியங்களுக்குக் கொடுத்து உதவுவது போன்றவகையில் செலவுகள் உண்டாகும். வேலை நெருக்கடிகள் தொடரும். மந்தம், மறதியால் அவதியுண்டு. உடல் உபாதைகளுக்கு ஆள்படலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும்.

### மகரம்

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். திட்டமிட்ட பயணம் செல்லலாம். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்கு வரலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சிலர் வழியில் எதிர்பாராத உதவி கிடைக்கலாம். புதியவர்களின் சந்திப்பு நிகழும். தந்தை, மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் செலவுகள், சிரமங்கள் உண்டாகலாம். அவர்களை நம்பி ஒப்படைத்த காரியங்கள் முடிவடையாமல் இழுபறியில் முடியலாம். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். அரசியல்வாதிகளை நம்பி இறங்கிய காரியங்கள் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். மாற்று மொழி பேசுவோர் வகையில் தொல்லைகளே அன்றி, ஆதாயம் இல்லை. விலை உயர்ந்த பொருள்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். வெளியூர்ப் பயணங்கள் மூலம் முக்கிய காரியங்கள் முடிவுக்கு வரலாம். சிறிய விடயங்களுக்குக் கூடப் பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். தாயார் வழியில் உதவி கிடைக்கும். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல் உண்டு. தண்டச் செலவு நேரும். குழப்பம், தடுமாற்றம் உண்டாகும்.

### கும்பம்

மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். எதிர்பார்த்த காரியங்கள் மட்டுமின்றி, எதிர்பாராத சில காரியங்களும் நடக்கலாம். பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். திட்டமிட்டபடி காரியங்கள் நடக்காமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். அடுத்து நடைபெற உள்ள சில காரியங்களுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். செலவுகள் குறைந்து சேமிப்புகள் அதிகரிக்கும். சிறுகச் சிறுகச் சேமித்த பணம் கணிசமாகக் கிடைத்து, கடன் ஒன்றைத் தீர்க்கும் வாய்ப்பு உருவாகும். வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். கணவன், மனைவியர் இடையே பிரச்சினைகள் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். தொழில் ரீதியாக நீண்ட தூரப் பயணங்கள், வெளிநாட்டுப் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். சகோதரர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். இருப்பினும் பொலிஸ் தொடர்பான விடயங்களில் தொல்லை உண்டு. நிலம், பூமி விவகாரங்களும் அலைச்சல்கள், செலவுகளை உண்டாக்கலாம். பணவரவுகளைப் பெறலாம். மற்றவர்கள் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள்.

### மீனம்

மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம். தெய்வ வழிபாடுகளில் ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். புதிய அனுபவங்களைப் பெறலாம். வீட்டில் உள்ளவர்களுடன் அல்லது சக ஊழியர்களுடனோ ஈகோப் பிரச்சினைகள் உருவாகலாம். எதிர்பாராத வகையில் சில விடயங்கள் நடக்கலாம். மதிப்பு, கௌரவம் மேம்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். தொழில் ரீதியான ஆதாயங்கள் அதிகரிக்கும். சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டம் கைகூடி வரலாம். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான மின்சாதனங்கள் வாங்கலாம். எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைக்கலாம். தேக ஆரோக்கியமும் திருப்தி தரும் வகையில் இருக்காது. அடிக்கடி ஏதாவது சிறு உபாதைகள் ஆள்கொள்ளும். கணவர் அல்லது மனைவியின் செயற்பாடுகளும் உங்களின் ஆதங்கத்தையும், அதிருப்தியையும் அதிகரிக்கவே செய்யும். கூட்டுத் தொழிலிலும் பிரச்சினைகள் உண்டாகும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள், தந்தை தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு. பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றைய பெண்கள் தரையில் போட்டது கோலம் இன்று அவர்களின் வாழ்க்கை அலங்கோலம்





மார்கழி மாதம் என்றால் கோலத்திற்குத் தனிச் சிறப்பு. கண்ணபிரான், மாதங்களில் நான் மார்கழி என்று அந்த மாதத்தின் சிறப்பைச் சொல்லியுள்ளார் கண்ணபிரான். இறைவனைத் தொழுவதற்காக சிறந்த மாதமாகவும் மங்கையர்களுக்குரிய மாதமாகவும் இதைக் கூறுகிறார்கள். உலகச் செயல்களைத் தொடங்குவதற்குப் பரா சக்தி உள்ளிட்ட ஒன்பது சக்திகள் உறக்கம் நீங்கி நீராடிப் புகழ்பாடிய நிலையை மனதில் எண்ணி மகளிரும் வைகறையில் எழுந்து நீராடிப் பாடிய காட்சியை கூறுகிறார்.அதிகாலை எழுந்த பெண்கள் கை, கால்களை அசைத்து இடுப் பை வளைத்துப் பெருக்கித் தெளித்துக் கோலம் போடும்போது தேவர்கள், முனிவர்களிடமிருந்து ஆற்றல்களும் ஆசிகளும் கிடைக்கும். அந்தக் காலத்தில் அரிசி மாவால் வீட் டின் முற்றத்தில் பெண்கள் பலவகை இயந்திரவுருக்களால் தான் கோலம் போடு வது தீயசக்திகள், தீயதேவதைகள் வீட்டினுள் வருவதைத் தடுக்கும் என்ற நம்பிக்கையில் காலை விடியும் முன் வாசல் தெளித்துக் கோலம் போடு, இருள் பிரியும் முன் கோலம் போடு, சூரியன் வருவதற்கு முன் கோலம் போடு, என்று பெரியவர்கள் சொல்லிக் கொண்டே இருப் பார்கள். யாராவது வீட்டை விட்டு அதி காலையில் வெளியில் போவதாய் இருந் தால் அவர்கள் போவதற்கு முன் வாசல் தெளித்துக் கோலம் போடு, அவர்கள் போன பின் தெளிக்காதே என்றெல்லாம் கூறுவார் கள். கோலங்கள் வெளியில் செல்வோருக் கும் பாதுகாப்புத்தரும் என்பதற்காகவே அவ் வாறு கூறுகின்றனர். பெண்களுக்குமன ஒருமைப்பாடு இருந்தால் தான் புள்ளிகளைச் சரியாக இணைத்துக் கோலம் போடமுடியும். இல்லை யென்றால் கோலம் அலங்கோலம் தான். இன்றைய பெண்கள் மத்தியில் ஒருமைப்பாட்டுடளும் சந்தோசத்துடனும் இருப்பவர்கள் எத்தனைபேர்? இப்போது எல்லாம் மாறி விட்டது எல் லோரும் ஓட்டம், ஓட்டம், தான் நின்று நிதானித்துப் பேச நேரமில்லை. இந்தப் பூவிற்கு இந்த நிறம் கொடுத்து இருக்கலாம் என்று அபிப்பிரா யங்கள் சொல்ல எவரும் இல்லை. பார்வையாளர்கள் அற்ற விளையாட்டுத்திடலில் விளையாடுவது போல் உள்ளது இன்றைய நிலை. காலஓட்டத்தில் எதையும் நின்று ரசிக்க முடியாதபடி பெண்கள்நகர்ந்து கொண்டே இருக்கின்றன. இவ்வாறு செய்வ தனால் நமது பெண்களிடம் உள்ள கலாச் சாரம் மருவி வருகின்றது என்றே கூறலாம். மார்கழி மாதத்தின் முடிவு நாளான தைத் திரு நாள் அன்று அரிசிமாவினால் கோலம் போடு வதன் முக்கிய நோக்கம் யாதெனில் எறும் புகள் மற்றும் சிறிய ஜீவராசிகளுக்கு அன் றையதினம் உணவு சிறப்பாகக் கிடைக் கவும் அவர்களிடம் தாம் பரிவு காட்ட வேண்டும் என்பதற்காகவும் ஆகும். அதுமட்டமல் லாமல் சுழிக்கோலம் போடுவது வாழ்க்கை சுகம், துக்கம் இரண்டும் இணைந்தது என்பதையும் சுழிகளைப்போல் துன்பம் வந்தாலும் திடமாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. இன்றைய தைப்பொங் கலைப் பொறுத்தவரையில் எமது பெண் களுடைய மனம்தான் பொங்கிக் கொண்டிருக்கின்றது. அவர்களின் வீடுகளில் அல்ல. இன்றைய நிலை மாறவேண்டும். அவர்க ளுக்கு இவ் வருடம் சிறப்பாக அமைய வேண்டும்.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aayanaham.org

# அழகுக்குத் தேவையான காலை உணவு

சிவப்பு அழகு வேண்டுமா? என்று கேட்டு எத்தனையோ வகையான கிறீம்கள் விளம்பரம் செய்யப்படுகின்றன உடற்பயிற்சியே செய்யாமல், நொறுக்குத் தீனிகளையும் கைவிடாமல், உடல் எடை குறையும் என்றுகூறி விதவிதமான மாத்திரைகள்- தைலங்கள் விற்பனையா கின்றன! எப்போதும் ஒலி- ஒளிபரப்பாகும் அழகுக் குறிப்புகளைப் பார்த்து, அதை அரைகுறையாகக் க்டைப்பிடித்து அழகிகளாக வேண்டும் என்று பெரும்பாலான பெண்கள் விரும்புகிறார்கள். அப்படி ஆசைப் படுகிறவர்களுக்குத் தமது உடலில் இருக்கும் ஒரு பிரதான உறுப்பே அழகு, ஆரோக்கியத்தின் ஊற்று என்பது தெரியுமா? மனித உடல் பஞ்ச பூதங்களால் ஆனது. மனித உடலில் இருக்கும் பஞ்ச பூதங்கள் பிரபஞ்ச சக்தியிலிருந்து தனக்குத் தேவையான பஞ்ச பூத சக்தியை வாங்கி உடலைப் புதுணர்ச்சியுடன் வைத்துக் கொள்கின்றன. எப்படி யென்றால்...நம் தோலுக்கடியில் மிகத் துல்லியமான பாதை ஒன்று உள்ளது. இதை உயிர்ச்சக்திப் பாதை என்று கூறுவார்கள். இதன் வழியேதான் பஞ்ச பூத சக்தி ஊடுருவிச் சென்று உறுப்புகளைச் சேரும். ஒவ்வொரு உறுப்புக்கும் ஒவ்வொரு நேரத்தில் மட்டுமே இந்த உயிர் சக்தி பிரதானமாய் செல்லும். உதாரணமாக நுரையீரலுக்கு அதிகாலை 3 - 5 மணி, மண்ணீரலுக்கு காலை 9-11 மணி. இப்படி ஒவ்வொரு உறுப்புக்கும் குறிப்பிட்ட நேரம் வகை செய்யப்பட்டிருக்கிறது.நாம் உண்ணும் உணவு ஜீரணம் ஆவதற்கான செரிமான செயலாக்கம் வயிற்றில் மட்டுமே நடைபெறுவதில்லை. செரிமான செயலாக்கம் ஆரம்பிக்கும் இடம் வாய். வாயில் உள்ள உமிழ்நீர்தான் செரிமானத்திற்கு பெரிதும் துணைபுரிகிறது. உமிழ்நீரில் இருக்கும் நுண் கிருமிகள் உணவில் கலந்து செரிமான வேலையை தொடங்கும். மனிதனின் உடல் பஞ்சபூத கலவை என்பதுபோல நாக்கிலும் பஞ்சபூதங்கள் இருக்கின்றன. இதனால் மிக நிதானமாக நாக்கின் எல்லா பகுதியிலும் உணவுபடும்படி முழுக்கவனம் செலுத்தி மென்று உண்ணுதல் வேண்டும். ஒவ்வொரு பஞ்சபூதமும் ஒரு சுவை யோடு தொடர்பு உடையது. நெருப்பு- கசப்பு சுவையு டனும், மண்- இனிப்பு சுவையுடனும், காற்று - துவர்ப்பு மற்றும் காரச் சுவையுடனும், நீர்- உப்பு சுவையுடனும், ஆகாயம் - புளிப்பு சுவையுடனும் தொடர்புடையது. இவைகளை நாம் புரிந்து கொண்டு சாப்பிட பழகிக் கொண் டால் குறைவாக சாப்பிட்டாலே நம் உடலுக்கு போதுமான சக்தி கிடைத்துவிடும். உதாரணமாக 4 இட்லி சாப்பிடுபவர்களுக்கு 2 இட்லியே போதுமா னதாக இருக்கும். அழகையும், ஆரோக்கியத்தையும் விரும்புகிறவர்கள் காலை உணவை 7-7.30-க்குள் மேலே சொன்ன முறைப்படி நிதானமாக, மென்று சாப்பிட வேண்டும். சமைக்காத உணவுகள், பழங்கள், காய்கறிகள், கரட், வெள்ளரிக்காய் மற்றும் ஊற வைத்த பருப்பு வகைகள் போன்றவைகளைக் காலை உணவில் சேர்க்கவேண்டும். பருப்பு வகைகளை நன்றாக அலசி முதல் நாள் இரவே மண் சட்டியில் ஊற வைக்கவேண்டும். மறுநாள் காலையில் 7 மணிக்கு அந்தத் தண்ணீரைப் பருகிய பின்பு ஒவ்வொன்றாக கடித்து மெதுவாக மென்று சாப்பிட வேண்டும்.

இவ்வாறு சாப்பிட்டால் உடலுக்கு என்ன பலன்?

வயிறு பிரபஞ்சத்திலிருந்து சக்தியை காலை 7 முதல் 9 மணிவரை பெறுகிறது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org